பக்கங்கள் : இருபத்தெட்டு

உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 17 ஞாயிற்றுக்கிழமை (01.01.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 35

கொழும்பு நகரில் பெரும் தேடுதல்!

925 தமிழர்கள் கைது ஆள் அடையாளம் பதிவு

கொழும்பு,ஜனவரி1

தலைநகர் கொழும்பில் நேற்று திடீரென மேற்கொள்ளப்பட்ட விசேட பாதுகாப்பு நடவடிக்கை ஒன்றின்போது பொலீஸாரும் படையினரும் கூட்டாக நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலில் 925 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

பதினைந்து பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலீஸார் ஒரே சமயத்தில் பெரும் எடுப்பில் நடத்திய இந்தத் தேடுதலின் போது கைதானவர்களின் ஆள் அடையாளங்கள் பதிவுசெய்யப்பட்டன. அவர்களில் 56 பேர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

தலைநகரில் பாதுகாப்பு நடவடிக்கையில் துருப்புகள்

புன்னாலைக்கட்டுவனில் படையினர் போர் ஒத்திகை

யாழ்ப்பாணம்,ஜன.1

புன்னாலைக்கட்டுவன் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் படையினர் நேற்று போர் ஒத்திகை ஒன்றில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தும் குண்டுகளை வெடிக்கவைத்தும் இப்பயிற்சி நடவடிக்கைகளைப் படையினர் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒத்திகை நடவடிக்கையால் இப் பகுதிகளுக்கு அண்மையில் குடியிருக்கும் மக்கள் மிகுந்த அச்சத்திற்குள்ளாகினர்.

இப்பயிற்சியின்போது படையினர் பெரும் எண்ணிக்கையான கவச வாகனங்களையும் பயன்படுத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-12)

பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் நாளை ஆரம்பம், மாணவருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.1

யாழ். பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் ஏற்கனவே திட்டமிட்டபடி நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதன்படி பல்கலைக்கழகத்தின் அனைத்துப்பீடங்களின் மாணவர்களும் நாளை முதல் விரிவுரைகளுக்குத் திரும்புமாறு கேட்கப்பட்டிருக்கின்றனர்.

யாழ். பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. யாழ். அரச அதிபர் உட்பட பேரவை உறுப்பினர்கள் பலர் இதில் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகளை ஏற்கனவே திட்டமிட்டபடி நாளை திங்கட்கிழமை

(20ஆம் பக்கம் பார்க்க)

போரா? சமாதானமா? என்பதை சிங்களவரே முடிவு செய்யட்டும்!

'போரும் சமாதானமும்' நூலின் அறிமுக விழாவில் பாலகுமாரன்

கிளிநொச்சி,ஜனவரி1

உலகம் இன்று எங்களை உற்றுப்பார்க்கின்றது. எங்களுக்குரிய காலமும் நேரமும் நெருங்கிவிட்டன. போரா அன்றி சமாதானமா என்பதை இந்தவேளையில் சிங்களவர்களே முடிவுசெய்துகொள்ளட்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் முத்த பிரமுகர் வே.பாலகுமாரன்.

விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியரும் மதியுரைஞருமான அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் அறிமுகவிழா நேற்றுக்காலை கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் வே.பாலகுமாரன் மதிப்பீட்டுரை நிகழ்த்தினார்.

சமகால அரசியல் நிலைமை தொடர்பாக அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

நான்காம் கட்டப் போர் எப்போது என்பதுதான் இன்று எமக்கு முன்னால் எழுந்துள்ள கேள்வியாகும்.

போர்நிறுத்தம் என்பதும் போர் என்பதும் எங்களைப் பொறுத்தவரையில் ஒன்றுதான்.

(20ஆம் பக்கம் பார்க்க)

பாதுகாப்புக் கருதி 50 குடும்பங்கள் வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்தன!

கிளிநொச்சி,ஜன.1

குடாநாட்டில் படை நடவடிக்கைகளால் உருவான அச்ச சூழ்நிலையையடுத்து அங்கிருந்து பாதுகாப்புக் கருதி இடம்பெயர்ந்த சுமார் 50 குடும்பங்கள் வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்திருக்கின்றன.

உழவு இயந்திரங்கள், ஓட்டோக்கள் மற்றும் மினிவான்களில் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு குடும்பமாகப் பலர் இடம்பெயர்வதைக் காணமுடிகின்றது.

முகமாலை இராணுவச் சோதனைச் சாவடி ஊடாகவரும் இந்தக் குடும்பங்களுக்கு இருப்பிடம் மற்றும் வசதிகளைச் செய்துகொடுப்பதற்கான ஏற்பாடுளை விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மட்டும் 50 குடும்பங்கள் குடாநாட்டிலிருந்து வன்னிப்பகுதிக்கு வந்திருக்கின்றன என்று அரசியல் துறையினர் தெரிவித்தனர்.

இராணுவ நெருக்குவாரங்கள் அதிகரித்திருப்பதை அடுத்தே தாங்கள் பாதுகாப்புக்

(20ஆம் பக்கம் பார்க்க)

யாழ். நகரப் பகுதியில் படையினர் சோதனை

யாழ்ப்பாணம்,ஜன.1

யாழ். நகரில் கன்னாதிட்டிப் பகுதியை உள்ளடக்கிய பிரதேசத்தில் படையினர் நேற்றுக் காலை சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதிப் பகுதி

(20ஆம் பக்கம் பார்க்க)

வல்வைக் கடலில் பீரங்கிச் சத்தம்

கரவெட்டி,ஜன.1

வடக்கு கடலில் வல்வெட்டித்துறைக்கு அப்பால் கடலில் நேற்றிரவு தொடர்ச்சியாக பீரங்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டன என்று கரையோரப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நேற்றிரவு 10.30 மணியளவில் இந்தச்

(20ஆம் பக்கம் பார்க்க)

வாசகர்கள், விளம்பரதாரர்கள்,
விநியோகஸ்தர்கள் மற்றும் நண்பர்கள்
அனைவருக்கும் உதயன் குடும்பத்தினரின்
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

அரச, வங்கி அலுவலர்களின் பணிப் புறக்கணிப்பு நிறுத்தம்!

நாளைமுதல் அலுவலகங்கள் திறப்பு;மக்களின் வசதிகருதி இந்த முடிவு

யாழ்ப்பாணம்,ஜன.1

பொதுமக்கள் மீதான இராணுவக் கெடுபிடிகளை ஆட்சேபித்தும், அரச பணியாளர்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துமாறு கோரியும் கடந்த திங்கட்கிழமை முதல் அரச மற்றும் வங்கிகளின் பணியாளர்கள் மேற்கொண்டுவந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் விலக்கிக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஒருவாரகாலம் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பணிப்புறக்கணிப்பு, பொதுமக்களின் அன்றாட வாழ்வு நலனைக் கருத்தில் கொண்டு விலக்கிக்கொள்ளப்படுவதாக தமிழ்த் தேசிய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக கூட்டமைப்பு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 26.12.2005 முதல் அனைத்து அரசாங்க மற்றும் வங்கிப் பணியாளர்களது பணிப்புறக்கணிப்பு தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. ஸ்ரீலங்காப் படையினர் பேரினவாத மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் வகையில் மேற்கொள்ளும் அத்துமீறல்களை நிறுத்தவேண்டும் எனவும், மக்களது இயல்பு வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களால் உரும்பிராயில் இளைஞன் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,ஜன.1

காலைவேளை வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர், பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுத பாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 6.30 மணியளவில் உரும்பிராய் - பலாலி வீதியில் - இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

வயாவிளான், குட்டியபுலத்தைச் சேர்ந்த தச்சுத்தொழிலாளியான யோகலிங்கம் ஜெயசீலன் (வயது 27) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இவர் தாவடியில் உள்ள தச்சு வேலைத் தளத்துக்குச் செல்வதற்காக வீட்டில் இருந்து சிவப்பு நிற 'ஜமஹா மேற்' மோட்டார் சைக்கிளில் பலாலி வீதி வழியே வந்துகொண்டிருந்தபோது அவரைப் பின் தொடர்ந்து ஊரெழுப் பக்கம் இருந்து மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் இருவர் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர்.

பலாலி வீதியில் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கும் பிரதேச சபை அலுவலகத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தலையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது.

மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார். பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்குமாறு அவர் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்தச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற வேளை உரும்பிராய்ப் பகுதியில் படையினரின் சுற்றிவளைப்புத் தேடுதல் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

(ஐ-7-15-17-86-49-154)

உரும்பிராய் பலாலி வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் சுடப்பட்டவர் வீதியில் கிடப்பதையும், மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி.சறோஜினி இளங்கோவன் சடலத்தைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : நேசன்)

துயிலு இல்ல பணியாளர்களுக்கு மிரட்டல்

வடமராட்சி எள்ளன்குள மாவீரர் துயிலும் இல்லத்தின் மேற்பார்வையாளர்களை அங்கிருந்து வெளியேறுமாறு இராணுவத்தினர் அச்சுறுத்தியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் மாலை துயிலும் இல்லப் பகுதிக்குச் சென்ற படையினர் அங்குள்ள பணிமனையில் இருந்தோரை விசாரித்துள்ளனர். (ஐ-70

குருநாகலில் ரயில் மோதி இருவர் பலி!

கொழும்பு,ஜன.1

குருநாகல் ரயில் நிலையத்திற்கு அருகில் ரயில் மோதுண்டு இருவர் உயிரிழந்துள்ளனர்.

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

நேற்று முற்பகல் 11.45 மணிக்கு வர வேண்டிய ரயில் சுமார் ஒரு மணி நேரம் தாமதித்து வந்தபோதே இந்த விபத்து நேர்ந்ததாக குருநாகல் ரயில் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.ஜெயரட்ண தெரிவித்தார்.

விபத்தில் உயிரிழந்த இருவரும் மதுபோதையில் ரயில் தண்டவாளத்தில் அமர்ந்து உரையாடிக்கொண்டிருந்தபோதே இந்த விபத்து நேர்ந்ததாக குருநாகல் பொலீஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி சமன் திஸ நாயக்க தெரிவித்தார். (ஐ-12)

மஹோற்சவம்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தான வைகுண்ட ஏகாதசி திவ்விய மஹோற்சவம் நாளை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இத்திருவிழாவில் எதிர்வரும் 10ஆம் திகதி தேர்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (12-15)

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி குழப்பம் இன்றி ஆரம்பமாகியது!

யாழ்ப்பாணம்,ஜன.1

நடைபெற்று முடிந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணி திட்டமிட்டபடி நேற்று யாழ்ப்பாணத்திலும் ஆரம்பமாகியது.

யாழ்.மத்திய கல்லூரியிலும் வேம்படி மகளிர் கல்லூரியிலும் இந்தப் பணி நேற்றுத் தொடங்கியது.

யாழ்ப்பாணத்தில் நிலவும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இந்தப் பணியில் ஈடுபடுவது தொடர்பாக ஆசிரியர்கள் மத்தியில் குழப்பமான நிலை காணப்பட்டபோதும் நேற்று கணிசமான எண்ணிக்கையானோர் விடைத்தாள் திருத்தும் நிலையங்களுக்குச் சமுகமளித்திருந்தனர். இதனையடுத்து விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி ஆரம்பமாகியது.

விடைத்தாள் திருத்தும் பணிகள் எட்டுத் தினங்கள் நடைபெறவுள்ளன. விருப்பத்திற்குரிய பாடம் தவிர்ந்த ஏனைய பாடங்கள் எல்லாம் குழு நிலையில் மதிப்பீடு செய்யப் படுகின்றன.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு வழமையாக பிற்பகல் 4 மணிக்கு முடிவடையும் பணிகள் தற்பொழுது பிற்பகல் 3 மணியுடன் நிறுத்தப்படவுள்ளன. (ஐ-11)

புத்தாண்டுக் கலண்டர்களில் ஆபாசக் காட்சிகள் வேண்டாம்!

தாயகப் பிரதேசங்களில் விற்பனை செய்வதற்கும், அன்பளிப்புச் செய்வதற்கும் தயாரிக்கப்படும் நாள்காட்டிகளில் ஆபாச உணர்வைத் தூண்டும் படங்களையும் சினிமா நட்சத்திரங்களைச் சித்திரிக்கும் காட்சிகளையும் தவிர்த்துக்கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் கேட்டிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் ஊடகத்துறை இதுதொடர்பான செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்திருக்கிறது.

புத்தாண்டை ஒட்டி வெளியிடப்படும் கலண்டர்களில் சினிமா நட்சத்திரங்களின் பட்ங்கள் மற்றும் பெண்களை ஆபாசமாகச் சித்திரிக்கும் படங்கள் இடம்பெறுவது தடை செய்யப் பட்டிருக்கின்றது.

இவற்றுக்குப் பதிலாக தமிழர் தாயகப் பிரதேசத்தின் இயற்கை எழில் காட்சிகள் மற்றும் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றை எடுத்துக்காட்டும் படங்களை கலண்டர்களில் இடம்பெறச் செய்வது ஆரோக்கியமானது - என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-3)

இந்தியாவின் தமிழகத் தலைநகர் சென்னையில் கடந்த வியாழக்கிழமை ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. இதில் பங்கேற்ற திராவிடர் கழகத் தலைவர் க.வீரமணி, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸ், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வைகோ ஆகியோரையும் மாநாட்டில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் விழா அரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீடுகள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

தொடர் கட்டுரை

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் எழுதும் 'மரண வலி உணரும் மனிதர்கள்' என்ற இயற்கை அனர்த்தங்கள் பற்றிய சிறப்புத் தொடர் கட்டுரையை அடுத்த வார உதயனில் எதிர்பாருங்கள்.

வீட்டுக்குள் புகுந்து அறைகளை கொத்திக் கிளறிய படையினர்!

ஊரெழுவில் இப்படிச் சோதனை

யாழ்ப்பாணம்,ஜன.1

ஊரெழுப் பகுதியிலுள்ள வீடு ஒன்றுக்கு மண்வெட்டிகள், பிக்கான்கள், அலவாங்குகளுடன் சென்ற படையினர் அறைகளுக்குள் புகுந்து கொத்திக்கிளறிச் சோதனையிட்டிருக்கின்றனர்.

கடந்த 23ஆம் திகதி நள்ளிரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றிருக்கிறது.

வீட்டினுள் தேடுதல் நடத்தப்போவதாக வீட்டு உரிமையாளரிடம் கூறிய படையினர், அங்கிருந்தவர்கள் பார்த்துக் கொண்டிருக்க - அவர்களின் கண்முன்னாலேயே - சகல அறைகளையும் கொத்திக் கிளறி நாசப்படுத்தினர். வீட்டு முற்றத்தையும் பிக்கான்களால் உழுது பிரட்டி அசிங்கப் படுத்திவிட்டுச் சென்றிருக்கின்றனர்.

அதற்குப் பிறகு கடந்த 27ஆம் திகதி இரவு குறித்த வீட்டுக்குள் மீண்டும் வந்த படையினர் அங்கிருந்த இளைஞர்கள் இருவரை மிரட்டிவிட்டு அவர்கள் வைத்திருந்த கைத்தொலைபேசிகளைப் பறித்துச்சென்றனர் என்று கூறப்பட்டது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக அச்சுவேலிப் பொலீஸ் நிலையத்திலும் யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(த-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ்கொழும்பு

'போரும் சமாதானமும்' நூல் வெளியீட்டு விழாக் காட்சிகள்.

சு.ப.தமிழ்ச்செல்வன் தேசியக் கொடி ஏற்றுவதை முதல் படத்தி லும் மங்கள விளக்கை வே.இளங் குமரன் ஏற்றுவதை அடுத்துள்ள படத் திலும் காணலாம்.

நிகழ்வில் கலந்து கொண்டோர் அகவணக்கம் செலுத்துவதையும் உரையாற்றிய பிரமுகர்களை..., கலந்துகொண்டோரில் ஒருபகுதி யினரையும் படங்களில் காண லாம்.

(படங்கள்: வசந்தன் , பரந்தன் செய்தியாளர்)

'போரும் சமாதானமும்' நூல் நேற்று கிளிநொச்சியில் சிறப்புற வெளியீடு

கிளிநொச்சி,ஜன.1

விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியரும் மதியுரைஞருமான கலாதிநிதி அன்ரன் பால சிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற விடுதலைப்புலிகளின் போராட்ட வர லாற்றை சித்திரிக்கும் நூல் நேற்று கிளி நொச்சியில் வெளியிடப்பட்டது.

கிளிநெச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்றுக்காலை 10 மணிக்கு தமிழீழ விடுத லைப் புலிகளின் நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ. தமிழேந்திதலைமையில்இடம்பெற்றஇந் நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை அர சியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல் வனும் பொதுச்சுடரினை தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் வெ.இளங்குமரனும் ஏற்றி வைத்தனர்.

தலைமையுரை, அகவணக்கம் என்ப வற்றை அடுத்து நூலின் முதற்பிரதியை வட முனை கட்டளைத் தளபதி வெளியிட்டு வைக்க, மாலதி படையணி சிறப்பு படை யணி சிறப்புத்தளபதி கேணல் யாழினி பெற்றுக் கொண்டார்

தொடர்ந்து நூலின் அறிமுகவுரையை பிர பல அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசும், மதிப்பீட்டு உரையை விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரனும் நிகழ்த் தினர்

இந்நிகழ்வில் நீதி நிர்வாகப் பொறுப் பாளர் பரா, காவல்த்துறை பொறுப்பாளர் பா.நடேசன், 'புலிகளின் குரல் வானொலி' பொறுப்பாளர் தமிழன்பன், மூத்த உறுப்பி னர் யோகரட்னம்(யோகி), கலை பண் பாட்டு கழகப் பொறுப்பாளர் புதுவை இரத் தினதுரை உட்பட துறைசார் பொறுப்பாளர் கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பல ரும் கலந்து கொண்டனர்.

(ஐ-5-3-6-352)

இராணுவ நெருக்கு வாரங்களால்

நகரில் இம்முறை புத்தாண்டு வியாபாரம் களைகட்டவில்லை

யாழ்ப்பாணம்,ஜன.1

படையினர் மீதான தாக்குதல்கள் மற்றும் படையினர் நடத்தி வரும் பதில் தாக்குதல்கள் காரணமாக யாழ்ப்பாணத்தில் இம்முறை புத் தாண்டு வியாபாரம் களைகட்ட வில்லை. இத னால் வர்த்தக வட்டாரங்களில் விரக்தி நிலை காணப்படுகிறது.

இன்று புதிய ஆண்டு பிறந்துள்ளது. இதற் காக மக்கள் பொருள்களை முதல் நாளே கொள்வனவு செய்து விடுவார்கள். இதன் கா ரணமாக வருடத்தின் இறுதி நாள் நகரப் பகுதி வியாபார நிலையங்களில் மக்கள் பொருள் களை வாங்குவதற்காக அலை மோதுவது வழக்கம். ஆனால், இந்த ஆண்டின் இறுதி நாளான நேற்று யாழ். நகரப் பகுதியில் மிகக் குறைந்த எண்ணிக்கையானோரே வியாபா ரங்களில் பொருள்களை கொள்வனவு செய் ததைக் காணமுடிந்தது.

பிற்பகலின் பின்னர் மக்களின் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

பொருள்களை கொள்வனவு செய்ய வந்த மக்கள் அவசர அவசரமாக வீடுகளுக்குத் திரும் பினர்.

இதேவேளை-கறுப்புத் துணிகளால் மு கத்தை மூடி மறைத்தவாறு படையினர் நேற்று முழுநாளும் நகரப் பகுதியில் அடிக்கடி ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட் டருந்தனர். இதனால் மக்கள் அச்சத்துடன் காண ப்பட்டனர்.

(ஐ-)

நீதியும் சமாதானமும் மலர அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்

புதுவருடச் செய்தியில் பாப்பரசர் அழைப்பு

புதிய ஆண்டின் எனது நல்வாழ்த்தானது எல்லா இடமும் வசிக்கும் நல்மனது கொண்ட அனைவருக்கும் சென்றடையட்டும். குறிப்பாக வன்செயல்களாலும் போராட்டங்களா லும் துன்பப்படுவோர்க்குச் சென்றடையட் டும் எனது இந்த புத்தாண்டுச் செய்தியை நம்பிக்கை மிகுந்ததாய் அ மைக்கிறேன். உலகில் இன்னும் தனி நபர்களும் குழுமங்களும் நீதிக்கும் சமாதானத்திற்கும தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் முன்னதாக எமது முன் னோடிகளான ஆறாம் போல் பாப்பரசருக்கும் 2 ஆம் போவான் பவுல் பாப்பரசருக்கும் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கி றேன். அவர்கள் சமானத்தின் தூதுவர்களாய் உலகம் முழுவதிலும் சமாதானத்தை ஏற்படுத்த ஓய்வின்றி உழைத்தவர்கள். எமது முதல் சமாதானச் செய்தியும் அவர்களின் போதனைகளைப் பின்பற்றியதாகவே அமைகிறது. வத்திக்கான் தொடர்ந்தும் சமாதானத்திற்கு உழைக்கும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

பெனடிக்ற் என எனது பெயரைத் தெரிவு செய்யவும் சமாதானத்திற்கான எனது அர்ப் பணமே காரணமாகும். ஐரோப்பாவின் பாதுகாவலராக பெனடிக்ற் விளங்குகிறார். அடுத்து 15 ஆவது பெனடிக்ற் பாப்பரசர் முதலாவது உலகப் போரின் போது போரை வன்மையாகக் கண்டித்து சமாதானத்திற்காக அயராது உழைத்தவர்.

உண்மையின் வழி சமாதானம் என்ற இன்றைய உலக சமாதான தின செய்தி உலகில் மனி தர்கள் எங்கெல்லாம் உண்மையைத்தேடுகிறார்களோ- அங்கெல்லாம் அவர்கள் சமாதானத் தின் வழியில் செயற்படுகிறார்கள் என்ற நம்பிக்கை உடனேயே தரப்படுகிறது.

புதிய ஆண்டு சமாதான ஆண்டாக போர் அச்சம் நீங்கி சமாதான வாழ்வைக் கொண்டு வரும் ஆண்டாக மலரச் செபிப்போம். அனைவர்க்கும் புதுவருட நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

பாப்பரசரின் புத்தாண்டுச் செய்தி பற்றி...

கடந்த 39 வருடங்களாகப் புதுவருடத்தின் முதலாவது தினத்தை உலக சமாதான தினமாகப் பிரகடனப்படுத்தி சமாதான தினச் செய்தியைப் பாப்பரசர் வழங்கிவருகிறார்.

புதிய பாப்பரசர் 16ஆவது பெனடிற் பாப்பரசர் 2006ஆவது ஆண்டின் புதுவருட சமாதா னச் செய்தியை அண்மையில் வழங்கியுள்ளார். பாப்பரசர் ஆகிய பின் அவர் வழங்கும் முதலாவது சமாதான தினச் செய்தி இதுவாகும்.

உண்மையின் வழி சமாதானம் என்னும் தலைப்பில் அவர் வெளியிட்ட செய்தியானது 4 பகுதிகளைக் கொண்டுள்ளது. முதற் பகுதி இறையியல் ஞானக் கருத்துக்களைக்கொண்ட தாக இருக்கிறது. இங்கு சமாதானம் - உண்மை - பொய் என்பவற்றிற்கு இடையிலான தொ டர்பு கருத்து என்பன விளக்கப்படுகின்றன.இரண்டாவது பகுதி போர் பற்றிப் பேசுகின்றது. இங்கு சமாதானம் எப்படி இடம்பிடிக்கலாம் என்பது சொல்லப்படுகிறது.

மூன்றாவது பகுதி சமாதானத்தின் உண்மை தீவிரவாதத்தோடு தொடர்புபடுத்தி விளக்கப்ப டுகிறது.நான்காவது பகுதி சமாதானத்தின் உண்மை அரசியல் நிலையோடு பேசப்படுகிறது.

இன்று எமது நாட்டிலும் உலகம் முழுவதிலும் சமாதானம் ஒரு தேடப்படும் பொருளாக இருக் கின்ற வேளை நாம் எல்லோரும் சமாதானத்தின் கருவிகளாக மாறி சமாதானத்திற்காக உழைக்க அழைக்கப்படுகிறோம்.

புதிய ஆண்டு எமக்கு எப்படி மலருமோ? யுத்தம் மூளுமோ என்ற ஏக்கஉணர்வில் இருக்கும் வேளை உலகக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் பாப்பரசரின் இச்செய்தியும் மற்ற அனைத் துச் செபதபங்களும் எமக்கு அமைதியும் சமாதானமும் தருவதாய் அமைய வழிவகுக்கட்

- அருட் திரு. ரூபன் மரியாம்பிள்ளை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



World Vision

Help us to keep them smiling....

Children are the most vulnerable victims of poverty... We at World Vision are passionate about reducing the devastating effects of poverty by looking after the needs of the poor and marginalized children regardless of their cast creed or religion. At present we assist over 140,000 children in over 825 villages throughout Sri Lanka by empowering their communities to organize themselves and pool their resources in order to improve their lives.

World Vision is an International, Christian humanitarian, relief and development agency working in more than 100 countries in the world. We are a "Partnership" and in consultative status category II with the United Nations Economic & Social Council.

ASSOCIATE CONTRACT OFFICERS

World Vision Lanka seeks three organized and detail-oriented individuals to be Associate Contract Officers for its Tsunami Operations. The selected individuals will be experienced in contract management and compliance, including a familiarity with grants, agreements, contracts and memoranda of understanding. He/she will work directly with World Vision Attorneys to manage legal documents and ensure approvals have been obtained.

The position requires:

- Completion of G.C.E., A/L qualified diploma-holder or further education preferred.
- Up to 1 year specialized experience in managing contracts or other similar documents.
- Spoken and written proficiency in English required; also, spoken proficiency in Tamil preferred for positions in Ampara and Jaffna.
- Legal contract management experience preferred, but not required.

Job Locations: Jaffna, Galle, and Ampara.

Period of Contract: One year with a possible extension.

World Vision Lanka offers an attractive remuneration package, based on individual competence and skills.

If you possess the above mentioned attributes, please forward your CV and names & addresses of three non-related referees within seven (7) days of this advertisement with the post applied for marked on top left corner of the envelope to:

Human Resource Manager,
World Vision Lanka
Lanka Tsunami Response Team,
No.371, R.A. De Mel Mawatha, Colombo 03.

All offers of employment are made contingent upon the successful completion of all applicable background checks, including criminal record checks.

World Vision is committed to the protection of children and does not employ staff whose background is not suitable for working with children.

Sarva Integrated

IIS இன் நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்

எமது மாணவர்கள், நண்பர்கள்,
நலன்விரும்பிகள், ஏனைய அனைவருக்கும்
எமது நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

Institute of Informatics Studies (IIS)
IIS City Campus
Institute of Business Management Studies (IBMS)
PC Paradise
IIS Office Automation (A/47141) (32-11-17)

Study in UK, Cyprus Malaysia, Singapore

(O/L) 3C, 3S தகமையுடன்

All College Applications free of charge

Free Consulting

Canada, Australia போன்ற நாடுகளில் குடியுரிமை பெறுவதற்கான இலகுவான வழிவகைகள் செய்து தரப்படும்.

Tel: 0773175767

Diploma & Undergraduate Courses...

- Architecture, Art, Fasion Design & Music
- Business Management, Accounting & Finance
- Law, Law with Business
- Engineering Design - Aerospace, Automotive, Mechanical
- Biological, Chemical & Pharmaceutical Science
- Computer Information Systems Design
- Information Systems, Electronic Commerce.
- Software Engineering, Computer Science
- Arts, Social Science and Humanities - Psychology
- Foundation Degree in Aircraft Engineering
- Englineering Systems Management
- Education - Primary Teaching
- Mechanical Engineering
- Information Technology

தற்போது 2006 January, February பதிவுகள் இடம்பெறுகின்றன.

SKY LINE TRAVELS & SERVICES
PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSULTANTS
No. 7-1/2, W.A.De Silva Mawatha, (Facing Galle Road) Colombo 06. Sri Lanka.
Mobile: 0773175767

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
பொன்னையா சுவாமிநாதபிள்ளை

தோற்றம் 29-08-1928 மறைவு 04-07-2003

திதி: துதியை (01.01.2006)

தன்னுயிர் போல் மனைக்காத்து
வையகத்தில் நற்பிள்ளைகளாய் வாழ வைத்தீர்!
உங்கள் நினைவுகள் எம் மனதில்
என்றும் நிலைத்திருக்கும்.

கொக்கன், இணுவில். (44761) (32-11-17)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

திருமண சேவை

ஒன்றல்ல... இரண்டல்ல... திருமண ஒப்பேற்றுத் துறையில் 'சுயதெரிவு முறை முன்னோடி', பிரபல திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாபெழு, வேல் அமுதன்பத்தாண்டுகள் நிறைவாகப் பணியாற்றிச் சாதனை படைத்து வருகிறார்!...
வேல் அமுதனின் தசாப்தகால தொழில் அனுபவத்தால் நீங்களும் பயனடையலாம்! (A/47104) (32-11-17)

இன்றே வேல் அமுதனை முன்னேற்பாட்டில் சந்திக்க முனையுங்கள்! நீங்களோ உங்கள் சார்பில் உங்கள் பிரதிநிதியோ சந்திக்கலாம்.

மேலதிக விவரங்களை விசாரித்தறிய- திங்கள், புதன், வெள்ளிக்கிழமை நாள்களில் பிற்பகல் மணி 4.30 - 8.30 வரையான நேரகாலத்துள் வேல் அமுதனுடன் தொடர்பு கொள்க!
தொலைபேசி: 2360488, 4514396.

முகவரி:
Self Selection System, Forerunnes
Reputed Marriage Focilitater,
Kurumpasiddyoor Mayelu Vel Amuthan,
(Opposite Wellawatte Police, Via 33rd Lane)
55th Lane, Colombo - 06.

4வது வருடத்தில் BBS இன் 4 வளாகங்கள்

யாழ்ப்பாணம் கோயில் வீதி
யாழ்ப்பாணம் கண்டி வீதி
பருத்தித்துறை கிராமக் கோட்டடி
மானிப்பாய் ஆலடிச்சந்தி

Year 1-5 English Medium

Week End Classes நடாத்தப்படும்.

ஆங்கிலம், கணிதம், சுற்றாடல், பாடல்கள் ஆகிய பாடங்கள் நடை பெறுகின்றன. மேற்கூறப்பட்டவாவும் எமது யாழ் நகர் வளாகங்களில் நடாத்தப்படுவது போன்று மானிப்பாய் வளாகத்திலும் சிறந்த கொழும்பில் பயிற்றப்பட்ட ஆசிரியர் களினால் நடாத்தப்படும்.

ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலை
விசேட அம்சங்கள்

- வயது 2+ முதல் வயது 3 வரை **Play Group**
- வயது 3+ முதல் வயது 4 வரை **Montessori**
- வயது 4+ முதல் வயது 5+ வரை **Pre-School**

- ✱ ஆங்கில மொழிமூலமான சிறந்த கற்பித்தல்.
- ✱ தமிழ் கட்டாய பாடமாக கற்பிக்கப்படும்.
- ✱ பிள்ளைகளின் தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தும் வருடாந்த நிகழ்வுகள்.
- ✱ முன்பள்ளியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுவார்.

BBS ஆல் நடாத்தப்படும் மற்றைய ஆங்கில மொழி பாடநெறிகள்

- Diploma in English
- Certificate in English
- IELTS

5+ to 14+ சிறார்களுக்கு

- PRE-FOUNDATION
- FOUNDATION
- LOWER INTERMEDIATE
- INTERMEDIATE
- UPPER INTERMEDIATE

BRITISH BUSINESS SCHOOL

இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.	பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி.	இல:174,கண்டி வீதி, யாழ்ப்பாணம்.	இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி,மானிப்பாய்.

HOT LINE : 021-222-5796 e-mail: british.businessschool@yahoo.com

British BUSINESS SCHOOL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் -- 222 2030, 222 2083, 222 3837.

பயனளிக்காத டில்லிப் பயணம்

'போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோட' என்பார்கள். ஆனால் இந்தியாவுக்குப் போன இலங்கைத் தீவின் ஜனாதிபதி நாடு திரும்பியிருக்கின்றார் ஏமாற்றத்துடன்.

'வெறுங்கையோடு இலங்கை புக்கான் இலங்கை வேந்தன்' என்ற இராமாயணக் காட்சிபோல - இராவணன் போன்று - இலங்கை மீண்டிருக்கிறார் ஜனாதிபதி மஹிந்தா.

அவரது இந்திய விஜயம் பெரும் எதிர்பார்ப்போடு கொழும்பு அரசினால் முன்னெடுக்கப்பட்டது.

தென்னிலங்கையில் பௌத்த, சிங்கள மேலாண்மை வாதிகளைத் தூண்டி அவர்கள் கிளப்பிய பேரினவாதப் புயலிலே ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக் கனியைப் பறித்துக்கொண்ட மஹிந்த ராஜபக்ஷ, இப்போது அந்தப் பேரினவாதிகளை அணைக்கவும் முடியாமல் ஒதுக்கவும் முடியாமல் திண்டாடுகின்றார்.

ஈழத் தமிழர்களுக்கு அவர்களது நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்கின்ற தீர்வுத் திட்டம் ஒன்றை - அதிகாரப் பகிர்வை - வழங்குவதற்கு அடியோடு இணங்காத - விரும்பாத - பௌத்த, சிங்களப் பேரினவாதிகளின் கைப்பொம்மையாகியிருக்கும் ஜனாதிபதி மஹிந்தவினால் அதிலிருந்து வெளியே வரமுடியாத இக்கட்டு. அதனால் இலங்கைத் தீவின் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்னெடுக்கமுடியாத கையாலாகாத்தனம்.

இவை காரணமாக இனப்பிரச்சினை விடயத்தில் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பெரும் சிக்கல்களையும் தமிழர் தரப்பின் கடும் எதிர்ப்பையும் எதிர்கொண்டு நிற்கும் அவர், அதினின்றும் வெளியே வரமுடியாமல் தடுமாறுகின்றார்.

பேரினவாதிகளின் இசைக்கு நடனம் ஆடும் இலங்கை ஜனாதிபதி, அதனால் ஈழத்தமிழர்களின் கடும் சவாலையும், அதன் மூலம் மோசமான - விபரீத - விளைவுகளையும் எதிர்கொள்ளும் ஆபத்து தம்மை நெருங்கி வருவதை நன்கு உணர்ந்துள்ளார்.

அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் முன்நகர்த்த முடியாத தமது இயலாமை காரணமாக இலங்கைத் தீவில் பெரும் போர் வெடிக்கப்போகின்றது, தமிழர்களின் கடும் போரபாயத்தை சிங்கள தேசம் எதிர்கொள்ளப்போகின்றது என்ற யதார்த்தத்தை விளங்கிக் கொண்டுள்ள மஹிந்தவின் அரசு, அந்தச் சிக்கலை எதிர்கொள்வதற்குத் துணையாக மலைபோல நம்பியிருந்தது இந்தியத் தரப்பைத்தான். இந்தியாவின் உதவியைத்தான்.

அந்தப் பின்னணியிலேயே ஜனாதிபதி மஹிந்தவின் புதுடில்லி விஜயம் பெரும் எதிர்பார்ப்போடும் நம்பிக்கையோடும் கொழும்பு அரசினால் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் பலன் பூச்சியம் என்கின்றனர் அரசியல் நோக்கர்கள்.

இலங்கை சமாதான முயற்சி விவகாரத்துக்குள் இந்தியாவைக் கொண்டு வந்து சொருகுவதன் மூலம் - தமிழருக்கு எதிரான தனது அடக்குமுறைப் போரில் இந்தியத் தரப்பையும் தன்னோடு அணி சேர்ப்பதன் மூலம் - எதிரியைப் பலவீனப்படுத்தி விடலாம் எனக் கணக்குப் போட்டார் மஹிந்தா. அந்த அடிப்படை இலக்கை எட்டுவதற்கு ஐந்து அம்சத் திட்டத்துடன் புதுடில்லி புறப்பட்டார் அவர்.

* இலங்கை இனப்பிரச்சினை தொர்பான அமைதி முயற்சிகளில் நேரடியாகப் பங்களிக்குமாறு இந்தியாவுக்கு வெற்றிலை வைத்தல். அதன்மூலம், இதுவரை - கடந்த சுமார் ஒன்றரை தசாப்த காலமாக - இலங்கை விடயத்தில் தள்ளி நின்று நோக்கும் கொள்கையில் இருந்த இந்தியாவை இப்பிரச்சினைக்குள் செருகி, தன்னோடு அணி சேர்த்து, அதன் மூலம் புலிகளை - தமிழர் தரப்பை - பலவீனப்படுத்துவது.

* இலங்கையில் மீண்டும் ஒரு யுத்தம் வெடிக்குமானால் அத்தகைய சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு இந்தியா நேரடியாக உதவும் என்ற வாக்குறுதி ஒன்றை புதுடில்லி அரசுத் தலைமையிடமிருந்து பெற்றுக்கொள்ளல்.

* இலங்கைக்கு உதவும் நாடுகளின் நான்கு இணைத் தலைமைக்கு மேலதிகமாக - அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியத் தலைமை அமைப்பான பிரிட்டன் ஆகியவற்று மேலதிகமாக - மற்றொரு இணைத்தலைமை நாடாக இந்தியாவை நுழைத்து, இணைத் தலைமை மட்டத்தில் புலிகளுக்கு எதிரான போக்கு நாடுகளின் நிலையை வலுப்படுத்தல்.

* இலங்கைக்கு நேரடி இராணுவ ஒத்துழைப்பை வழங்கக்கூடிய உத்தேச இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை இறுதிசெய்து, உறுதிசெய்து அதன் மூலம் தனது இராணுவ வலிமை நிலையை ஸ்திரப் படுத்திக் கொள்ளுதல்.

* தீவிர புலி எதிர்ப்புப் போக்குடைய தமிழக மாநில முதல்வர் ஜெயலலிதாவுடனும் அங்குள்ள புலிகள் எதிர்ப்பு அணிகளுடனும் உறவுகள், தொடர்பாடல்கள் போன்றவற்றை மேம்படுத்தி அதன்மூலம் புலிகளுக்கு எதிரான கொள்கை போக்கில் செயற்பட இந்திய மத்திய அரசைத் தூண்டுதல்.

இத்தகைய திட்டத்துடனேயே புதுடில்லி பறந்தார் ஜனாதிபதி மஹிந்தர்.

ஆனால், இலங்கை விடயத்தில் ஏற்கனவே சூடுகண்ட பூனையாகப் பட்டறிவு கொண்டுள்ள இந்தியா -

தென்னிலங்கை அரசுக்கு எதிரான - புலி ஆதரவுப் போக்குடைய - தமிழகத் தலைவர்களின் ஆதரவில் முழுமையாகத் தங்கியுள்ள இந்திய மத்திய அரசு -

விடுதலைப் புலிகளை - ஈழ தமிழர்களின் ஏக, அதிகாரபூர்வப் பிரதிநிதிகளான புலிகள் அமைப்பை - தனக்கு எதிரானதாகத் தான் கருதினாலும், அந்த அமைப்புக்கு எதிரான நேரடி இராணுவச் செயற்பாட்டுக்கு உதவப்போவது 'தீக்குள் விரலை வைக்கும் விபரீத விளையாட்டு' என்ற யதார்த்தத்தை உணர்ந்து கொண்டுள்ள புதுடில்லி அரசுத் தலைமை -

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பான விவகாரத்தில் ஜனாதிபதி மஹிந்த தரப்பு விரித்த வலையில் - ஏற்பாடு செய்த பொறியில் - சிக்காமல் தன்னைக் கழற்றிக் கொண்டுவிட்டது.

ஜனாதிபதி மஹிந்தாவின் கோரிக்கைகளுக்கு இணங்குவது - அந்தச் சதி வலையில் வீழ்வது - இந்தியாவுக்கு பல தரப்பட்ட வகையில் பாதகமானது.

ஒன்று - நியாயமற்ற அந்நடவடிக்கைக்கு இணங்கி ஒத்துக்கொள்வதன் மூலம் ஒரு சிறுபான்மை இனமான தமிழருக்கு பெரிய அநீதி இழைத்த அபகீர்த்தி இந்தியாவுக்கு ஏற்படும்.

அடுத்தது - இதனால் ஈழத் தமிழர்களுடன் ஆத்மார்த்தமாக ஒன்றி நிற்கும் தமிழ்நாடு மாநிலத்தின் நியாயமான ஆதரவை மத்திய அரசு இழக்கும். இதனால் மத்தியில் கூட்டாட்சி அரசு கவிழும் நிலையும் உருவாகும்.

மூன்றாவது - வெற்றிகிட்டாத ஓர் அணுகுமுறைக்கு ஒத்துழைப்பதன் மூலம் அதன் விளைவுகளாக வீண் விபரீதங்களை எதிர்கொள்ள நேரிடும். வினையை விலை கொடுத்து வாங்கும் விவகாரமாகி விடும் அது. வானத்தில் போகும் தொல்லையை ஏணி வைத்து இறக்கிய விடயமாகிவிடும்.

இன்னோரன்ன யதார்த்த நிலையை நன்கு புரிந்து கொண்டுள்ள இந்திய மத்திய அரசு, அதனை நேரடியாகவும், நாசூக்காகவும், தந்திரமாகவும் இலங்கை ஜனாதிபதிக்கு எடுத்து விளக்கி அவரை கொழும்புக்கு திருப்பி அனுப்பி வைத்திருக்கிறது.

சர்வதேச ரீதியில் தான் கால் ஊன்றியுள்ள இடத்தின் வலிமையை - வலுவின்மையை - நன்கு புரிந்துகொண்டு நாடு திரும்பியிருக்கும் புதிய ஜனாதிபதி, அந்தப் பட்டறிவு காரணமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஆக்கபூர்வமான திசையை நோக்கி நகரத் தயாராவதால் இலங்கைத் தீவில் அமைதிநிலை தப்பிப் பிழைக்கும். இல்லையேல் இலங்கைத் தீவு ரணகளமாவது தவிர்க்க முடியாத தாகும்.

புத்தெழுச்சியும் அர்ப்பணிப்பும் கொண்டு புதிய இலங்கையை கட்டியெழுப்புவோம்!

புதுவருடச் செய்தியில் ஜனாதிபதி

கொழும்பு,ஜன.1

இன்று பிறக்கும் 2006ஆம் ஆண்டை ஒட்டி நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதுவருட வாழ்த்துச் செய்தி ஒன்றை விடுத்திருக்கின்றார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

2006ஆம் புத்தாண்டு உதயமாகும் இவ்வேளையில் இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும், அனைத்து உலக மக்களுக்கும் இப் புத்தாண்டு வெற்றிகரமான ஆண்டாக அமையவேண்டும் என முதற்கண் நான் பிரார்த்திக்கின்றேன்.

பல தசாப்த காலமாகத் தீர்வு காணப்படாதிருந்த பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கும் சவால்களுடனேயே நாம் புத்தாண்டை எதிர்நோக்குகின்றோம். அத்தகைய சவால்களுக்கு வெற்றிகரமாக முகம்கொடுத்து நாட்டை முன்னெடுத்துச் செல்வேன் என நாட்டு மக்கள் என் மீது வைத்த பெரு நம்பிக்கையின் காரணமாக கடந்த நவம்பர் 17ஆம் திகதி இந்நாட்டின் ஜனாதிபதியாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

என்மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை சிறிதளவேனும் சிதறடிக்காமல் ஒரு தேசியமாக எம்மால் வெற்றி கொள்ளப்படவேண்டிய சவால்களுக்கு வெற்றிகரமாக முகம்கொடுப்பது 2006 ஆம் ஆண்டில் என் மீதுள்ள மிக முக்கிய பொறுப்பு என்பதை நான் உணர்ந்துள்ளேன். இப்புத்தாண்டில் புதியதோர் இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான உறுதியான அடித்தளத்தை இடுவது எனது அபிலாசையாகும்.

எந்தவொரு இனத்தவருக்கும் தமது முயற்சியால் வெற்றிகாண்பதற்கான நீண்டகால இலட்சியமொன்று இருத்தல் வேண்டும். அந்த நீண்டகால இலட்சியத்தை வெற்றி கொள்வதற்கு உந்துதலாக அமையும் தமக்கேயுரித்தான ஒரு சிந்தனையும் இருத்தல்வேண்டும்.

அதேபோன்று, அந்தச் சிந்தனையின் பலத்துடன் செயற்படுத்தக்கூடிய ஒரு வேலைத்திட்டமும் இருத்தல்வேண்டும். அந்த வேலைத்திட்டத்துக்கு செயலுருவம் கொடுக்கும் பொறுப்பு வாய்ந்த ஓர் அரச நிர்வாகமும், அதற்கான பிரஜைகளும் இருத்தல்வேண்டும். இந்நான்கு விடயங்களும் நிறைவுற்ற ஓர் இனத்தினை எதிரிகளால் தோற்கடிக்க முடியாது என்பதில் நான் பூரண நம்பிக்கை கொண்டுள்ளேன்.

ஆகையால், 2006ஆம் ஆண்டு, எமது தேசத்தவர்களிடையே உள்ள இப்பலவீனங்களைப் பூண்டோடு ஒழிப்பதுடன், சரியான குறிக்கோளுடனும், சுயசிந்தனையுடனும், வெற்றிகரமான ஓர் ஆண்டெனக் குறிப்பிடுவதற்கு நான் தீர்மானித்துள்ளேன். அவ்வாறு நாமனைவரும் ஒன்றிணைந்து ஒரே தேசத்தவராக புத்தெழுச்சியுடனும் மிக்க அர்ப்பணிப்புடனும் கூடியவர்களாக புதியதோர் இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக தோளோடு தோள் நிற்பதன் மூலமே, எமது சொல் போலவே 2006 ஆம் ஆண்டை புத்தாண்டாக மாற்றிக்கொள்ள முடியும் என நம்புகின்றேன். (க)

ஒடுக்கப்பட்ட தமிழினத்துக்காக ஓங்கிக் குரல் எழுப்பியவர் ஜோசப்

பொது நிலையினர் ஆணைக்குழு அனுதாபம்

யாழ்ப்பாணம்,ஜன.1

ஒடுக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்க சர்வதேச அரங்கில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம்.

- இவ்வாறு யாழ்.மறை மாவட்ட பொது நிலையினர் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை வாழ் கத்தோலிக்க முக்கிய பொது நிலையினருமான ஜோசப் பரராஜசிங்கத்தின் அகால மரணம் எம்மைக் கவலையிலும், அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது. இவரது படுகொலையினால் எமது நாட்டின் முதன்மையான பொதுநிலையினர் ஒருவரை இழந்து நாம் துயருறுகின்றோம். இவர் ''உலகியல் அமைப்பைக் கிறிஸ்துவில் புதுப்பித்தல்'' என்னும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கோட்பாட்டைத் தனது வாழ்வாக்கி வாழ்ந்த ஒரு மாமனிதர்.

அரசியலிலும், அனைத்து நாட்டுத் தொடர்புகளிலும் இறைவன் தமக்களித்த உயர் கல்வி, ஆங்கிலப் புலமை போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டு அதிகம் ஈடுபாடு காட்டியவர். இதன் மூலம் பல சர்வதேச அரங்குகளில் இலங்கை வாழ் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு விடுதலை வாழ்வைப் பெற்றுக் கொடுக்க அர்ப்பணிப்புடன் இவர் மேற்கொண்டிருந்த அற்புத சேவைகளை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

இவ்வாறான மாமனிதனின் கொலைச் சம்பவத்தை யாழ்.மறை மாவட்ட பொது நிலையினராகிய யாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், இவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆன்ம சாந்திக்காகவும் இறைவனை வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது. (8)

வாழைச்சேனையில் கிரனேட் வீச்சு

வாழைச்சேனைப் பொலீஸ் பிரிவிற்குட்பட்ட பேத்தாழைப் பிரதேசத்தில் வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது நேற்றுமுன்தினம் இனம் தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலின்போது 4 பொலீஸார் படுகாயமடைந்துள்ளனர். நேற்றுமுன்தினம் நண்பகல் 11.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனைப் பொலீஸார் மேற் கொண்டுள்ளனர். (க)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரைப் பெருவிழா

காரைநகர்,ஜன.1

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை உற்சவம் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் சிறப்பாக நடைபெற உள்ளது. இதற்கான விரிவான ஏற்பாடுகளை ஆலய ஆதீன கர்த்தாக்கள் மேற் கொண்டு வருகின்றனர்.

உற்சவ காலத்தில் தினமும் காலை 7 மணிக்கு மூலமூர்த்திகளுக்கு விசேட அபிசேகமும் முற்பகல் 10 மணிக்கு திருவெம்பாவை ஓதலும் 11 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து சுவாமி திருவீதி உலா வருதலும் இடம்பெறும்.

இவ் விழாவில் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை ரதபிரதிஷ்டையின் பூர்வாங்கக் கிரியைகளும் பஞ்சகுண்ட பட்ஷ உத்தம மகாயாகமும் இடம்பெற உள்ளன. இந்த மகாயாகம் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

பத்தாம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா இடம்பெறும்.

12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பஞ்சரத பவனியும் மறுநாள் அதிகாலை 2 மணி தொடக்கம் ஆருத்திரா அபிஷேகமும் காலை 6 மணிக்கு ஆருத்திரா தரிசனமும் பிற்பகல் 3 மணிக்கு திருவூடலும் தொடர்ந்து தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

உற்சவ காலத்தில் தினமும் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை, ஈழத்துச் சிதம்பர சைவ அறப்பணி நிலையம் ஆகியவற்றில் அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாணிக்கவாசகர் சபையினால் மாலையில் மணிவாசகர் விழாவும் சிறப்பாக நடத்தப்படவுள்ளது.

யாழ். பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து ஈழத்துச் சிதம்பரம் ஆலயம் வரை தினமும் நேரடி பஸ்சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-73)

பட்டப்பகலில் வீடு புகுந்து இளைஞர் குழு அட்டகாசம்!

யாழ்ப்பாணம்,ஜன.1

இருபாலை - கோண்டாவில் வீதி இராமநாதன் கலட்டிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் கத்திகள், பொல்லுகளுடன் புகுந்த கும்பல் ஒன்று அங்கிருந்தவர்களைத் தாக்கியதுடன் வீட்டினையும் சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. நகைகள் சிலவும் இந்தக் கும்பலினால் அபகரித்துச் செல்லப் பட்டதாகவும் கூறப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை நண்பகல் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கத்திகள் மற்றும் பொல்லுகளுடன் குறித்த வீட்டினுள் புகுந்து இருந்தவர்களை கற்களால் வீசித்தாக்கினர். இதன்போது வீட்டில் இருந்த மூவர் காயமடைந்தனர்

வீட்டின் கதவுகள் வேலிகள் என்பவற்றையும் அடித்துச் சேதப்படுத்தியுள்ளனர். வீட்டில் இருந்தவர்கள் அணிந்திருந்த நகைகள் சிலவற்றையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

பொலீஸார் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என சம்பந்தப்பட்டவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்

தற்போது குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும் பதற்றமான சூழ்நிலைக்கு மத்தியில் இளைஞர்கள் சிலர் நாட்டு நடப்புக்களை புரிந்து கொள்ளாமல் தங்களுடைய சண்டித்தனத்தை தொடர்ந்தும் அரங்கேற்றி வருவது குறித்து பொதுமக்கள் தரப்பில் கடும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது

உதயவாக்கு

அந்தரங்கத்தில் எல்லோரும் ஞானவான்களே! அதனால் தான் முட்டாள் கூடத் தன்னைக் கெட்டிக்காரன் என்று நினைக்கிறான்.

- சுவாமி சிவானந்தர்.

நாளை

மார்கழி 18
திங்கட்கிழமை
02.01.2006
திதி: திருதியை
பின்னிரவு: 03.30 வரை
நட்சத்திரம் : திருவோணம்
பின்னிரவு : 01.50 வரை
சுபநேரம் : 12.30 - 02.00
ராகுகாலம் : 08.00 - 09.30
எமகண்டம் : 13.30 - 15.00

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பற்பல தொண்டுகள் பைந்தமிழுக்கு ஆற்றிய மறத்தமிழ் வீரன்

முருகப்பா பழனியப்பனின்
3 ஆம் ஆண்டு நினைவு கூரல்

தோற்றம்
19.01.1935
மறைவு
01.01.2003

(இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவரும், தமிழரசுக் கட்சியின் ஆரம்ப கால உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த உறுப்பினரும், நல்லூர் கிராம சபையின் முன்னாள் உபதலைவரும், நல்லூர் மக்கள் சனசமூக நிலையத்தின் போசகரும் வன்னியசிங்கம் மண்டபத்தின் ஸ்தாபகரும்)

அமரர் முருகப்பா பழனியப்பன்

தமிழ்ப்பற்றும் நாட்டுப்பற்றும் சமூகப்பற்றும் கொண்டு
அஞ்சாமையுடன் வாழ்ந்து மறைந்தாலும் மக்கள்
மனதில் நிலைத்து நிற்கும் எங்கள் அப்பாவே!

விடாமுயற்சி, சுயபலம், சுயமுயற்சி, சுய நம்பிக்கை
ஆகிய பண்புகளை மூலதனமாகக் கொண்டு எங்களை
சிறப்புடன் திகழ வைத்த எங்கள் அப்பாவே!

உங்களது ஆத்மா சாந்தியடைய எங்களது
இதய பூர்வமான வணக்கங்கள்

543, ஆடியபாதம் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(44716)

மாதகலில் கடற்படையினர் அடாவடி

வலி.தென் மேற்கு.ஜன .1

மாதகல் துறையினூடாக மீன்பிடிக்கச் செல்வதற்கு துறையில் படகுகளை கட்டுவதற்கும் கடற்படையினர் தடை விதித்துள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது. கடற்படையின் இந்த நடவடிக்கையால் துறையினூடாகத் தொழில் மேற்கொள்ளும் மீனவர்கள் பெரும் நெருக்கடிகைளை எதிர்கொள்கின்றனர்.

நேற்று முன்தினம் காலை மீனவர்களை அழைத்த கடற்படையினர் துறையிலுள்ள படகுகளை அங்கிருந்து அகற்றுமாறும் துறையினூடாக எவரும் மீன்பிடிக்கக்கச் செல்லவேண்டாம் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து மீனவர்கள் அங்கிருந்து படகுகளை வாகனங்களின் உதவியோடு தமது வீடுகளுக்கு எடுத்துச் செல்கின்றனர்.

நேற்று தொடக்கம் மீனவர்கள் தொழிலுக்குச் செல்லாததால் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதாகக் கவலை தெரிவிக்கின்றனர். (த -135-202)

UNIVERSITY *of* CAMBRIDGE
ENGLISH EXAMINATIONS

- PRELIMINARY ENGLISH TEST – PET
- FIRST CERTIFICATE IN ENGLISH – FCE
- CERTIFICATE OF PROFICIENCY IN ENGLISH – C.P.E

ஆகிய ஆங்கிலப் பரீட்சைகளுக்கான வகுபபுக்கள் 05.01.2006 இல் ஆரம்பமாகின்றன.

உலகின் எந்தப் பல்கலைக்கழகத்திலும் மேற்படிப்பை மேற்கொள்ள அடிப்படை ஆங்கிலத் தேவையை இந்தப் பரீட்சையில் ஒன்றைச் சித்தியடைவதன் மூலம் பெற்றுக்கொள்ளுங்கள். ஆண்டு தோறும் சுமார் 270,000 மாணவர்கள் 100 நாடுகளில் இருந்து இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

இது ஓர் உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகம் வழங்கும் சான்றிதழ். இதனைப பெறுவது வாழ்க்கையில் நீங்கள் அடையும் ஓர் மகிழ்ச்சியான அனுபவமாகும் உங்களின் ஆங்கிலத் தேவையை வாழ்நாள் முழுவதும் பூர்த்தி செய்யும் பாடநெறி.

June 2006 இல் British Council, Colombo இல் நடைபெறும் இந்தப்பரீட்சைக்கான வகுப்புக்கள British College of English னால் 05.01.2006 இல் ஆரம்பிக்கப்படுகின்றன.
வகுப்புக்கள் தினசரி 2மணி நேரம் நடைபெறும். முழுவதுமாக 150 மணிநேரப் போதனையில் நிச்சயமாக இந்தப் பரீட்சையில் சித்தியடைய வைப்போம்.

IELTS

International English Language Testing System (IELTS)

தற்போது உலகின் மிகப்பிரபல்யமான ஆங்கிலச் சான்றிதழாகும். வெளிநாடு செல்ல விரும்பும் மாணவர்கள், வைத்தியர்கள், வைத்தியர்கள், தாதியர் மற்றும் நிரந்தரமாக வெளிநாடுகளில் வசிக்கவிரும்புவோருககான அத்தியா வசியத் தகுதிகளில் ஒன்றாக இச்சான்றிதழ் கருதப்படுகிறது.

எமது நிறுவனத்தால் நடாத்தப்படும் தகுதிகாண் (Placement Test) பரீட்சையொன்றில் அமர்வதன் மூலம் இப்பாடநெறியில் நீங்கள் சேர்ந்து கொள்ளலாம்.

IELTS பரீட்சைக்கு தோற்றுமளவுக்கு உங்கள் ஆங்கில அறிவு போதா திருக்கும்பட்சத்தில் நீங்கள் அதற்கமைவான வேறொரு பாடநெறியில் சேர்ந்து படித்தபின் இந்தப் பரீட்சையை எடுக்கலாம்.
வகுப்புக்கள் ஆரம்பம் : 05.01.2006

BRITISH COLLEGE OF ENGLISH

இல. 141, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
(திருநெல்வேலிச் சந்திக்கும், கல்வியங்காட்டுச்சந்திக்கும் இடையே)
T.P. No. 0779179476

கண்மகிழ கண்நெகிழ

20 08 1975

04 10 2005

90ஆம் நாள் நினைவஞ்சலி

நீ யாராக இருந்தாலும்
நீ என்னுடையவனே....!
நான் உன்னைக் கைவிடமாட்டேன்
எங்கிருந்தாலும், நீ எனக்கருகில் இருக்கிறாய்
என் கை வீச்சைத் தாண்டி
உன்னால் செல்ல இயலாது.

பகவான் பாபா.

கடந்த 04.10.2005 அன்று சிவபதமடைந்த எமதுஅன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டு ஆறுதல் கூறியும் எமக்கு சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் மற்றும் அனுதாபச் செய்திகள் அனுப்பிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (01.01.2006) ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு: அழைப்புக்கிடைக்காதவர்கள் தயவு செய்து இந்த அழைப்பை ஏற்றுக் கலந்து கொள்ளவும்.

என்றும் நீங்காத நினைவுடன்
குடும்பத்தினர்.

(47092)

அமரர்
இராசரத்தினம் இராஜவினோதன்
(வினோ வீடியோ உரிமையாளர்)

நிரந்தர முகவரி:
கே.கே.எஸ். வீதி,
வியன்னாமம்,தெல்லிப்பழை

தற்காலிக முகவரி
137, டச்வீதி,
உடுவில், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வருக புத்தாண்டே; அமைதியும் தீர்வும் தருக புத்தாண்டே! 2006

நல்லை ஆதீன முதல்வரின் அருளாசியுரை

இன்று பிறந்திருக்கும் புத்தாண்டானது எங்கள் வாழ்கையில் இனிமேலாவது அமைதியும் சுபிட்சமும் வந்து எல்லோரும் இன்புற்றிருக்க வழிசமைக்க வேண்டும் என்பதே நமது அன்புப் பிரார்த்தனையாகும்.

கடந்த ஆண்டுடன் நடைபெற்ற நிகழ்வுகளையெல்லாம் மறந்துவிட்டு இன்றுமுதல் எல்லோரும் மகிழ்ச்சியாகவும் சந்தோசத்துடனும் வாழ்ந்து தமக்கென வாழாது பிறருக்கென வாழும் பரந்த நோக்குடன் அனைவரும் மகிழ்வுடன் வாழுங்கள் என்ற குறிக்கோளை நமக்கு உணர்த்துமாப்போல் கிழக்கு வானிலே உதய சூரியன் தனது கதிர்களைப் பரப்பி வருவதைக் காணும் போது நமது உள்ளங்களிலும் நம்பிக்கைக் கீற்று துளிர்விடுகிறது.

புதிய ஆண்டில் தான தர்மங்கள் செய்து, உணவளித்து, உடையளித்து உள்ளத்தால் உணர்வு கலந்து நன்றியுடன் வாழ்வளித்து அனைவரது முகங்களிலும் ஆனந்த மயமான தேஜஸ் ஒளிவீச வேண்டும் என்று எல்லாம் வல்ல பரம்பொருளான தொல்லைவினைதீர்க்கும் கலியுக வரதன் கந்தன் திருவடிகளை வழுத்தி உளமாரப் பிரார்த்தித்து நல்லைக் குருமணியின் பாதங்களைப் பணிந்து அருளாசி வழங்குகின்றேன்.

இன்று முதல் நாட்டில் சமாதானமும் சந்தோச வாழ்வும் மிளிர வேண்டும் என்று இறையாசி வேண்டி வாழ்த்துகிறேன்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஆதீன குருமுதல்வர் -

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.

இரண்டாவது குரு மஹா சந்நிதானம்

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.

தமிழரின் நியாயமான அரசியல் கோரிக்கைகள் புதிய ஆண்டிலாவது ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்

புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் யாழ்.ஆயர்

2006 ஆவது புதிய ஆண்டு புலருகின்ற வேளை இதயம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துகளை முதலில் தெரிவிக்கிறேன்.

கடந்த ஆண்டு பேச்சுவார்த்தைகள் வழி சமாதானம் மலரும் என்ற எமது எதிர்பார்ப்புவெறும் ஏமாற்ற மாய்ப் போய்விட்டது. சுனாமி என்ற இயற்கை அனர்த்தம் - அதன் பணிகள் என்பவற்றோடு காலம் கடந்துவிட்டது.

புதிய ஜனாதிபதிக்கான தேர்தலில் எதிர்பார்ப்பிற்கு மாறாக புதியவர் ஒருவர் ஜனாதிபதியானார். சமாதானத்தில் நம்பிக்கையும் பேச்சுகளைத் தொடரும் ஆர்வமும் உடையவராகத்தம்மைக் காட்டிக் கொண்டாலும் இராணுவத்தினர்க்கும் மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல்நிலை போர்மயமான சூழலையே உருவாக்கியுள்ளது.

பல உயிர் இழப்புக்கள் ஏற்பட்டன. இராணுவத்தினரின் இருப்பு அதிகரிக்கப்பட்டது. சோதனைச் சாவடிகளில் சோதனை அதிகரிக்கப்பட்டது. இதனால் மக்கள் அதிக துன்பத்திற்கும் பயத்திற்கும் பதற்றத்திற்கும் உள்ளாக்கப்பட்டார்கள். யுத்தம் வெடிக்கும் என்ற அச்ச உணர்வு மேலோங்கியுள்ளது.

புதிய ஆண்டில் பயமும் பதற்றமும் நீக்கப்பட வேண்டும். மக்கள் அச்சம் நீங்கி வாழும் நிலை தோன்றவேண்டும். முறுகல் நிலை- வன்செயல்கள்- உயிரிழப் புக்கள் - படுகொலைகள் என்பன நீக்கப் பட்டு மக்கள் அமைதியாக - பாதுகாப் பாக வாழும் நிலை தோன்ற வேண்டும். சகல தாக்குதல்களும் நிறுத்தப்படவேண்டும். பொதுமக்கள் தாக்கு தலுக்கு இலக்காகக் கூடிய செயல்கள் தவிர்க்கப்பட வேண்டும். 2002 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சகல சரத்துக்களும் நிறைவேற்றப்படவேண்டும்.

தமிழ்மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை உள்வாங்கக் கூடிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

புதிய ஆண்டில் சமாதானத்திற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள் என சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தமிழ்மக்கள் பேரால் வேண்டுகோள்விடுக்கிறேன்.

நாம் அனைவரும் சமாதானத்திற்காக முழுமையாக இப்புதிய ஆண்டில் உழைப்போம்.

பழையன கழிந்து புதியன புகுந்து பயமும் அச்சமும் நீங்கி சமாதானத்தோடும் புரிந்துணர்வோடும் வாழும் நிலை புதிய ஆண்டில் தோன்ற இறைவரம் வேண்டி புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன்.

மேதகு நோமஸ் சவுந்தரநாயகம். யாழ்.ஆயர்

ஆனந்தமும் அமைதியும் புத்தாண்டில் மலரட்டும்

எல்லாம் வல்ல துர்க்காதேவியின் அருட் கருணையினால் நாம் வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். ஆனந்தமும் அமைதியும் எம்மவர் மத்தியில் தோன்ற வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம். எமது பிரார்த்தனையினால் இந்த மண் புனிதம் அடையட்டும். அதற்கான அறிவுரை ஒன்றை இங்கே சமர்ப்பிக்கின்றேன்.

ஏ, மனமே! நீ முன் ஜென்மத்தில் புண்ணியம் செய்துள்ளதினால் அதுவே இப்பொழுதும் உன்னை மேலும் மேலும் புண்ணியம் செய்யத் தூண்டுகின்றது. புண்ணியம் ஒன்றே நிகரற்றது; புண்ணியத்தைச் செய்; புனிதனாவாய்.

புனிதன் என்பவன் யார் என நினைத்தாய்? அவன் தான் ஜீவன் முத்தன். ஜீவன் முத்தன் செய்வன அனைத்தும் புனிதத்தன்மை வாய்ந்தவையாய்த்தான் இருக்கும். மனமே! முதலில் உன்னைப் புனிதப்படுத்திக்கொள். பிறகு உலகை நீ புனிதப்படுத்தி விடலாம். முதலில் உலகைப் புனிதப்படுத்துவதாக உன்னை நீயே கெடுத்துக் கொள்ளாதே. நீ புனிதனாக முதலில் உன்னிடம் நல்லொழுக்கம் வேண்டும். இரண்டாவது மெய்யான குறைவற்ற அன்பிருத்தல் வேண்டும். மூன்றாவது உன்னிடம் தர்ம சிந்தனை இருத்தல் வேண்டும். அழகாகப் பேசினால் போதாது. நீ அமைதியாக இருக்க வேண்டுமானால் ஒருவருக்கும் தீங்கு நினையாதே. அதுவே, பெரிய தர்மமாகும்.

உன்னாலான வகையில் பிறருக்கு சரீரத்தாலோ; பணத்தாலோ; புத்தியினாலோ; உதவி செய்து கொண்டேயிரு. உனக்குச் செல்வாக்கு இருக்கும் போது பிறருக்கு உதவவில்லையென்றால் மிகப் பெரிய குற்றவாளியாவாய். சேவை செய்ய வாய்ப்பிருக்கும் போது முழு மனதோடு பணி செய்ய முன்வரவேண்டும். அத்துடன், தெய்வ நம்பிக்கை தான் உண்மையான மகிழ்ச்சியைத் தரும். பகுத்தறிவுடன் கூடிய மனிதப் பிறவியில் கடவுளை மறவாதிருத்தலே படைத்தவனுக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

புத்தாண்டே நீ புதிய அத்தியாயம் திறந்திடுவாய்...

மெல்லவே தவழ்ந்து செல்லப் பிள்ளையாய்
நம் வாழ்வினில் எனிதென்றும் புதுமைகள் படைத்திட - நீ
சுகப்பிரசவத்தில் மலர்ந்திடுவாயே!
சோதனைகள் நிறைந்த நம் வாழ்வில் புத்தொளி பிறக்க
சமாதானத் தென்றலாய் நம்மிலே வீசிடுவாயே!
ரத்தம் சிந்தும் விரோதம் மறைந்து போகட்டும்
முத்தம் சிந்தும் அன்பு எங்கெனும் விளையட்டும்
உயிர் தின்னும் சோவட்டாசை நீங்கட்டும்
இனங்களுக்கிடையே புரிந்துணர்வு பிறக்கட்டும்
குரோதம் விதைக்கும் பகைமை ஒழியட்டும்
வியர்வை சிந்தி புதுமைகள் படைக்கட்டும்
வீடெங்கினும் மரண வலி மடிந்து போகட்டும்
சேதி சுகையாய் புதிய செய்திகள் நமையடையட்டும்
வாழ்வினில் சுகப்பான பக்கங்கள் தொலைந்து போகட்டும்
புரட்டாது தொலைந்த பக்கங்கள் மீட்கப்படட்டும்
நம்மில் சுவிந்த இருள் விலகட்டும்
சுனிப்பில் ஊரெங்கும் பூபாளம் இசைக்கட்டும்
வாழ்வில் வசந்தமொன்று வீச நம்மில் புதையுண்ட
புதிய அத்தியாயத்தை - புத்தாண்டே!
நீ திறந்திடுவாய்.

த.ஜெகதீஸ்வரன்

யாழ்.பல்கலைக்கழகம்.

அணிதிரள வைக்கட்டும்!

பிறந்துவரும் புத்தாண்டு
பிடுதனை யீந்துலகை
அறம் வளர்க்கும் பாதையிலே
அணி-திரள வைக்கட்டும்!

கருணையுடனே யினங்கள்
காசினியில் வாழ்வமைத்து
உரிமையுடனே யுறைய
உரிய வழி யூட்டட்டும்!

எழுச்சிகொள் தமிழினத்தின்
ஏற்றம்தனை யிருத்தி
மகிழ்ச்சி கடல்மாந்த
மார்க்கத்தைக் காட்டட்டும்!

புத்தாண்டின் பூரணத்தை
பூமியிலே துய்ப்பதற்கு
இத்தரையிற் சுதந்திரத்தை
ஈட்டவழி நாட்டட்டும்!

கே.பி.திவ்வியன்

(மாங்குளம்)

பூரண விடிவு கிடைக்க வேண்டி அனைவரும் பிரார்த்தனை செய்வோம்

இனிய புத்தாண்டை இன் முகத்துடன் வரவேற்போம். புதிய ஆண்டில் காலடி எடுத்து வைக் கும் நாம் நல்லதையே சிந்தித்த வண்ணம் எம் பணி தொடர் வோம். சென்ற ஆண்டில் நாம் விட்ட தவறுகளை நிவர்த்தி செய்வதற்கு புதிய ஆண்டைப் பயன் படுத்துவோம். சென்ற காலத்தில் நாம் சாதித்த சாதனைகளை நீள நினைத்து மகிழ்வோம். புதிய ஆண்டில் நாம் சாதிக்க வேண்டிய கைங்கரியங்களைத் திட்டமிடுவோம்.

கடிகாரம் ஓடுமுன் ஓடு என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடினான். காலத்தின் பெறுமதியை உணர்ந்து பொழுதை அவப் பொழுதாகக் கழிக்காது அர்த்தமுள்ள பணிகளில் நாம் அனைவரும் ஈடுபடல் வேண்டும். எம் மண்ணில் நிரந்தர சமாதானமும் அமைதியும் பூரண விடிவும் கிடைக்க அனைவரும் பிரார்த்தனை செய்வோம்.

இயற்கை எமக்கு சாதகமாக அழைய வேண்டும் என தினமும் வேண்டுதல் செய்வோம். ஒவ்வொரு மனிதனும் மனித நேயத்தின் மாண்பினை உணர்ந்து அபய கரங்களோடு துன்பப்படுபவர்களுக்குத் துணை செய்வதற்கு முன்வரல் வேண்டும்.

விலை போட்டு வாங்க முடியாத பெருஞ் சொத்து கல்வி. கல்வியால் நாம் அனைவரும் உயர வேண்டும். எம்மைச் சூழ்ந்திருக்கும் இருள் நீங்கி இனிய வாழ்வை நோக்கி நாம் வீறுநடை போட புதிய ஆண்டில் அனைவரும் இனிய பிரார்த்தனை செய்வோமாக "யாவர்க்குமாம் இன்னுரை தானே"

செஞ்சொற் செல்வர். ஆறு.திருமுருகன்.

நானிலம் ஏற்றிடச் செய்திடுவாய்!

பொற்புறு புத்தாண்டே வந்திடுவாய் – மண்ணில்
பொறுமை பொதிந்திட நின்றிடுவாய்
நற்றவம் செய்திடும் நம்மறவர் – வீரம்
நானிலம் ஏற்றிடச் செய்திடுவாய்!

நீதி நிலைத்திட வந்திடுவாய் – நிதம்
நீளும் விரத்தியைத் தின்றிடுவாய்
மோதி அழித்திட வந்திடுவாய் – பகை
மோகம் கலைத்திட வந்திடுவாய்!

கானலை நீரென நம்பிடுவோர் – மனம்
கலங்கிக் கழலுதல் திண்ணமன்றோ?
கூனல் நிமிர்த்திக் குவலயம் – காத்திட
கூர்மதி யீந்திட வந்திடுவாய்!

சுண்டிக்குழியூர் த.விதுரன்

ஆண்டவனே துணையாக இரு!

பிறக்கின்ற புதுவருடம் எங்களுக்குப்
பெருமவலம் தந்திடாது வர வேண்டும்
மறக்கின்ற நிகழ்வெல்லாம் இனி வ்ராது
வாழ்வுதனை இனிதாக வாழ வேண்டும்
திறக்கின்ற அமைதிவழி நல்லதாகச்
சிறப்புடனே நாம்நடக்கச் செய்ய வேண்டும்
அறத்தினையே நம்புகின்ற மாந்தருக்கு
ஆண்டவனே துணையாக இருக்க வேண்டும்

- கவிஞர் வ.யோகானந்தசிவம்.

பணித்திடப் பான்மையீவாய்!

புத்தாண்டே யுன் வரவு
பூரிப்பை யீந் தென்றும்
சத்தீய வந் திடுவாய்
சமத்துவத்தைத் தந்திடுவாய்

வெறுமைக்குள் வாழ்ந் ததனால்
விரத்திற்கே வித் திட்ட
சிறுமை தனைக் களைந்து
சிறப்பீய வந்திடுவாய்!

இடியுடன் மின்னல் சேர்த்து
இடரினைத் தந்த போதும்
விடிவினை விளக்கும் வீரம்
விரிந்திட வழி சமைப்பாய்

அரசியற் சூதாட்டத்தில்
அமிழ்ந்திடும் மனித நேயம்
பரந்தவிப் புவியின் கண்ணே
பணித்திடப் பான்மை யீவாய்!

உண்மையை உணர்த்த வாராய்!
உறவினை வளர்க்க வாராய்!
தின்மையைத் தெருட்ட வாராய்!
திறல்தமை வளர்க்க வாராய்!

கூத்தாடிவீதி சு.குஞ்சிதபாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைகளை நிறுத்துங்கள்

அண்மைய நாட்களாக வடக்கிலும் கிழக்கிலும் படுகொலைகள் அதிகரித்து வருகின்றன. விடுதலைப்புலிகள், அரச படையினர், தமிழ் பொதுமக்கள், முஸ்லிம்கள் மற்றும் மாற்றுக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என நாள்தோறும் பலர் கொல்லப்பட்டு வருகின்றனர்.

கொலைகளை செய்பவர்களுக்கு அது மிக இலகுவான காரியமாக இருக்கலாம். ஆனால் ஒரு உயிரை பறிகொடுக்கின்ற அந்தக் குடும்பத்தினது நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களது துயரை எண்ணிப்பார்க்க வேண்டும். கொலையாகின்ற பலரைப்பார்த்தால் அவர்கள் திருமணம் செய்து மனைவி குழந்தைகளுடன் வாழ்ந்தவர்கள். அந்தக்குடும்பத்தினை காப்பாற்றியவர்கள். இவர்கள் கொல்லப்பட்ட பின்னர் அந்தக் குடும்பத்தின் கதியென்ன? மனைவியின் நிலையென்ன? எவ்விதம் அவர்கள் வாழமுடியும்? உணவுக்கு என்ன செய்வார்கள்? ஏனைய அத்தியாவசிய தேவைகளை எவ்விதம் பூர்த்தி செய்வார்கள்?

அக்குடும்பத்தின் குழந்தைகளை எடுத்துக் கொண்டால் தந்தை இல்லாத துயரை, எவ்விதம் அவர்களால் தாங்கிக்கொள்ள முடியும்? தந்தையின் பாசத்தினை, பிரிவினை அவர்கள் வேறு எங்கு ஈடு செய்யமுடியும்? தந்தையின் இழப்பினை அக்குழந்தைகளால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? எல்லாவற்றிற்கும் மேலாக அக்குழந்தைகளுக்கு கல்வியை வழங்கி ஒரு நல்ல எதிர்காலத்தை காட்டுவது யார்?

மறுபுறம் கொலையுண்டவர்களின் தாய் தந்தைக்கு யார் ஆதரவு? வயதான காலத்தில் அவர்களுக்கு இந்த இழப்பு எவ்வளவு பெரிய தாக்கமாக அமையும்? மேலும் கொலையுண்டவர்களுக்கு சகோதர சகோதரிகள் இருந்தால் அவர்களுக்கு உதவுவது யார்? கல்வி கற்கின்றவர்களாக இருந்தால் தொடர்ந்து உதவுவது யார்?. சகோதரிகளது தேவைகளை பூர்த்தி செய்து அதிகளவில் சீதனம் எதிர்பார்க்கின்ற இன்றைய

சூழலில் அவற்றையெல்லாம் வழங்கி திருமணம் செய்து வைப்பது யார்?

இப்படி ஒரு உயிருக்கு பின்னால் ஆயிரமாயிரம் கடமைகளும், இழப்புகளும், துன்பங்களும் பின்னிப் பிணைந்துள்ளன. கொலை செய்பவர்களுக்கு இதுவெல்லாம் ஒரு பொருட்டேயல்ல. கொல்ல வேண்டும், ஆளை முடிக்க வேண்டும். அவ்வளவு தான். கொல்லப்படுவது தன்னைப்போன்ற இன்னுமொரு மனிதப்பிறவி தானே என்று சிந்திக்கக்கூட முடியாத அளவிற்கு கொலைவெறி மனிதத்தை மறைக்கின்றது.

கொலைக்கு பல காரணங்களை கூறலாம். எதிரி, மாற்றுக்கருத்துகளை உடையவர்கள், துரோகி இப்படிப்பல. ஆனால் அரசியல் ரீதியான அல்லது மாற்றுக்கருத்தியல் ரீதியான வேறுபாடுகளைக் கொண்ட ஒருவரை கொல்வது தானா தீர்வு? மறுபுறம் மக்களது விடுதலைக்காக போனவர்களை பணம், சுகத்திற்காக எதிரிகளோடு சேர்ந்து கொலை செய்வது சரியானதா?

ஒவ்வொருவருக்கும் தாம் விரும்பிய ஒரு கொள்கையை கடைப்பிடிக்கும் உரிமை இல்லையா? அவ்விதமே அது மாறுபட்டதாயினும் கொலை என்பது ஒரு மிகப்பெரிய தண்டனை, அழிவு இல்லையா? கொலை செய்பவர் ஒரு கொள்கையை வைத்திருக்கலாம். அதற்கு மாற்றானவர்கள் இவரை கொல்ல முயற்சிக்கலாம். அல்லது இவர் மாற்றுக்கருத்துக்காரரை கொல்ல முயற்சிக்கலாம் அப்படியென்றால் இதன் முடிவுதான் என்ன?

கொல்லப்படுபவர் யாராக இருந்தாலும் அவர்

- சாதாரணன்

அரசனானாலும் ஆண்டியானாலும் விடுதலை வீரரானாலும், துரோகியானாலும், தமிழரானாலும், முஸ்லிமானாலும் அந்த குடும்பத்திற்கு கவலை, துயரம், இழப்பு ஒன்று தான். கண்ணீர் ஒன்றுதான். அழுகை ஒன்று தான். துப்பாக்கிகளுக்கு இவை புரிவதில்லை. அவற்றிற்கு தெரிந்தது கொலை மட்டுமே. அதன்பின் இன்னுமொரு கொலை. பின்னர் இன்னுமொன்று.

தற்போது கூட வடகிழக்கில் சில அரசியல்வாதிகள் இனக்கொலைகள், கலவரங்கள், வன்முறைகளுக்கு பின்னால் இருப்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தமது சுயநலத்திற்காக, பட்டம் பதவிகளுக்காக உயிர்களை பலியெடுக்கும் இவர்களுக்கு இருதயம் இரும்பால் செய்யப்பட்டதா? அல்லது சாகா வரம் பெற்றவர்களா?

எனவே யாராக இருந்தாலும், என்ன காரணமாக இருந்தாலும் கொலைகள் வேண்டாம். தயவு செய்து கொலைகளை நிறுத்துங்கள், மக்களுக்காக, மக்களது கண்ணீருக்காகதயவு செய்து கொலைகளை நிறுத்துங்கள்.

வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன. அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டி.பி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல்முகவரி :- villippu@yatv.net

சகோதர மொழியிலிருந்து சில துளிகள்

துப்பாக்கியுடன் நான்

உங்களை குறிவைத்து
உங்களை அடக்கிவைத்து
உங்களை தடுத்து நிறுத்த
எனக்கு துப்பாக்கி தந்தனர்

இதில் எனக்கு உடன்பாடில்லை
என் பிரச்சனை வேறு
வீட்டில் வறுமை
கட்டிலில் அப்பா
கட்டிக்காக்கவேண்டிய
தட்டிக்கழிக்க முடியாத
குடும்பப்பொறுப்பு

ஏழை எனக்கு ஏது தொழில்
எல்லாம் அந்த
ஏமாற்று செல்வந்தர் கையில்

வருமானத்திற்காக
வந்தேன் படைக்கு - இப்போது
உங்கள் ஊரில்
உங்கள் எதிரியாக
துப்பாக்கியுடன் நான்

ரஞ்சன் ஐயரட்ண

கருத்தாடல் களம்

மலையக மக்களை கைவிடவில்லை.

மலையக மக்கள் குறித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்ற கட்டுரையை விழிப்பின் பதிவுகளில் வாசிக்கமுடிந்தது. இதன் மூலம் மலையக மக்கள் எவ்வளவு தூரம் வடகிழக்கு மக்களையும் புலிகளையும் நம்பியுள்ளனர் என்பதை என்னால் விளங்கிக்கொள்ள முடிந்தது. ஆனால் விடுதலைப்புலிகள் சுயநலமாக தமது மக்களது விடுதலையை மட்டுமே நோக்கமாக கொள்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. சில அரசியல் கள நிலமைகள் காரணமாக வெளிப்படையாக இது பற்றி கூறாவிடினும் நிச்சயமாக இவ்விடயம் அவர்களது சிந்தனையில் இருக்கும் என்றே நான் நம்புகிறேன். அது மட்டுமல்ல வடகிழக்கு மக்கள் ஒருபோதும் மலையக தமிழ் மக்களை கைவிட மாட்டார்கள் என்பதை என்னால் உறுதியாக கூறமுடியும்.

ஆர். பிரதாபன்.
யாழ்ப்பாணம்.

முஸ்லிம் சமூகம் செயற்படும்

கிழக்கு படுகொலை சம்பவங்களில் முஸ்லிம் அமைச்சர்களின் சம்பந்தமானது எங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. கடந்த காலங்களில் முஸ்லிம்கள் மீதான வன்முறைக்கு எதிரான போராட்டங்களை நடத்திய முஸ்லிம் சமூகம் நிச்சயம் இந்த துரோகத்திற்கு எதிராகவும் செயற்படும். செயற்படவேண்டும் என்பதே எனது கருத்து.

ஏ.எம். முஹமட் இர்பான்
வாழைச்சேனை

புலிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

முஸ்லிம் சமூகம் மீதான தாக்குதல்கள், வன்முறைகள் தொடர்பில் தற்போது புலிகள் ஓரளவு நம்பகத்தன்மையாக நடந்து கொண்டாலும் யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம்களை வெளியேற்றியது, கிழக்கில் படுகொலைகளை மேற்கொண்டது போன்ற காரணங்களினாலும் போரினால் முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றவகையிலும் அரசாங்கத்தைப் போலவே விடுதலைப் புலிகளும் முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பு குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஐ.எம். நஸ்ரினா ஹக்
சம்மாந்துறை

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை - 08

அவ்வந்நாட்டின் அரசியலமைப்பினால் அல்லது சட்டத்தினால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் செயல்களுக்காக தகுதி வாய்ந்த தேசிய நியாய சபைகளினால் வழங்கப்படும் பயனுறுதியுடைய பரிகாரத்திற்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவர்களாவர்.

உறுப்புரை - 09

ஒரு தலைப்பட்ட மனப்போக்கான வகையில் கைது செய்யப்படுதல், தடுத்து வைத்தல், நாடு கடத்தப்படுதல் ஆகியவற்றுக்கு எவரும் உட்படுத்தப்படலாகாது.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

கண்டது.. கேட்டது.. படித்தது..

கலாநிதி சி. க. சிற்றம்பலம் எழுதிய

யாழ்ப்பாண தொன்மை வரலாறு

என்ற நூலில் இருந்து

சிங்கள மக்களின் வரலாற்றினை அறிந்து கொள்வதற்குரிய இலக்கிய தொல்லியற் சான்றுகள் ஆராயப்பட்டது போல தமிழ் மக்களின் வரலாற்றினை விளக்கும் தொல்லியல் சான்றுகள் விரிவான முறையில் ஆராயப்படவில்லை.

இந்நாடு சிங்கள பௌத்தர்களுக்கே உரிய நாடு என்ற நோக்கில் எழுதப்பட்ட பாளி நூல்களிலே தமிழரின் வரலாற்றினை பற்றிய விரிவான தடயங்கள் காணப்படவில்லை. சிங்கள அரசின் வரலாற்றிலே தமிழ் மக்களின் தலையீடுகள் ஏற்பட்ட போதுதான் தமிழ் மக்கள் பற்றிய குறிப்புகள் இவற்றில் உள. இத்தகைய குறிப்புகள் தமிழ் மக்களின் வரலாறு பற்றி அறியப்போதிய சான்றாதாரங்களாக அமையவில்லை.

தமிழ் நூல்களாகிய கைலாய மாலை, வையாபாடல் , யாழ்ப்பாண வைபவ மாலை ஆகியன நல்லூர் அரசின் எழுச்சிக்காலத்தில் எழுதப்பட்ட போதிலும் நல்லூர் அரசு பற்றிய விரிவான சான்றுகள் இவற்றிலும் இல்லை. அதுமட்டுமன்றி இவ்வரசிற்கு முன்னர் உள்ள காலப்பகுதி பற்றி அங்குமிங்குமாக தொடர்ச்சியற்ற முறையில் தான் குறிப்புகள் சில உள.

தொல்லியற் சான்றுகளை நோக்கும் போது சிங்களஅரசுகள் நிலைத்திருந்த பகுதிகளோடு ஒப்பிடுகையில் வடபகுதி பெரும்பாலும் தொல்லியலாளர்களின் கவனத்தினை ஈர்க்காத பகுதியாகவே விளங்கியுள்ளது.

இந்நிலையில் ஈழத்து வரலாற்றினை எழுதியோர் பாளி நூல்களை மூலாதாரமாகக்கொண்டு எழுதியதாலேயே தமிழ் மக்கள் இன்று செறிந்து வாழும் பிரதேசங்களில் அவர்களின் வரலாற்றுக்குரிய பங்கினை அளிப்பதற்கு பதிலாக சிங்கள தலைநகர்களுக்கே முக்கியத்துவம் கொடுத்தனர். தமிழ் மக்களின் பிராந்தியங்களுக்குரிய இடத்தினை அவை நல்கவில்லை. இருந்தும் தமிழ் மக்களின் பங்களிப்பு பற்றியும் வடபகுதி ஈழத்து வரலாற்றில் பெற்றிருந்த முக்கியத்துவம் பற்றியும் இந்த நூற்றாண்டின் இருபதுகளில் சேர் போல் பீரிஸ் கந்தரோடையில் மேற்கொண்ட மேலாய்வுகளும் இதனைத் தொடர்ந்து இராசநாயக முதலியார், சுவாமி ஞானப்பிரகாசர் போன்றோர் இப்பகுதி வரலாறு பற்றி எழுதிய நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் வெளிவந்திருந்தும் கூட ஈழத்து வரலாற்றிலே தமிழ் மக்களின் பங்களிப்பையும் குறிப்பாக வடபகுதிக்குரிய இடத்தினையும் சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் அங்கீகரிக்கவில்லை.

இவ்வார விழிப்பில்...

- சுனாமிப் புனரமைப்பு ஓர் மீளாய்வு
- கிழக்கில் சுனாமிப்பாதிப்புற்றோரும் தொழில் பிரச்சினையும்
- தென்னிலங்கையில் சுனாமி அபிவிருத்தி ஒரு பார்வை
- வடக்கில் யுத்த பீதியுடன் சுனாமிப்பாதிப்புற்றோர்.
- கிழக்கு கரையின் அழைப்பு

சமாதான நிகழ்வு

தேசிய சமாதானப்பேரவையின் ஆதரவில் தெற்கிலிருந்து சுமார் 60பேர் கொண்ட ஊடகவியலாளர் குழுவொன்று இம்மர்த ஆரம்பத்தில் திருகோணமலயின் பல பகுதிகளுக்கும் சென்று நிலமைகளை பார்வையிட்டது. திருகோணமலை நகரம், கிண்ணியா, ஆலங்கேணி போன்ற பகுதிகளில் போரினாலும் சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட மக்களையும் இவர்கள் சந்தித்து கலந்துரையாடினர்.

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ' அலைவரிசையில் திங்கள் இரவு 7.30 மணிக்கும். TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பக்க வடிவமைப்பு (கணனி) - சிற்றம்பலம் கணேசன்

உதயன் புத்தாண்டுச் சிறப்பு மலர் 2006

தினங்கள் நிறைந்த ஆண்டு மறைந்து இயல்பு மலர புத்தாண்டை வரவேற்போம்

இன்று 2006 ஆம் ஆண்டின் முதல் நாள்:

புதிதாக, முதன் முதலில் வருகை தரும் எவரையோ அல்லது எதனையோ வாழ்த்தி வரவேற்பது தமிழ் இனத்தின் பாரம்பரிய பண்பாடு.

அந்த வகையில் இன்று புதிதாகப் பிறக்கும் புத்தாண்டையும் வாழ்த்தி வரவேற்போம்.

எம்முடன் ஏதோ ஒரு வகையில் சம்பந்த முற்றி ருந்து, எம்மை விட்டு விலகிச் செல்லும் எவருக்கோ அல்லது எதற் குமோ நன்றி தெரிவித்து வழியனுப்பி வைத்தலும் எம்மினத்தின் பண்பாட்டு வழக்க மொன்றோ.

அந்த வகையில் கடந்த ஓராண்டு காலமாய் எம் வாழ்க்கை ஒட்டத்தில் பங் கேற்று பிறந்து, வளர்ந்து, தேய்ந்து, மறைந்த 2005 ஆம் ஆண்டையும் வாழ்த்தி வழியனுப்புவோம்.

தமிழர் தம் வாழ்வு பண்டைய கலாசார பாரம்பரியத்துக்குப் பாதிப்பேதும் ஏற்படா வகையில் இடம் பெற வேண்டு மென்ற எதிர்பார்ப்பு சமுகத்தின் புத்தி ஜீவிகள் உட்பட பல தரப்பினரின் மத்தியிலும் இன்று காணக் கூடியதாகவுள்ள பொது வான எதிர்பார்ப்பாகும்.

தமிழர்களின் வாழ்க்கை நெறி கட் டுக்கோப்புடன் கூடிய பழக்க வழக் கங்களை முதன்மைப்படுத்தும் வகையில் அமைவன. அப்பழக்க வழக்கங்கள் உரிய, உயரிய முறையில் கடைக் கொள்ளப்படு வதன் மூலமே ஒழுக்க சீலராய் தமிழர்கள் மதிக்கப்பெறும் வாய்ப்புக்கு வழி கமைத் தது. அந்த வகையில் குடும்பநிலை மட் டத்தில் அத் தனிப்பட்ட ஒழுக்க சீலங்கள் சமுக மட்டத்தின் மதிப்பையும் கௌர வத்தையும் பெற முடிந்தமையால் குடும்பங்கள் யாவும் சமுகத்தின் நெருங் கிய அங்கங்களாயின. இச்சீலம் மிக்க ஒழுக்கக் கட் டுக்கோப்புடன் இயங்கும் குடும்பங்கள் பல இணைந்து உருவாகும். சமுதாய மொன்று ஆரோக்கியம்மிக்க தொன்றாய் அமைந்ததுடன் மற்றனைத் துத் துறைகளிலும் நேரிய வளர்ச்சிகாண வழிவகுத்தது. அதன் பலனாய் ஆத்ம பலமும், அயரா உழைப்பும், நேரிய கட்டுக்கோப்புடன் கூடிய நல்ல நாடொன்று உருவாக வழி பிறந்தது. நாடு என்ற விருட்சம் அதன் ஆரோக்கியம் மிக்க கிளைகளாம்சமுதாயங்களின் செழிப் பாலும், உறுதியான பலமிக்க ஆரோக் கியமான அடிவேர்களாம் குடும்பங்க ளாலும் தாங்கப்பட்டுத் தலை நிமிர்ந்து நின்று உலகுக்குப் பயன் ஈந்தது.

அத்தகு நற் பலன்தரும் - நல் நிழல் தரும் மரங்கள் நிறை சோலையே இப் பரந்த உலகு. அது இப் பிரபஞ்சத்தின் அடி நாதம். பிரபஞ்ச இயக்கமும் அதன் வளர்ச்சியும் அத்தகு சீரிய ஒழுக்கம், கட் டுப்பாடு, செயலூக்கம் இருப்பதை பிற ருக்கு ஈந்தும் - பிறர் வசமுள்ளதில் வேண்டியதைப் பெற்றும்- செயற்பட விளைந்ததால் உருவான புரிந்துணர் வும், இணக்கப்பாடும் மட்டுமல்லாது பரஸ்பர அன்னியோன்யம், தியாக உணர்வு, மனித ஆயம் ஆகிய பண் பாட்டு வெளிகாட்டல் களால் மனித இனம் மற்றெல்லா உயிரினங் களில் நின்றும் வேறுபட்டுத் தனித்துவமாக இயங்கி, மிளிர்ந்து, உயர்ந்து, சிறந்தது. இதுவே மனித வாழ்வியல் வளர்ச்சியின் இரகசியம். ஆண்டாண்டு காலமாய் இப்புவி இயக்கத்தின் அடிப்படை இரகசியம் அது.

சோர்வு வரும் நேரத்தில்தான் தத்துவங் கள் பிறக்கின்றன. ஒவ்வொரு மனிதனது வெற்றிக்கும் அனுபவ அறிவும் முன்னோ ரது அனுபவங்களுமே காரணமாய் அமை வன.

அந்த வகையில் தமிழ் மொழி காலத் தால் பழமை வாய்ந்தது. தமிழ் மொழி பேசி வாழ்ந்த மக்களின் தொன்மையான பண்பா டுகள், சிறந்துவளர காலத்துக்கு காலம் தமிழ் மொழிசார், அறிஞர்கள், புத்திஜீவி கள், மகான்கள் மற்றும் துறவிகள் என் போர் பலமிக்க, ஆரோக்கியம் மிக்க விழு துகள் போன்று அவதரித்து வாழ்ந்து தம் கூரிய சிந்தனையில் உதித்த சொல்லாலும் எழுத்தாலும் மட்டும் நின்றுவிடாது, தாமே உதாரண வாழ்க்கை வாழ்ந்துகாட்டி தமிழ் இனத்தை வழிப்படுத்தி, நெறிப்படுத்திய தன் மூலம் தமிழ்மொழி ஆல விருட்சமாய் விழுதுகள் பரப்பி, பரந்து செழித்து உல குக்கு குளிர்தரு நிழல் ஈந்து அவ் உலகு உய்ய வழிசமைத்தது.

வேக மான உலக இயக்கத் தில் பழையன கழி தலும் புதியன புகு தலும் வழுவில என்றையால்கால ஒட்டத்தில் நமது பண்பாட்டு விழுமி யங்களில் பற்பல மாற் றங் களும் புதிய பல தோற்றங்களும் உரு வாக்கம் பெற ஏதுவாயின. இந்த விதத்தில், கலாசார பண்பாட்டுப்

பிறழ்வுகள் ஏற்பட நேரிட்டபோதிலும், இன் றும் கூட நாம் எமது தொன்மை மிகு பல

12ஆம் பக்கம் பார்க்கவும்

அன்பர்கள், நண்பர்கள் வாடிக்கையாளர்
அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

BREAKTHROUGH 3 YEAR WARRANTY*

HERO HONDA
World No. 1
Two-Wheeler Company

PASSION,
PASSIONPLUS,
CBZ, CBZ STAR,
AMBITION 135
இவற்றின் கெற்லைட், வைசர் செற்
யாழ் விலை 3900/=



இரத்தினகோபாலஸ்

RG

இல.65,63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 9231, 6185, 0777 340056.

HERO HONDA GENUINE PARTS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் புத்தாண்டுச் சிறப்பு மலர் 2006

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு எமது புதுவருட வாழ்த்துக்கள்.

அனைவருக்கும் எமது இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்

புதுவருட கால அனுபவமுள்ள
பொற்தொழிலாளர்களின்
கைவண்ணத்தில் உருவாகும்
புதிய டிசைன்களை
இன்றே உங்கள் முன்தருவதில்
முன்னணியில் திகழ்பவர்கள்.

நிஷானந்தா ஜுவல்லரி
இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021-222-7985, 0777 732702.

நிறைந்தா சமாதனம் எம்மிடம் சேர அனைவருக்கும் எம்மினிய புதுவருட நல்வாழ்த்துக்கள்

அழகுக்கு அழகுதரும் நவநாகரிக ஆடைகளுக்கு நம்பகமான ஸ்தாபனம்

காவேரி சிலிக்ஸ்

அழகுமிக்க காவேரிக்கு
விஜயம் செய்யுங்கள்!

இல. 48, பெரிய கடை, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 2333

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு எமது புதுவருட வாழ்த்துக்கள்.

யாழ். நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக்காட்சியகம்

Style Park
Perfect Collection
ஸ்ரைல் பார்க்

முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சியறையில் யாழ். நகரில் குறைந்த
விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள், நிகரில்லாத்தரங்கள்
அழகிய புடைவைத் தினுசுகளின் றெடிமேட் சாம்ராஜ்ஜம்

No. 171, K.K.S. Road, Jaffna. T.P: 8383
இல. 171, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பாகள், வாடிக்கையாளர்கள், ச அவருக்கும்
எம்மினிய புதுவருட நல்வாழ்த்துக்கள்.

மேசைத் தொலைபேசி
அதிரடி விலையில்

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல்
எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை
என அறியத்தருகின்றோம். அத்துடன், அன்ரனா மூலம்
இயங்குகின்றது. மொபிடெல் இணைப்பு ஸ்ரீலங்கா
ரெலி கொம்முடன் முற்று முழுதான துணை நிறுவனம்

கையிருப்பு முழுயும் முன் உடனே விரையுங்கள்
டயலொக். G.S.M-500/=பகேஜ், மொபிற்றல். G.S.M-300/=பகேஜ்

ஒருவருட
உத்தரவாதமுண்டு

IDD லோக்கல் இணைப்புக்கள்
உடன் எப்பிரதேசத்திற்கும்
தெளிவான முறையில்
வீடுகளில் பூட்டித்தரப்படும்.

IDD 25/= மட்டும்
விலை 9,500/=
மேலதிக விவரங்களுக்கு

உள்வரும் அழைப்பு
முற்றிலும் இலவசம்

நியூ பவர் செலூலர் ரேடிங் கம்பனி

இல. 205/1, கஸ்தூரியார் வீதி,
(ராஜா தியேட்டர் அருகில்)யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் புத்தாண்டுச் சிறப்பு மலர் 2006

எம்மவர்கள் வாழ்வில் அமைதி ஒளி நிலைபெற அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எம்மிடம் புதி வருட நல்வாழ்த்துக்கள்!

- சகலவிதமான கேக், ஐஸ்கிறீம், குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கான பொருள்கள்
- கைத்தொழில் மூலப்பொருள்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் ஆயுள்வேத மருந்துச் சரக்குகள், அறோட் மா ஆகிய அனைத்தையும் பெற்றிட:

ஸ்ரீகாந் எசன்ஸ் அன் கூறோசரீஸ்

இல.161A, கே.கே.எஸ். வீதி (சத்திரத்துச் சந்தி), யாழ்ப்பாணம். தொ.பே.2219

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

மானவ மணிகளே! பாடசாலை அதிபர்களே!

மலிவு விற்பனை மலிவு விற்பனை

புது ஆண்டையொட்டி 10% தொடக்கம் 50%வரை விசேட கழிவு வழங்கப்படுகின்றது.
எங்கள் ஸ்தாபனத்தில் சகலவிதமான புத்தகங்கள், தரஉள்ளீட்டுப் பொருள்கள், அலுவலக உபகரணங்கள், மாணவர் பயன்படுத்தும் பொருள்கள் உங்கள் தேவை எதுவாயினும் பெற்றுக்கொள்ளலாம்.
2006 ஆம் ஆண்டுக்கான எங்கள் மலிவு விற்பனை தை மாத இறுதிவரை நடைபெறும்.
எந்தப் பொருள்கள் ஆனாலும் தரமாகவும் உத்தரவாதத்துடன் பொருள்களை உங்கள் காலடியில் கிடைக்குமாறு ஏற்பாடு செய்பவர்கள்
46 வருடங்களாக இலங்கைத் தீவு எங்கிலும் கல்விச்செல்வத்தை அள்ளி வழங்கி லட்சக்கணக்கான வித்தகர்களை உருவாக்கிய ஸ்தாபனம்.
எங்கள் ஸ்தாபனம் பணம் மட்டும் சேர்க்கும் நிறுவனம் அல்ல. ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!
Dec.10 ஆம் திகதி முதல் Jan.30 ஆம் திகதிவரை சனிக்கிழமை முழுநாளும் ஞாயிறு பிற்பகல் 3 மணி வரைக்கும் உங்களுக்காகத் திறந்திருக்கும்.

ஆல்சிலேன் டிஸ்ரிபியூடர்ஸ்

இல.212-214, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.021-222 5542

பிரபா பார்மசி

315, ஸ்ரான்லி வீதி,
(ஆரியகுளம் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Sensodyne

அன் குறோசரீஸ்

உங்கள் தேவைகளுக்கு எங்களிடம்...
- ஆங்கில மருந்து வகைகள்
- பால்மா வகைகள்
- குழந்தைகளுக்கான ஊட்டச்சத்துகள்
- பாடசாலை மாணவர்களுக்கு அடியோசப் புத்தகங்கள், பென்சில், பேனா மற்றும் கல்வி உபகரணங்கள்
- குளிர்பான வகைகள் இவற்றுடன்
- Kit Card
- Mobile Card
- Kodak Film Roll
- Konica Film Roll

மற்றும் அழகுசாதனப் பொருள்கள் இன்னும் இனனோரன்ன பொருள்கள்..

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலனே எங்கள் நோக்கம்.

நாளைய மேன்மைகளுக்குத் தருணம் - இன்றே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் புத்தாண்டுச் சிறப்பு மலர் 2006

ஒன்பதாம் பக்கத் தொடர்ச்சி

பண்பாட்டு நடைமுறைகளை அதே வகையில் பேணிப் பாதுகாத்துக் கடைக் கொள்வது எம் கடன் எனக் கருதியே வாழ்ந்து வருகிறோம். இன்றைய கால கட்டத்தில் அவ்விதம் நாம் கடைக் கொண்டொழுகும் பண்பாட்டுப் பழக்கங்களில் பிரதானமான

நாட்டில் அமைதியை ஏற்படுத்துமா புத்தாண்டு?

தொன்றாய் கொள் ளத்தக்கதே இப் புத்தாண்டுக் கொண்டாட்டம் எனக் கூறிக் கொள்ள இயலும். இன்றைய விஞ்ஞான தொழில் நுட்ப யுகத்தில் இன்றைய உலகு நிருபிக்கும் சகல உண்மை நிறுவல்களையும் இற்றைக்கு எத்தனையோ ஆண்டுகட்கு முன்னரேயே பிழையற வகுத்து தொகுத்தளித்து, சீரான ஒழுங்கில் அமைந்த இப் பிரபஞ்சத்தின் சூட்சும இயக்க முறையைத் துல்லியமாய்க் கணக்கிட்டு எமக்களித்த எம் முன்னோரின் திறமையையும் மதிநுட்பமும் எம்மையெல்லாம் பெருமையும் ஆச்சரியமும் கொள்ளவைக்கின்றனவல்லவா?

அந்த வகையில் இன்று ஆரம்பமாகும் வருடம் அரசியல் சமுதாய மற்றும் தனிப் பட்ட குடும்ப ரீதியில் எமக்கு அவ நம்பிக்கை, மனச்சோர்வு என்பவற்றை எதிர் கொண்டு நிற்கும் நிலையை ஏற்படுத்தி பிறப்பெடுக்கிறது. கடந்து முடிந்த ஆண்டில் ஏற்றம், இழப்பு, பரிதவிப்பு, மன வெறுப்பு ஆதியாம் உணர்வுகள் மத்தியில் வாழ்ந்த நாம் இன்றைய நாளில் இந்த ஆண்டாவது எமக்கு எதிர்கால சுபிட்சத்தை, வாழ்வில் மகிழ்ச்சியை, நாட்டில் அமைதியை வழங்க மாட்டாத என்ற எதிர்பார்ப்புடன் புத்தாண்டை எதிர்கொண்டு நிற்கிறோம்.

இன்று எமக்கு வேண்டப்படுவது எம் முன் பூதாகரமாக உருவெடுத்து அச்சுறுத்தி நிற்கும் பற்பல சவால்களை வென்றெடுப்பதற்கான ஆத்ம தைரியமே. தோல்வி, துயரம், இழப்பு இவற்றால் மனம் சோர்ந்து பரிதவித்து நிற்கின்றோம். மனித இனச் செயற்பாடுகளால் அரசியல் நிலைப்பாடுகளால் - சமுகத்து அவலங்களால் - குடும்பத்து சிரமங்க ளால் கடந்த பல தசாப்தங்களாக ஏமாற்றப்பட்டதால் ஏற்பட்ட வைராக்கிமும், அனுபவத் தோல்விகள் தந்த பாடங்க ளால் கல்லென இறுகிப்போன மனங்களுடனும் எதையும் சந்தேகிக்கும் - சஞ்சலப்படும்- கற்பனை செய்யும் மனத்தினராய் கலக்கமுற்று, அமைதியற்று நிற்கும் எமக்கு இன்றைய புத்தாண்டு நம்பிக்கை ஒளியை மனங்களில் உருவாக்கட்டும். அனுபவத் தோல்விகள் மன உறுதியை வளர்த்தெடுக்கும் என்பது குட்டக்குட்டக் குனிபவன் மடையன் என்ற உணர்வு நிலையின் வெளிப்பாடு. அந்த வகையில் மலையே எதிர்வரினும் தலையே சுமந்திடுவாய் என மன உறுதி கொள்வோம். எதிர்ப்படும் சோதனைகளை உறுதியுடன் எதிர்கொள்ள வல்ல ஆத்ம பலத்தை எமக்கும் எம்மினத்தை வழி நடத்துவோருக்கும் ஈர்ந்தருளி இரட்சிக்குமாறு எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சி நிற்போம். ஒற்றுமையே பலம் என்பதை நம்பி ஒன்றிணைந்து அல்லல் பட்டு நலிந்தோர்க்கு உதவிக் கரம் நீட்டுவோம். இதனை இப் புத்தாண்டின் பிரதிக்ஞையாக நாமனைவரும் ஏற்றுக் கொள்வோம்.

இயற்கையிலேயே சமுதாயம் தெளிந்த நீரோடும் அருவியை ஒக்கும் அந்த நிலையில் அது நற்பலனும் நல் விளைவும், மன மகிழ்வும் தரவல்லதே. ஆனால் அக்முதாயம் என்ற நன்னீரில் சிறிதளவு சாக்கடை நீர் கலந்திடுமானால் அத்தூய மனங்கமழும் தெளிந்த நீரோடை தன் அந்தமும் அழகும் சோலையும் இழந்து அவலட்சணமாகி மூக்கைத் துளைத் தெடுக்கும் சாக்கடைக் கழிவாய் ஆகி விட நேர்கிறது.

அந்த வகையில், இனத்துக்கே தனித்துவமான நேரிய சீரிய நமது பாரம்பரிய சமுதாய ஆத்மீக பழக்க வழக்கங்களை மறந்து ஒதுக்கிவிடாது அவற்றுக்குப் பழுதுகள் நேரும்வேளை அவற்றை நேர் சீர் செய்து உரியமுறையில் ஆரோக் கியமான ஆத்ம திருப்தி அளிக்கவல்ல இவற்றுக் கெல்லாம் மேலாக அமைதியும் சாந்தியும் நிலைபெறச் செய்யவல்ல சமுதாயமாக எமது சமுதாயத்தை இயங்கச்செய்ய நாமெல்லோரும் ஒன்றிணைந்து கூர்ந்த அவதானத்துடனும் தெளிவான- நேர்மையான- நியாயமான செயற் பாடுகளுடனும் இயங்க முயல்வது இன் றைய காலத்தின் தேவையாய் அமைகிறது.

ஆத்மீக பழக்கவழக்கங்களை வளர்த்தெடுப்போம்...

அந்த வகையில் சீரான சமுதாய பயணத்துக்கு வழி காட்டவேண்டிய புத்திஜீவிகள் அறிஞர் பெருமக்கள், ஆன்றோர், மூத்தோர் என்போரின் வார்த்தைகளுக்குச் செவிமடுத்து மதிப்பளித்து ஏற்று நடந்து எமது சமுதாயத்தை ஏற்றமுடன் இயங்க வைக்க முயல்வோம் என இன்றைய புத்தாண்டு நன்னாளில் நாம் ஒவ்வொருத்தரும் உறுதி எடுத்துக் கொள்வோம்.

பரந்த சிந்தனை வட்டத்தில் நமது தேசம் நமது சமுதாயம் என்ற பரந்த கண்ணோட்டத்துக்கு மேலதிகமாக நமது குடும்பம், நமது உறவுகள் என்ற அடிப்படை அலகு குறித்தும் கவனம் செலுத்தவேண்டியதும் எமது ஒவ்வொருத்தரதும் கடமையாகிறது.

தத்தம் குடும்ப நிலையுணர்ந்து அவ்வவ் நிலைக் கேற்புடைய கடமைகளைப் பொறுப்புடனும் சிரத்தையுடனும் ஆற்ற விழையின் குடும்பம் சிறக்கும் மகிழ்ச்சி நிலவும். துயர்கள் அகலும் சாந்தியும் மனத் திருப்தியும் கிட்டும். அந்த வகையில் செயற்பட்டு தோல்விகளிலிருந்து வெற்றியை அடைந்தும் துயரங்களைத்தாங்கி மன ஆறுதல் கொண்டும் நம் வாழ்வு சிறக்க இப்புத்தாண்டு உதவட்டும்.

அத்தகைய நிலை உருவாக நாட்டிலும் வீட்டிலும் அமைதியும் ஆனந்தமும் வெற்றியும் கிட்ட உறுதியுடன் உண்மையாய் உழைப்போம் என இப் புத்தாண்டு நன்னாளில் நாம் அனைவரும் உறுதி பூண்போம்.

துன்பங்களை, துயரங்களை தோல்வி களை, பேரிழப்புக்களைதந்து எம்மை வருத்திய கடந்த வருடம் எம் மனங்களை விட்டுக் கழிந்து சென்றதாக ஆகட்டும்.

இன்று பிறந்திருக்கும் 2006 ஆம் ஆண்டு எமக்கு மகிழ்வையும் மன நிறைவையும் இயல்பு வாழ்வைத் தரும் நல்லாண்டாக அமைய வேண்டி ஆண்டவனைத் தொழுவோம்.

பொன்வேளன்

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

விவ்வரு ஜுவல்லரி

181, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(வின்சர் தியெட்டர் முன்பாக)

VJ

அசல் 22 காரட் உத்தரவாதத்துடன் புத்தம் புதிய நவீன டிசைன்களிலான அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த இடம்:

அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்

நவநாகரிக நங்கையர் விரும்பும் நவீன ரக ஆடைகளுக்கும்
புத்தம் புதிய டிசைன்களிலான பட்டுப் புடைவைகளுக்கும் நாடவேண்டிய சிறந்த இடம்:

லிட்டில் இந்தியன் பெஷன்

77, கிராண்ட் பஜார், யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 6440

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய புதுவருட நல்வாழ்த்துக்கள்

(C/46961)

தங்க நகையுலகில்... நம்பிக்கை, நாணயத்துடனான நித்தியசேவையாலும், நியாயமான முறையாலும்
நன் நம்பிக்கை பெற்று நகையுலகிலேயே தனியுலகு படைத்து நிற்கிறது...

நித்திய கல்யாணி நகை மாளிகை

ஓடருக்கு நகைகள் அனைத்தும் 22 காரட் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

205/4, கஸ்தூரியார் வீதி, (ராஜா கட்டடத் தொகுதி) யாழ்ப்பாணம். தொ.பே. 021 4[illegible]02[illegible]4, 0777 [illegible]415

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் புத்தாண்டுச் சிறப்பு மலர் 2006

2006 புத்தாண்டு வாழ்த்துக்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் புத்தாண்டுச் சிறப்பு மலர் 2006

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய புது வருட நல்வாழ்த்துக்கள்!

தங்க நகைபுனைவில் தனக்கெனத் தனியிடம்பிடித்து அனைத்து உள்ளங்களிலும் நிலைத்து விட்டது.

▲ உங்கள் தேவைகளுக்கேற்ப தங்க, வைர நகைகளை நீங்கள் பெற்றிட

▲ நவீன மோஸ்தர்களில் மாசிலா நகைகளைப் பெற்றிட

மேசியா நகைமாடம்

111C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் எம்மினிய நத்தார் நல்வாழ்த்துக்கள்

கோடை வெயிலா...
இல்லைக் குளிர் நிலவா...?
அதிசயிக்கவைக்கும் அபாரகூடம்!!

நாவிற்கினிய ஐஸ்கிரீம் வகைகள்...
சர்பத் வகைகள்... நெல்லிகிரஸ் வகைகள்...
மாத்திரமல்ல சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப்பட்ட சிற்றுண்டி வகைகள், கேக், பிஸ்கட் வகைகள்...
இன்னும் இன்னோரன்ன சகலவித பலகார வகைகள் வேண்டிய வகையில் உங்கள் வைபவங்களுக்கு ஓடருக்குப் பெற்றுக்கொள்ள விரையுங்கள்!
உங்களை குளிர்ச்சிக் கடலில் மூழ்கடிக்கும்

5 ஸ்டார் கிறீம் வறுல்ஸ்

131, பிரதான வீதி, யாழ்ப்பாணம். உரிமையாளர்: A.ஜெயக்குமாரன்

எரிக் கனேவ்

மூக்குக் கண்ணாடி அகம்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்:

- புதிய வடிவமைப்பில் நவீன கண்ணாடிகளைப் பெற்றிட...
- முக அமைப்பிற்கேற்ப சங்குப் பற்களைப் பொருத்திட...
- மிதப்புப் பற்களுக்குக் கிளிப் பொருத்திக் கொண்டிட கைதேர்ந்த

ஒரே ஸ்தாபனம் எரிக் கனேவ்

இல.564,566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 2486

கிளைகள்: சுன்னாகம், கொக்குவில் சந்தி

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்:

இலவசக் கண்பரிசோதனையுடன்

- குறைந்த விலையில் சிறந்த தரமான மூக்குக் கண்ணாடிகள்!
- உறுதியான, அழகிய அமைப்பிலான கட்டுப்பற்கள்!
- குறுகிய காலத்தில் பலன்...மிதந்த பற்களுக்கு கிளிப் போடுதல்!
- நீண்டகால அனுபவம், தொழில்நுட்பம் வாய்ந்தவர்கள் தான்...!

P.J.பர்னாண்டோ

பல் கட்டுமிடமும், மூக்குக்கண்ணாடி அகமும்

இல.542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

P.J.பர்னாண்டோ

பிரதான வீதி, யாழ்ப்பாணம். உரிமையாளர்: லயன் A.ஜெயக்குமாரன்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புதுவருட நல்வாழ்த்துக்கள்.

புத்தம் புதிய
ஆடைத் தெரிவுகளை
நித்தம் நித்தம்
அறிமுகம் செய்யும்
ஸ்தாபனம்.

அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

54, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.2899.

25,4, குறுக்குத் தெரு, சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

அன்பர்கள். நண்பர்கள். வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

kit

அளப்பரிய அன்பளிப்புகள் இனாம்

WESTERN UNION MONEY TRANSFER

வெளிநாட்டிலிருந்து உறவினர்கள்
WESTERN UNION மூலம் பணம் அனுப்பி பணப் பரிமாற்றல் இலக்கம் (MTCN 10 இலக்கங்கள்) உங்கள் கைகளில் கிடைத்துவிட்டதா?
வங்கிக்கணக்கு தேவையில்லை, 24 மணி நேரமும் ஒருசில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணத்துடன் அன்பளிப்பும் கிடைக்க உடன்நாடுங்கள்.
மேலும் சகல விதமான தொலைபேசி அட்டைகள் Dialog GSM இணைப்புகள் (SIM) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்,
உள்நாட்டு, வெளிநாட்டுக் கடிதங்கள், பொதிகள் உடனுக்குடன் அனுப்பிட

SRI MURUGAN
TELE COMMUNICATION AGENCY POST OFFICE
303, K.K.S. ROAD, JAFFNA. T.P. : 021 222 5392.
E.mail : srimurugan@eureka.lk
இன்னும் பல சேவைகளையும், அன்பளிப்புகளையும் ஒரே சுரையில் பெற்றுக்கொள்ளவும்.

அன்பர்கள் அனைவருக்கும் எமது புதுவருட நல்வாழ்த்துக்கள்

நவின முறையில்
தங்க நகைகளை
அம்சத்தோடு கூடிய
பம்பே டிசைன்
மெசின் கட்டிங் மூலம்
செய்து பெற்றுக்கொள்ள

உரிமையாளர்: ஐ.சுரேஸ். T.P.: 077 6147358

ஸ்ரீ நாகா பம்பே டிசைன்ஸ் & சென்ரர்

288, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். கட்டிங்

அனைவருக்கும் எம்மினிய புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

நவநாகரிக நவீனமய ஆடைகள்,
புத்தம் புதிய சாறி வகைகள், நங்கையருக்கேற்ற ஜவுளிகள்
அனைத்துக்கும் அதி சிறந்த உன்னதமான இடம்

மில்லேனியம் பெஷனர்
& பொம்பே பஸார்
10, POWER HOUSE RD., GRAND BAZAAR, JAFFNA.
(மலாயள் கபே முன்பாக)

T.P. 0777 311486
MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR

அன்பர்கள். நண்பர்கள். வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய புது வருட நல்வாழ்த்துக்கள்

கொதிக்கும் வெயிலிலும் உங்களைக் குளிரவைத்து, களைப்பு நீக்கி புதிய உற்சாகத்தை அளிக்க... சுத்தமாக, சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட ஐஸ்கிறீம் வகைகள்... மற்றும் அருசுவை உண்டிகளுக்கு

ஆல் நியூ அருண் ஐஸ்கிறீம்

133, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

எமது அன்பு வாடிக்கையாளர்களுக்கு எம்மினிய புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சிவா ரெக்ஸ்ரைல்ஸ்

ஏக விநியோகஸ்தர்கள்:

சிவா ரெக்ஸ்ரைல்ஸ்

இல.27, பெரிய கடை, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 5724.

புடைவைத் தினுசுகள், கூறைச் சேலைகள், பஞ்சாபி, எம்கேட் அன் பிளவுஸ், சேட்டிங், சூட்டிங்ஸ், சேட், டெனீம், ஜீன்ஸ், T-சேட், (ரெடிமேட்) மற்றும் அனைத்துவகையான ஆடைத்தெரிவுகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழரை இந்திய ஆதிக்கத்தின் மீட்சியாகவே சிங்களத் தலைவர்கள் முன்னர் சித்தரித்தனர்

''கம்பத்தில் ஏறிநின்று சாகசம் காட்டினாலும் ஐம்பது சதம் வாங்க தரைக்குத்தான் இறங்க வேண்டும்'' என்றொரு பழமொழி உண்டு. அந்த வகையில் இலங்கையின் அரசியலை அதன் பொருளாதாரப் பொறிமுறைக்கூடாக நோக்க வேண்டியது அவசியமாகும். காலத்திற்குக் காலம் இலங்கை அரசியலானது நரபலி எடுக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. அந்த நரபலி ஒரு பொருளாதாரப் பொறிமுறையிலிருந்து பிறக்கின்றது.

மு.திருநாவுக்கரசு

★ இலங்கை அரசியலானது உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியில் இனப்பிரச்சினையின் மீது மையங்கொண்டு செயற்படுகிறது. அதன் அர்த்தம் இனப்பிரச்சினைதான் அரசியற் பிரச்சினை என்பதல்ல. மாறாக இலங்கையின் உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியிலான அனைத்துப் பிரச்சினைகளும் இனப்பிரச்சினை மீது திசை திருப்பப்பட்டு, இலங்கை அரசியலின் அனைத்துச் சுமைகளும் தமிழ்பேசும் மக்களின் முதுகில் ஏற்றப்பட்டுவிட்டன.

★ அரசியல் ஆதிக்கம் குடும்ப ஆதிக்கத்திற்கூடாக இன ஆதிக்கத்தில் மையங்கொள்வதால், அரசியல் ஆதிக்கத்துடன் தொடர்புறும் அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகளும் இன ஆதிக்கத்திற்குள் நிலையெடுத்து விடுகின்றன. ஆதலால் இனப்பிரச்சினை தான் இப்போது எல்லாமாகி விடுகின்றது.

இவ்வாறு வித்தியாசமான கோணங்களில் இலங்கை அரசியல் பொறி முறையைப் பார்க்கின்றது ''கொழும்பு 2007'' என்ற நூல்.

சிறந்த அரசறிவியலாளரும், பிரபல அரசியல் ஆய்வாளருமான ''திரு மாஸ்டர்'' என்று ஆய்வாளர்களாலும் வாசகர்களாலும் மாணவர்களாலும் அறியப்பட்ட மு.திருநாவுக்கரசு இந்த நூலின் ஆசிரியராவார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் எழுதப்பட்டது இந்த நூல். ''சமாதானத்துக்கான யுத்தமா? அல்லது யுத்தத்திற்கான சமாதானமா'' என்ற பிரதான தலைப்பில் பல விடயங்கள் நூலில் அலசி ஆராயப்பட்டுள்ளன.

நூலின் உள்ளடக்கம் உதயனின் ஞாயிறு பதிப்பில் தொடர் சிறப்புக் கட்டுரையாக வெளியிடப்படுகிறது.

1958 ஆம் ஆண்டு இனப்படுகொலை, 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பியின் ஆயுதம் தாங்கிய கிளர்ச்சி அதனை உடனெடுத்து எழுந்த ஆயுதம் தாங்கிய தமிழீழ விடுதலைப் போராட்டம், 1977, 1981, 1983 கறுப்பு ஜூலை எனத் தொடர்ந்த இனப்படுகொலைகள், 1988-1989 ஜே.வி.பியின் கிளர்ச்சி, தமிழீழப் போராட்டமென இலங்கை அரசு தொடர் நரபலி எடுக்கின்றது. இதனை இலங்கையின் பொருளாதார பொறிமுறைக்களுக்குள்ளால் கூர்ந்து நோக்குவோம். டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ''சுதந்திர'' இலங்கையானது அதுவரை நிலவிவந்த காலனித்துவ பொருளாதாரக் கட்டமைப்பை அப்படியே பேணியது. காலனித்துவ பொருளாதாரத்தின் மூலம் ஏற்பட்ட அமுக்கத்தைத் தமிழ் மக்கள் மீதான சீற்றமாக சிங்கள ஆட்சியாளர் திசை திருப்பியதன் விளைவே 1958 ஆம் ஆண்டு இனப்படுகொலையாகும்.

1948 ஆம் ஆண்டு இலங்கை ''சுதந்திரம்'' அடைந்தது. டி.எஸ்.சேனநாயக்க இலங்கையின் முதலாவது பிரதமரானார். ஆனால், அவர் பிரதமராய் இருப்பதற்குப் பதிலாக பிரித்தானியாவின் இலங்கைக்கான ஆளுநராக (Governor) இருந்தார். அதாவது, இலங்கையின் காலனித்துவ காலத்தில் பிரித்தானியருக்கிருந்த அதே அரசியற், பொருளாதார, இராணுவ நலன்கள் தொடர்ந்தும் அப்படியே டி.எஸ்.சேனநாயக்கவால் பேணிக் காக்கப்பட்டன. ''சுதந்திரம்'' மக்களுக்கு எதனையும் கொடுக்கவில்லை. பத்தாண்டுச் சுதந்திரம் அர்த்தமற்றுப்போனது. மக்கள் பொருளாதார அமுக்கத்திற்கு உள்ளாகினர்.

பொருளாதார வெற்றிட வெளிப்பாடே 1958 இன் இனப்படுகொலைகள்

1956 ஆம் ஆண்டு தனிச்சிங்கள மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அதன் பொருட்டு உரையாற்றிய பண்டாரநாயக்கவின் உரையில் பொருளாதாரப் பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்பட்டு அவற்றிற்கான பழி தமிழ் பேசுவோரின் தலையில் சுமத்தப்பட்டதைக் காணலாம். குடும்ப ஆதிக்கம், இனப்பிரச்சினை என்பவற்றைப் பயன்படுத்தி சிங்கள உயர் குழாத்தின் மூலம் காலனித்துவ அரசியற் பொருளாதாரத்தை இலங்கையிற் பிரித்தானியர் பேணச் செய்தனர். பத்தாண்டுகளில் வளர்ந்த அப்பொருளாதார வெற்றிடத்தில் எழுந்த அமுக்கத்தை இனப்பிரச்சினையாகத் திருப்பியதன் வெளிப்பாடே 1958 இனப்படுகொலையாகும்.

ஆங்கில மூலம் மேல்தட்டு வர்க்கத்திடமிருந்து இடை நிலைக்கல்வி, உயர்கல்வியானது 1956 ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து நகரங்களைக் கடந்து குக்கிராமங்கள் ஈறாக கீழ்த்தர, மத்தியதர வர்க்கத்தினர் வரை விரிந்து பரந்தது. அதேவேளை, தமிழும் கல்விமொழியாக இருப்பதற்குத் தடையில்லாததனால் தமிழ்பேசும் மக்கள் மத்தியிலும் இந்த மாதிரிக் கல்வி கீழ்த்தர, மத்தியதர மட்டம் வரை பரவியது. இதனால், புதிய மாணவர் படை, உயர்கல்வியற்ற மாணவர் படை, வேலையற்ற இளைஞர் படை என்பன பெருக்கெடுக்கத் தொடங்கின. காலனித்துவ பொருளாதாரக் கட்டமைப்பில் மாற்றம் செய்து, நவீன கைத்தொழில் பண்ட உற்பத்தியில் வளர்ச்சியடையாது விடப்பட்ட வெற்றிடத்தில் மேற்படி பொருளாதார, கல்வி, வேலை வாய்ப்புப் பிரச்சினைகள் வளர்ந்து சென்றன.

பண்டாரநாயக்கவின் பொருளாதாரக் கொள்கையானது நாட்டின் கைத்தொழில் வளர்ச்சிக் கேற்றதாய் இருக்கவில்லை. அவரது பொருளாதாரக் கொள்கை மனதிற்கு ரம்மியமானதாக இருந்தது. ஆனால், நடைமுறையில் அவரது பொருளாதாரக் கொள்கை பிரபுத்துவ பொருளாதார முறைக்கு மிகவும் அண்மித்ததாகவே இருந்தது. காலனித்துவ பொருளாதாரத்திற்கு எதிரான கோசங்களை அது எழுப்பியது. ஆனால், நடைமுறையில் அது கைத்தொழில் வளர்ச்சிக்குப் போகவில்லை. உண்மையான அர்த்தத்தில் பண்டாரநாயக்க யுகம் காலனித்துவ பொருளாதாரக் கட்டமைப்பைச் செயல்பூர்வமாகப் பேணிக் கொண்டு அதற்கு மேலதிகமாய் பிரபுத்துவ பொருளாதார சமூக அமைப்பை வலுப்படுத்தியும் வந்தது. இருந்தக் காலனித்துவ கட்டமைப்பை மாற்றுவதற்குப் பதிலாக அதைத் தொடர்ந்து வைத்துக்கொண்டு அத்துடன் கூடவே இன்னொரு பிற்போக்கு முறையான நிலப்பிரபுத்துவ அம்சங்களைச் சேர்த்துக்கொண்டார். இது இலங்கைப் பொருளாதாரத்தை இரட்டைத் தோல்விக்கு இட்டுச்சென்றது.

சுதந்திர இலங்கையின் முதற் பத்தாண்டு காலத் தமது பொருளாதாரத் தோல்வியைத் தமிழ் மக்களின் மீது திசைதிருப்பத்தான் 1958 இனப்படுகொலையைத் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டார்கள். ஆனால், அடுத்த பத்தாண்டில் தொடர்ந்தும் அதனைச் செய்வது சாத்தியமற்றுப் போனது. அதுவே 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பியின் ஏப்ரல் கிளர்ச்சியாக வெடித்தது.

1956 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தனிச்சிங்களச் சட்டத்தின் மூலமான புதிய மாணவப் படையின் தேக்கம் உருவாக பத்தாண்டுக்கு மேல் தேவைப்பட்டது. சிங்களம் மூலமும், தமிழ் மூலமும் கல்விகற்ற இளைஞர் படையின் தொகை 1960களின் பிற்பகுதியில் தேங்கத்தொடங்கியது. இத்தகைய தேக்கத்தை பொருளாதார ரீதியில் அணுகாமல் அதை சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் இனரீதியாக அணுகுவதன் மூலம் பிரச்சினையைத் திசை திருப்ப முற்பட்டது. அதுவே பல்கலைக் கழக அனுமதிக்கான இனரீதியான தரப்படுத்தலாகும். இப்படி தமிழருக்கெதிரான உணர்ச்சியூட்டக்கூடிய செயலின் மூலம் சிங்கள இளைஞர்களைத் திசை திருப்பலாமென சிறிமாவோ பண்டாரநாயக்க நம்பியிருக்கவேண்டும். ஆனால், வெறும் கூட்டல், கழித்தல் கணக்கின் மூலம் ஓர் உண்மை வெளிப்படையாகத் தெரிந்தது. அதாவது முழுத் தமிழ் மாணவர்களினது பல்கலைக்கழக அனுமதிகளையும் வெட்டினாலும் பல்கலைக்கழகம் புகக்கூடியதாயிருந்த சிங்கள மாணவர்களில் கால்பங்கினருக்குக்கூட அனுமதி கொடுக்க முடியாதென்பது யதார்த்த உண்மையாய் அமைந்தது. இதனால், 1970ஆம் ஆண்டுத் தரப்படுத்தலையும் தாண்டி 1971ஆம் ஆண்டு சிங்கள இளைஞர்கள் ஆயுதம் தாங்கிப் போராடப் புறப்பட்டனர். அதுவும் சிங்கள மக்கள் மத்தியில் அரசியற், சமூக, பொருளாதார ரீதியில் அதிகம் பின்தள்ளப்பட்டிருந்த தென்பகுதியைத் தளமாகக் கொண்டு ஆயுதக் கிளர்ச்சி வெடித்தது. அக்கிளர்ச்சியை தனது இரும்புக்கரம் கொண்டு சிறிமாவோ நசுக்கினார். சிங்கள இளைஞர்களினது அரசியற், பொருளாதார, கல்வி, வேலைவாய்ப்புப் பிரச்சினையின் மூலம் தெற்கில் ஆயுதக் கிளர்ச்சி வெடித்தது போலவே வடக்கில் ஆயுதப் போராட்டம் தமிழீழ விடுதலைப் போராட்டம் என்ற வடிவில் ஏறக்குறைய அதே காலத்தில் எழுந்தது.

1987, 1988 ஆம் ஆண்டுகளில் தெற்கு, வடமத்திய, மத்திய மாகாணங்களிலும் மற்றும் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் ஒன்றே கால் லட்சத்திற்கும் அதிகமான ஜே.வி.பி உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் அடையாளம் காணப்படாத ஆயுதபாணிகளால் கொல்லப்பட்டனர். அவ்வேளையில், களுத்துறையில் சுட்டுக்கொல்லப்பட்ட சிலரின் சடலங்கள் தீ முட்டப்படுவதற்காக வைக்கப்பட்டிருந்த காட்சி இது. (நன்றி : A Lost Revolution)

ஜே.ஆர். காலத்து இனப்படுகொலைகளும் பொருளாதார நிலையின் பாற்பட்டதே

உண்மையான அர்த்தத்தில் தெற்கிலும், வடக்கிலும் ஏக காலத்தில் எழுந்த ஆயுதப் போராட்டங்களின் களம் ஒன்றுதான். துரதிஷ்டவசமாக சிங்கள இளைஞர்கள் தாம் ஏற்கனவே ஊட்டி வளர்க்கப்பட்டிருந்த பிற்போக்கான இனவாதத் தளத்துடன் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். தமிழீழ விடுதலைப் போராட்டமானது தேசிய விடுதலைப் போராட்டம் என்ற வடிவில் முற்போக்கான பாத்திரத்தை எடுத்துக்கொண்டது. 1958 இனப் படுகொலைக்குப் பின்பு முறையே பதவிக்கு வந்திருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க, டட்லி சேனநாயக்க (1965-1970) ஆகிய இருவரது ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்து தீர்வு காணப்படாதுபோன பொருளாதாரப் பிரச்சினை 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி. கிளர்ச்சியால் வெடித்தது. அதன்பின்பு தொடர்ந்து ஆறு ஆண்டுகள் பதவியிலிருந்த சிறிமாவோவினால் அப்பொருளாதார தவறினைச் சரி செய்ய முடியாது 1977 ஆம் ஆண்டு தோல்வியுடன் வீடுதிரும்பினார். அவ்வாறு சிறிமாவோவினால் ஈடுசெய்ய முடியாதுபோன பொருளாதார வெற்றிடத்தைத் தாண்டிச் செல்வதற்காக 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன அவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் 'போரென்றால் போர்' என்று இனப்படுகொலையைக் கட்டவிழ்த்துவிட்டார். அந்த வழியை 1981,1983 என அவர் தொடர்ந்து பின்பற்றினார். ஆனால், அவர் எதிர்பார்த்ததிற்கு மாறாக அதன் விளைவு அப்படியொரு படுகொலைக் கட்டவிழ்ப்பை இனிமேல் கட்டவிழ்த்துவிட முடியாதளவிற்கு மிகவும் பாரதூரமாய் அமைந்தது.

1,20,000 சிங்கள இளைஞர்களை கொன்று குவித்த இராணுவம்

வரலாறு தன் வளர்ச்சிக் கட்டத்திற்குப் பாய்ந்தது. தமிழீழப் போராட்டம் பெரு வடிவில் உருத்திரண்டது. இதன் அடுத்தகட்ட வளர்ச்சியாய், இலங்கை அரசியற் பொருளாதாரத்தினது கூட்டுமொத்த தர்க்கபூர்வ வளர்ச்சியாய் இந்திய இராணுவ எதிர்ப்பின் பெயரால் 1988-89 காலப்பகுதியில் ஜே.வி.பி. மீண்டும் எழுச்சி பெற்றது. தமிழரைக் கொல்வதன் மூலம் கொலைப் பயிற்சி பெற்றிருந்த சிங்கள இராணுவம் ஒரு லட்சத்து இருபதினாயிரம் பேருக்கு மேலான சிங்கள இளைஞர்களைக் கொன்று குவித்தது. இலங்கை வரலாற்றில் இதுவரை காலமும் கொன்று குவிக்கப்பட்டவற்றுள் இதுவே மிகப்பெரிய கொன்றுகுவிப்பாகும்.

1983 கறுப்பு ஜூலை இனப்படுகொலையானது இனப்படுகொலை அரசியலின் உச்சமாய் அமைந்தது. ஆனால், ஜே.ஆர். அரசாங்கம் தனது பொருளாதார அழுத்தங்கள் அனைத்தையும் தமிழ் மக்கள் மீதான இராணுவப் படுகொலையாக்கிக் கொண்டது. அது உள்நாட்டு ரீதியிலான தனது இறுதி வரையறைவரை சென்றது. அதன் உச்சம் ''ஒப்பரேசன் லிபரேசன்'' இராணுவ நடவடிக்கையாய் அமைந்தது. ஆனால், தென்னாசியப் பின்னணியில் அடுத்து இன்னொரு பலமான இராணுவ ஒடுக்கு முறைக்கு வரலாற்றில் வாய்ப்பிருந்தது. இந்திய அரசின் மூலம் அதற்கிருந்த வாய்ப்பை புத்திபூர்வமாக ஜே.ஆர். வகுத்துக் கொண்டார். அவ்வாறே இந்திய இராணுவம் தமிழீழ மண்ணில் 1987 ஆம் ஆண்டு தரையிறங்கியது. இராணுவ ஒடுக்குமுறையும் முழுவீச்சில் ஆரம்பமானது. ஆனால், ஜே.ஆரின் இத்தகைய புத்திபூர்வ நடவடிக்கைக்கு அப்பால் இனவாதத்தின் தர்க்கபூர்வ வளர்ச்சி வேறுவிதமாய் அமைந்தது.

ஈழத்தமிழரை இந்திய ஆதிக்கத்தின் நீட்சியாகவே சிங்களத் தலைவர்களும், சிங்களப் புத்திஜீவிகளும் எப்போதும் சித்தரித்து வந்தனர். தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையை அந்தச் சித்தாந்தத்தில் நின்று நியாயப்படுத்தியும் வந்தனர். ஈழத்தமிழரை இந்தியாவுடன் இணைத்தும், இந்தியாவை ஈழத்தமிழருடன் இணைத்தும் அரசியற் சித்தாந்தங்களை வகுத்தனர். இந்நிலையில் இராணுவத் தர்க்கத்தின்படி ஜே.ஆர். புத்திபூர்வத் திட்டமிடல் மூலம் இந்திய இராணுவத்துடன் கைகோர்த்தாலும் அதன் அரசியல் வரலாற்றுத் தர்க்கத்தின்படி இந்தியாவிற்கும் இந்திய இராணுவத்திற்கும் எதிரான களநிலை சிங்கள இளைஞர் மத்தியிலும், சிங்கள மக்கள் மத்தியிலும் பரந்து விரிந்தது. இந்நிலையில் சிங்கள மக்கள் மத்தியில் நிலவிய பொருளாதார வெற்றிடத்தை தமிழ் மக்கள் மீதான இராணுவ நடவடிக்கைகள் மூலம் மூடி மெழுகிவந்த நிலையை தொடரமுடியாது போனது. சிங்கள இளைஞர்கள் அரச இயந்திரத்தைத் தாக்கத் தயாராகினர். ஜே.வி.பி அதனை அறுவடை செய்யப் புறப்பட்டது. அப்போது அரச இயந்திரம் ஜே.வி.பியினரை முற்றிலும் பிழிந்தெறிவதன் மூலம் பொருளாதார முரண்பாட்டை நசுக்கிக் கொண்டது. பொருளாதார முரண்பாட்டை ஒடுக்குவதற்காக எழுந்த ஒரு நிறுவனமே அரசு. அந்த ஒடுக்குமுறைக்கான பொறிமுறையே அரச இயந்திரம். அதனை ஜே.வி.பியினர் விஞ்ஞான பூர்வமாக எதிர்கொள்ளாத நிலையில் அந்த இயந்திரம் தான் எதற்காகத் தோன்றியதோ அதற்கான தொழிலை ஜே.வி.பியினர் மீது புரிந்தது. இத்தகைய அரசியற் பொருளாதாரத் தர்க்கபூர்வப் போக்கின்படி தெற்கில் ஓர் ஆயுதம் தாங்கிய கிளர்ச்சி ஏற்படும் என்றும் அதனை ஒடுக்க ஜே.ஆர் இந்திய அரசுடன் கூட்டுச்சேர முடியுமென்பதான கருத்துகள் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்படுவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னமே தமிழ் மண்ணில் எழுத்துருவிற் காணப்பட்டன. அத்தகைய அரசியற் பொருளாதாரத் தர்க்கத்தின்படி இலங்கை - இந்திய கூட்டும், ஜே.வி.பியினர் மீதான பாரிய படுகொலைகளும் பிற்காலத்தில் நிகழ்ந்தேறின. எப்படியோ அரசியற் பொருளாதாரத்திற்குரிய தர்க்கபூர்வப் போக்கு பெரிதும் கவனத்திற்குரியது.

ஜே.வி.பி என்பதன் பெயரால் சிங்கள இளைஞர்கள் மீதான படுகொலைகளைப் புரிந்து ஒன்றரைத் தசாப்தங்கள் கழிந்துவிட்டன. ஆனால், அதன் பின்பு பொருளாதார மாற்றங்கள் எதுவும் நிகழ்வதற்குப் பதிலாக தமிழ் மக்கள் மீதான இராணுவ ஒடுக்குமுறையை கவர்ச்சிகரமான முறையில் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் சிங்கள மக்களுக்குரிய பொருளாதாரப் பிரச்சினைகளை சிங்கள ஆட்சியாளர்கள் அமத்தி மூடியுள்ளனர். அப்படி அமத்தி மூடுவதற்கும் ஓர் எல்லையுண்டு. அந்த எல்லைக்கோட்டில் கிளர்ச்சிகள் வெடிப்பதற்கான வாய்ப்புகள் இப்போது உருத்திரளத் தொடங்கியுள்ளன. எனவே, தெற்கில் கிட்டிய அண்மைக்காலத்தில் இன்னும் ஓரிரு ஆண்டுகளுக்குள் கிளர்ச்சி வெடிப்பதை யாராலும் தவிர்க்க முடியாது. இதைப் பின்னர் சற்று விரிவாகப் பார்ப்போம். (வளரும்)

சமாதானத்துக்கான யுத்தமா? அல்லது யுத்தத்திற்கான சமாதானமா?

தொடர் சிறப்புக் கட்டுரை 4

தெற்கில் விரைவில் கிளர்ச்சி வெடிப்பதை யாராலும் தவிர்க்க முடியாது போகும்

தமிழ் மக்கள் மீதான இராணுவ ஒடுக்குமுறையை கவர்ச்சிகாட்டி பொருளாதாரப் பிரச்சினை மூடிமறைப்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரங்கள்

விற்பனைக்கு

28 சி-xxxx தொடரிலக்கமுடைய ஸ்கூஸ் கன்ரர் 350 வாகனம் விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.பாலேந்திரன், பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். T.P. 021-222 3273. (44776)

Sony DVD Set, New Modal Computer என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.05, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (44792)

நல்ல நிலையில் உள்ள தளபாடங்கள், T.V., சைக்கிள் மற்றும் பல பொருள்கள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ. இராமச்சந்திரன், 508 (பழைய 204), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (44770)

காணி விற்பனைக்கு

கிளிநொச்சி நகரப்பகுதியிலிருந்து 1 கிலோ மீற்றர் தூரத்தில் திருநகரின் 977 இலக்கமுடைய மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரீதரன் T.P.: 0773526955, 0776728604. (சி-47129)

வேலம்பிராய் அம்மன் கோயிலுக்கு அருகில் 18 ஏக்கர் காணியும், கண்டி வீதியில் இருந்து 250 யார் உள்ளேயும் கைதடி சைவ சிறுவர் இல்லத்திற்கு அருகிலும் அமைந்துள்ள 20 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ.சந்திரகுமார், பொது நூலக வீதி, கைதடி தெற்கு, கைதடி. E.mail Sooriya kumaran @ g mail.com. (44766)

கண்டி வீதி, கைதடிச் சந்தியில் எரி பொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக உள்ள பத்து பரப்புக் காணியும், கைதடி பிள்ளையார் கோயில் வீதி, ஸ்ரீ ஞான வைரவர் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள பத்து பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ.சந்திரகுமார், பொதுநூலக வீதி, கைதடி தெற்கு, கைதடி. E.mail Sooriyakumaran @ g mail .com. (44765)

கண்டி வீதி, நாவற்குழிப் பிரதான சந்தியில் (60) அறுபது பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ.சந்திரகுமார், பொது நூலக வீதி, கைதடி தெற்கு, கைதடி. T.P. 0112 605778, 077-9237962, 0712 - 575971. E.mail Sooriyakumaran@gmail .com. (44765)

வீடு விற்பனைக்கு

இல.307, கச்சேரி நல்லூர் வீதியில் 4 அறைகள், கிணறு வாகனத்தரிப்பிடம், மின் சாரவசதி ஆகிய வசதிகளுடன் கூடிய 2½ பரப்புக் காணியில் அமைந்த வீடு (நல்லூர் கோயிலுக்கு அருகில்) உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு நேரில் அல்லது 0779767605. (44756)

இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) வீனஸ் பாம் பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி (நல்லூர் பிரதேச செயலகம் முன்பாக) புதன், சனி, ஞாயிறு தினங்களில் அரசடி, கஸ்தூரியார் வீதியில் உள்ள வீனஸ் பாமிலும் பெற்றுக்கொள்ளலாம். பொதி செய்யப்பட்ட புறொயிலர் 1Kg 180/-, முட்டை விலை 9/- (44556)

புறொயிலர் 1Kg 180/-, சுத்தம் செய்தது 1 Kg 270/-, கல்பேட் 1Kg 180/- என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K Farm, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். New R.S.K Farm, பெரியமதவடி, மானிப்பாய் றோட், உடுவில். (44767)

கோழி விற்பனைக்கு

கல்பேட் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ரவீந்திரமோகன், வட்டுக்கோட்டை (பாடசாலை ஒழுங்கை) T.P. 0776264629. (44768)

நாய் விற்பனைக்கு

நல்ல இனகிறேடன் 1½ வயது நிரம்பிய ஆண் நாய் விற்பனைக்குண்டு. தடுப்பு ஊசி போடப்பட்டது. தொடர்பு: சிவசுப்பிரமணியம், கட்டுடை, மானிப்பாய் மேற்கு, துர்க்காமில்லுக்கு அருகில். தொ.பே. இல. 0776086981. (44727)

வாடகைக்கு

தொழில் பார்க்கும் பெண்கள் இருவர் தங்கக்கூடிய அறை திருநெல்வேலி பிரதேசத்தில் வாடகைக்குண்டு. தொடர்பு: 86/1, பலாலி வீதி, (நல்லூர் பிரதேச செயலகம் அருகில்) திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (44763)

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் கல்லூரி வீதியில் 3300 சதுர அடி விஸ்தீரணம் உள்ள இடம் உடனடிப் பாவனைக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: T.P. 222 7678. (44769)

தவறிவிட்டது

கனகு செல்வம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன 05.12.2005 அன்று திருநெல்வேலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0779698950 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். ஒப்படைப்பவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (44779)

இடந்தரை வீதி, காங்கேசன்துறை என்ற முகவரியை உடைய சிவசம்பு சிவராஜா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.320983355V) விஸ்மன் ரியூட்டறிக்கும் தினேஸ் பேக்கறிக்கும் இடையில் 27.12.2005 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். லக்கி கொமினிகேசன், மானிப்பாய். T.P. 222 2768 (44776)

ENGLISH TEACHING

Pre School - Yr. 5
Individual Classes will be conducted by an experienced Teacher

Contact No : 0776174643
Nallur.

(44776)(21.19.16)

MOBILE SERVICE

Computer Sales & Repairs
Web designing
Card designing

இந்த சேவைகள் அனைத்தையும் நம்பிக்கையான முறையில் உடனுக்குடன் உங்கள் இருப்பிடங்களில் இருந்தவாறே பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : 0773 604765
0776 643194

(44776)(21.19.16)

விநியோகஸ்தர்கள்

PENTEC எழுதுகருவி மற்றும் காகிதாதிகள் விற்பனையில் முன்னணியில் திகழும் Pentec Brand பொருட்களிற்கு விநியோகஸ்தர்கள் யாழ்ப்பாணம்/ பருத்தித்துறை பிரதேசங்களிற்கு தேவை.

தகமை:-
- வங்கி உத்தரவாதம் Rs 800,000/= - 100,000/=
- வாகன வசதி
- களஞ்சிய வசதி

ஆர்வம் உள்ளவர்கள் உடன் வீண்ணப்பிக்கவும்

Business Promotion Manager
Universal Marketing Services (Pvt) Ltd.
545, Sri Sangarajah Mawatha, Colombo - 10.
T.P : 071-4012676, Fax - 0112 448211

பிள்ளையார் கதை நிறைவு நாள்

சரசாலை இராமாவில் பிள்ளையார் ஆலயத்தில் பிள்ளையார் கதை படிப்பு இடம்பெற்று வருகின்றது

எதிர்வரும் நான்காம் திகதி விசேட அபிஷேகத்துடன் பிள்ளையார் கதை படிப்பு நிறைவு பெறும் .

(த-117)

மரண அறிவித்தல்

திருமதி மேரிப்பிள்ளை சின்னத்தம்பி

மானிப்பாய் வடக்கு, உச்சியோடையைச் சேர்ந்த திருமதி மேரிப்பிள்ளை சின்னத்தம்பி அவர்கள் 30.12.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் மகாலிங்கம் (புவேந்தன் சிறுவர் பகல் பராமரிப்புப் பாடசாலை- சாவகச்சேரி நிர்வாகி, ஓய்வுபெற்ற பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்), முத்துலிங்கம் (மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை ஆசிரியர்), மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் சரஸ்வதி, புஸ்பவதி (மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை, ஆசிரியை), தங்கவேலு (மானிப்பாய் பரிஸ் ப.நோ.கூ சங்கம்- ஊழியர்) அவர்களின் அன்பு மாமியும் காலஞ்சென்ற புவேந்தன் (பாபு)மற்றும் எழிலாஷினி, ரமணன், றஞ்சித், டக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.12.2005) சனிக்கிழமை அன்று நடை பெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் தகவல்:

மானிப்பாய் வடக்கு, மானிப்பாய். (சி-47135)(21.19.16) சி.முத்துலிங்கம் (மகன்)

அபூர்வமான மூலிகைகளின் ஒன்றிணைப்பு
பரிபூர்ணமான நோய் நிவாரணத்திற்கான வழி.

பரிசோதனை மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது

Baraka® பரகா

ஆயுர்வேத திணைகளத்தின் அனுமதி இலக்கம் 3/1/5/4/94/30

தற்பொழுது உங்கள் யாழ் நகரிலும்!

DIABsol (Black Seed Oil)

இயற்கையாக நீரழிவு நோயிலிருந்து நிவாரணம் பெற வேண்டுமா?

Baraka கருஞ்சீரகத்தினால் தயாரிக்கப்பட்ட வில்லைகள் மருத்துவ ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்ட 100% இயற்கையான கருஞ்சீரக எண்ணெய்யினால் தயாரிக்கப்பட்டு நிரிழிவு நோயிலிருந்து நிவாரணத்தை தருவதோடு உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கின்றது. ஏனைய ஆங்கில மருந்துகளுடன் உபயோகிக்கலாம்.

GarliCHOL (Garlic)

இயற்கையாக கொலஸ்ட்ரோலின் அளவை கட்டுப்படுத்த வேண்டுமா?

Baraka வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக எண்ணெய் வில்லைகள் 100% இயற்கையாக வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக கூட்டமைப்பில் தயாரிக்கப்பட்டு உடலிலுள்ள மேலதிக கொலஸ்ரோல் அளவை கட்டுப்படுத்துகின்றது.

CODseas (Cod Liver Oil)

உடலை ஆரோக்கிய நிலையில் பேண வேண்டுமா?

கருஞ்சீரகத்துடன் கூடிய மீன் எண்ணெய் (Cod Liver Oil) வில்லைகள் உடலுக்கு தேவையான ஒமேகா-3 மூலகத்துடன், விற்றமின்கள், கனியுப்புக்கள் மற்றும் மேலதிக கல்சியத்தை வழங்கி, உடலை ஆரோக்கியமாக பேண உதவும் மேலும் தடிமன், இருமல் என்பவற்றை தவிர்த்து கண்பார்வை என்பு, பல் என்பவற்றின் தொழிற்பாட்டை அதிகரிக்கும்.

BeeVIT (Bee Honey)

இயற்கை மூலிகைகளின் மூலம் உடலுக்கு தேவையான புரதங்கள், விற்றமின்கள், கனியுப்புக்களை பெற வேண்டுமா?

பிரபலமான இரு மூலிகைகளான கருஞ்சீரகம் மற்றும் தேன் என்பவற்றின் கூட்டமைப்பில் தயாரான Baraka கருஞ்சீரக தேன் வில்லைகள் நாளாந்தம் உடலுக்கு தேவையான ஆரோக்கிய சக்தியை வழங்குகின்றது மேலும் உடலுக்கு தேவையான மேலதிக புரதங்கள், விற்றமின்கள், கனியுப்புக்களை வழங்கி உடல் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலை பாதுகாக்கின்றது.

Picasso Ads

100% இயற்கை மூலிகையினால் தயாரிக்கப்பட்டதினால் ஏனைய மருந்துகளுடன் பாவிக்க முடியும்.

HFAC

அனைத்து பரகா உற்பத்திகளையும் ஏகவிநியோகஸ்தர்களான WESCO PHARMACY JAFFNA இடம் பெற்றுக்கொள்ளலாம்.
Tel : 021 2223188

EXPO LANKA

EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.
11A, Mile Post Avenue, Colombo - 03 Tel :- 0112 676398/9
email. expopharma@expo.slt.lk, www.barakaoil.com

Baraka Your health partner in life

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழிப்பேரலை அனர்த்தம்; ஓராண்டு நினைவு: 'கடலே அமைதி கொள்வாய்!' மக்கள் பிரார்த்தனை

கடந்த 2004 ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி கிறிஸ்மஸ் விழாவை உலகம் கொண்டாடி முடித்திருந்த மறுதினம் ஆசியாவின் பல்வேறு நாடுகளில் 'சுனாமி' என்றழைக்கப்பட்ட ஆழிப்பேரலையால் கரையோரங்களில் வாழ்ந்த மக்களில் 2 லட்சத்து 20 ஆயிரம் பேருக்கு மேல் கொன்றொழிக்கப்பட்ட பெரும் சோகத்தை அந்தந்த நாடுகளின் மக்களும் அரசும் மிக வேதனையோடும் விழிசிவந்த கண்களோடும் நினைவு கூர்ந்தார்கள்.

உற்றார், உறவினர்களை ஈவிரக்கமற்ற ஆழிப்பேரலைக்குக் காவுகொடுத்த மக்கள் அந்த நினைவுகளைக் கடந்த 26ஆம் திகதி தேவாலயங்களிலும் மசூதிகளிலும் கோயில்கள் மற்றும் பௌத்த ஆலயங்களிலும் கூடி கண்ணீர் சிந்த இறந்தவர்களின் ஆன்மாக்களின் அமைதிக்காகப் பிரார்த்தனைகளிலும் வழிபாடுகளிலும் ஈடுபட்டார்கள்.

இந்தோனேஷியாவில் அசேஷ் மாகாணத்தில் ஆழிப்பேரலையின் பிரமாண்டமான முதலாவது அலையானது கரையோரப் பகுதிகளைத் தாக்கி 168 ஆயிரம் மக்களின் உயிர்களைக் காவுகொண்ட அந்த நேரத்தைக் குறிக்கும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சோகமயமான வைபவத்தில் இந்தோனேஷிய ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யுத்தோயோனோ முன்னின்று கலந்துகொண்டார்.

''இந்த நேரத்தில் எமது சிரங்களைத் தாழ்த்தி உயிர் துறந்த அந்த மக்களின் ஆன்மாக்களின் அமைதிக்காகப் பிரார்த்திப் போமாக'' என்று அந்த வைபவத்தில் அதிபர் யுத்தோயோனோ தெரிவித்தார்.

இம்மாதிரி இயற்கை அனர்த்தம் ஒன்று மீண்டும் ஏற்படுமானால் எச்சரிக்கை செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள அபாய சங்கு ஒலிக்கப்பட்ட அதேவேளை அதிபர் யுத்தோயோனோ தம் உரையில் ''இறைவனின் முன்னிலையில் அவர்களின் ஆன்மாக்கள் சாந்தியைத் தழுவட்டும்'' என்று பிரார்த்தனை செய்தார்.

இந்தோனேஷியாவுக்கும் அப்பால் சுமாத்திரா தீவில் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஏற்பட்ட பூகம்பத்தினால் உருவான ஆழிப்பேரலையின் தாக்கத்துக்குள்ளான நாடுகளின் பெயர்களை இந்தோனேஷியா அதிபர் பட்டியலிட்டு குறிப்பிட்டார்.

''அன்றையதினம் கடலுக்குத் தம் உயிர்களைக் கொடுத்துவிட்ட அந்த நல்ல மனிதர்கள், பெண்கள், குழந்தைகள் அனைவருக்கும் இந்தவேளையிலே எமது மரியாதைகளை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்றைய பேரழிவிலிருந்து உயிர் தப்பியிருப்பவர்களை அவர்களின் துணிச்சலுக்காகவும் பலத்துக்காகவும் கௌரவிக்கின்றோம்'' என்று மேலும் கூறினார் அதிபர் யுத்தோயோனோ.

பான்டே ஆசெஹ் பெரிய மசூதியில் கூடியிருந்த நூற்றுக்கணக்கான வெண்ணுடை தரித்த மக்கள் தொழுகையில் ஈடுபட்டனர். அவர்கள் மத்தியில் உரையாற்றிய மௌலவி முகம்மது அரிபின் இல்ஹாம் கதறி அழுதபடி பிரார்த்தனை செய்தார்.

தாய்லாந்தில்...

தென் தாய்லாந்தில் கடற்கரையில் ஆயிரக்கணக்கில் இறந்த உறவினர்களின் உறவினர்களும் உயிர் தப்பியவர்களும் கூடியிருந்து பிரார்த்தனை செய்தார்கள். அங்கு சுமார் 5 ஆயிரத்து 400 மக்கள் ஆழிப்பேரலைக்குப் பலியாகியிருந்தார்கள். இப்பிரதேசத்தில் அலைகள் பத்து மீற்றர் (33 அடி) உயரத்துக்கு எழுந்து ஒரு கிராமத்தையே அழித்து விட்டிருந்தது.

இந்தியாவில்...

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் கடற்கரையோரங்களிலும் ஏனைய வணக்க ஸ்தலங்களிலும் அமைதி ஊர்வலங்களும் நினைவுப் பிரார்த்தனைகளும் இடம் பெற்றன.

தென்னை மரங்கள் சூழ்ந்த கடற்கரைகளுக்குப் பேர்போன கார்நிக்கோபார் தீவில் இந்திய இராணுவம் கடற்கரையில் நினைவுத் தூபி ஒன்றைத் திரைநீக்கம் செய்துவைத்தது. அதேநேரம், உயிர் தப்பியிருக்கும் நிக்கோபார் மக்கள் அதிகாலையிலேயே வீடுகளை விட்டு கடற்கரைக்குச் சென்று நினைவு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்கள்.

ஆயிரக்கணக்கான பெண்கள் கடற்கரைகளில் கூடி கடலை அமைதியுடன் இருக்கும்படி பிரார்த்தனை செய்தார்கள். இந்தியாவில் மொத்தம் 10 ஆயிரத்து 700 பேர் கொல்லப்பட்டதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

அந்தமான் - நிக்கோபார் தீவுகளின் தென் கரையோரப் பகுதிகள் முற்றாகக் கடல் பேரலைகளால் கழுவித் துடைக்கப்பட்டுவிட்டன.

தமிழ்நாட்டில்...

தமிழ்நாட்டில் மிகமோசமாக ஆழிப் பேரலையால் தாக்கப்பட்டுவிட்ட நாகைபட்டினம் மாவட்டத்தில் மட்டும் 6 ஆயிரம் பேருக்கு மேல் பலியாகியிருந்தார்கள்.

பேரலை தாக்கி 9.17 மணிக்கு ஒரு நிமிட மௌனப் பிரார்த்தனை நிகழ்த்தப்பட்டது. சில கிராமங்களில் இறந்தவர்கள் ஞாபகார்த்தமாக மரங்கள் நடப்பட்டன. விளக்குகள், மெழுகுவர்த்திகள் கொளுத்தப்பட்டும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடல் பிரதேசத்தில் வாழும் அனேக சிறுவர்களும் இளைஞர்களும் கடற்றொழிலை வெறுக்கிறார்கள்.

எங்களில் அனேகர் மீன்பிடித் தொழிலில் இருந்து விடுபடுவதற்கு நன்றாகப் படிக்க விரும்புகிறார்கள் என்று ஒரு 15 வயது இளைஞர் கூறியிருக்கிறார்.

இந்திய விமானப்படையைச் சேர்ந்த 119 வீரர்களும் அவர்களின் உறவினர்களும் அவர்களின் இரண்டு மாடி வசிப்பிட கட்டடத்தை 21 அடி உயரத்துக்கு எழுந்து தாக்கிய பேரலைகளுக்கு இரையானார்கள். அந்த இடத்தில் உள்ள நினைவுத் தூபியில் இறந்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

* * *

கௌரவம் பெற்ற பிரிட்டிஷ் சிறுமி

பிரிட்டிஷ் சிறுமி டில்லி ஸ்மித் என்பவர் ''இந்த வருடத்தின் சிறுமி'' என்று கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தாய்லாந்தில் ஆழிப்பேரலை வீசவிருந்த சமயத்தில் 100 உல்லாசப் பயணிகளை இந்தச் சிறுமி தனது புவியியல் அறிவால் காப்பாறியமைக்காக இந்தக் கௌரவத்தைச் சிறுவர்கள் பத்திரிகையொன்று வழங்கியுள்ளது.

டில்லி ஸ்மித் 'சுனாமி' எவ்வாறு உருவாகும், அதன் அறிகுறிகள் என்ன என்பது பற்றி தனது புவியியல் ஆசிரியரிடம் கற்றிருந்தார். கடந்த வருடம் விடுமுறையைக் கழிப்பதற்காகத் தனது பெற்றோரோடும் தங்கையோடும் தாய்லாந்துக்குச் சென்றிருந்தார். கடற்கரையில் நின்றபோது கடல் உள்வாங்கிச் செல்வதை அவள் கண்டாள். அதைத் தனது தாயிடம் தெரிவித்து ''நாம் எந்த நிமிடத்திலும் சுனாமியால் தாக்கப்படப் போகிறோம்'' என்று எச்சரித்தாள். பத்து வயது சிறுமிதானே அவருக்கு என்ன தெரியும் என்று அவர்கள் இருந்துவிடவில்லை. உடனடியாகவே ஏனைய உல்லாசப் பயணிகளுக்கும் அறிவித்து எச்சரிக்கை செய்தார்கள். சில நிமிடங்களில் அங்கிருந்த ஹோட்டல் சிப்பந்திகள் மற்றும் உல்லாசப் பயணிகள் அனைவரும் வேறு பத்திரமான இடங்களுக்கு மாறிவிட்டார்கள். அதனால் அடுத்து சில நிமிடங்களில் அப்பகுதியை மிகக் கோரமாகத் தாக்கிய பேரலைகளிலிருந்து நூறு பேர் உயிர்தப்பினார்கள்.

டில்லிக்கு இப்பொழுது 11 வயது. அந்த நிகழ்வின் ஞாபகார்த்த வைபவத்தில் கலந்து கொள்ள தாய்லாந்து வந்துள்ள டில்லி ''சுனாமியோ'' வேறு எந்த இயற்கை அனர்த்தமோ அதைப்பற்றி அறிந்து வைத்திருப்பது தக்க சமயத்தில் உதவுகிறது. இன்னொரு சுனாமி ஒன்று வரப்போகிறது என்று என்னால் கூறமுடிந்தது மகிழ்ச்சி தருகிறது. அதைவிட சிறுமி என்று கருதாமல் அவர்கள் எனக்கு செவிமடுத்து நடந்துகொண்டது இன்னும் மகிழ்ச்சியாக இருக்கின்றது என்று டில்லி கூறினார்.

அன்றையதினம் கடலின் செயற்பாடு நான் புவியியல் பாடத்தில் கற்றதுபோலவே அச்சொட்டாகக் காணப்பட்டது - என்றார் டில்லி.

அரபு உலக நாடாளுமன்றம்

அரபு உலகின் முதலாவது பிராந்திய நாடாளுமன்றம் அண்மையில் அதன் ஆரம்பக் கூட்டத்தை கெய்ரோவில் நடத்தியிருக்கிறது.

அரபு லீக் உறுப்பு நாடுகளின் நாடாளுமன்றங்கள் அல்லது ஆலோசனை சபைகள் ஒவ்வொன்றிலிருந்தும் நான்கு உறுப்பினர்கள் என்ற முறையில் இந்த அரபு உலக நாடாளுமன்ற கூட்டத்தில் 88 பேர் கலந்து கொண்டார்கள். அபு லீக் தலைமை நிலையத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் அதன் செயலாளர் நாயகம் அமிர் மவுஸா மற்றும் எகிப்திய அதிபர் ஹொஸ்னி முபாரக் ஆகியவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

இந்த இடைக்கால நாடாளுமன்றத்துக்குச் சட்ட அதிகாரக் கட்டுப்பாடு கிடையாது. ஆனால், அரபு லீக் சபையால் சமர்ப்பிக்கப்படும் விடயங்கள் தொடர்பாக மட்டும் கருத்து வெளியிடமுடியும்.

சிரியாவைத் தளமாகக் கொண்டு இயங்கப் போகும் இந்த ஸ்தாபனம் வருடத்தில் இரண்டு முறை கூடும். இது அரபு நாடுகள் மீது அதிகாரம் செலுத்தும் அளவுக்கு ஒரு நிலைப்பாட்டை எட்டுவதற்குப் பல வருடங்கள் செல்லும் என்று பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

அரபு அரசுகள் மீது ஒரு கண்வைத்திருந்தால் மட்டுமே இந்த நாடாளுமன்றத்தினால் பிரயோசனமுண்டு என்று பலஸ்தீனச் சட்ட சபையின் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்டுக்கள் போன்ற நாடுகளில் நாடாளுமன்றங்கள் இல்லை. குறைந்த அதிகாரமுள்ள ஆலோசனைச் சபைகள் மட்டுமே உள்ளன. அரபு நாடுகள் நாடாளுமன்றத்துக்கு இந்தச் சபைகளில் இருந்தே உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் போல அரபு நாடுகள் நாடாளுமன்றத்தையும் வளர்த்தெடுக்க அதன் தலைவர்கள் விரும்புகிறார்கள். ஆனால், அதற்கு வெகு காலம் பிடிக்கும்.

* * *

படித்ததைச் செயலில் காட்டி 100 பேரைக் காப்பாற்றிய சிறுமி

குடும்ப கௌரவம்: சொந்தப் பிள்ளைகளைக் கொலைசெய்த மனிதனி

குடும்ப கௌரவத்தின் பேரில் தன் நான்கு சொந்தப் பெண் பிள்ளைகளின் கழுத்தை அறுத்துக் கொலைசெய்திருக்கிறார் ஒருவர். கிழக்கு பாகிஸ்தானில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. தனது மூத்தமகள் தான் விரும்பிய ஒருவரைத் திருமணம் செய்துகொண்டு விட்டார். அதனால், குடும்ப மானம் கப்பலேறி விட்டதாக நாசர் அகமத் என்ற அந்த நபர் நினைத்தார். எனவே, அந்தப் பெண்ணையும் அவருடைய மூன்று சகோதரிகளையும் கொன்றுவிட அவர் முடிவுசெய்தார். மூத்த வளை பார்த்து மற்றவர்களும் அதேமாதிரி நடந்துகொள்வார்கள் என்று அவர் பயந்தார். அதனால், நால்வரையும் கொலை செய்ய திட்டம் தீட்டினார்.

எனவே, மூத்த மகள் முக்கதாஸ் பிபி (25), தனது சகோதரிகள் பானோ பிபி (12), சுமேரா பிபி (8), ஷாமெரா(6)ஆகியவர்களுடன் உறங்கிக்கொண்டிருக்கும் போது அவர்களின் குரல் வளைகளை அறுத்து கொலை செய்துவிட்டு பொலீஸில் போய் விஷயத்தைக் கூறினார். பொலீஸார் அவரைக் கைதுசெய்தனர்.

பாகிஸ்தானின் கிராமப் பகுதிகளில் குடும்ப கௌரவத்தின் பேரால் இவ்வாறு சமீப காலத்தில் சுமார் 4 ஆயிரம் பேர் பெரும்பாலும் பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் கோரமான விளைவு இந்தோனேஷிய இளைஞர்கள் தெருக்கூத்தின் மூலம் எடுத்துக் காட்டும் ஒரு காட்சி.

இவ்வாறு கௌரவத்தைக் காப்பாற்றுவதற்குக் கொலைசெய்யப்படுவதைத் தடை செய்யும், அவ்வாறான குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்கவுமான சட்டமொன்றில் அதிபர் பர்வேஸ் முஷாராப் கடந்த வருடம் கையெழுத்திட்டார். ஆனால், பாகிஸ்தானில் மிகப் பின்தங்கிய கிராமங்களில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெறவே செய்கின்றன.

* * *

நாகாலாந்து போர்நிறுத்தம் நீடிக்குமா?

இந்திய அரசுக்கும் வடகிழக்கு நாகாலாந்து மாநில தீவிரவாதக் குழுக்களுக்குமிடையே நிலவி வரும் எட்டு வருடகாலப் போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து நிலைநாட்டவும் இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணவும் இரு தரப்புக்குமிடையில் பேச்சுகளை நடத்தும் பேச்சாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுளார்.

நாகாலாந்தில் தேசிய சோசலிசக் கவுன்ஸில் அமைச்சரான ஒஸ்கார் பொன்னான்டஸ் நெதர்லாந்தைச் சேர்ந்த மைக்கல் சி வான் வால்ட் வான் பிராக் என்பவரை இரு தரப்புக்குமிடையில் தொடர்பாளராய் பணியாற்றும்படி கேட்டுள்ளார்.

இரு தரப்புக்குமிடையில் பாங்கொக்கில் நடைபெற்று வந்த பேச்சுக்கள் இந்திய அரசின் அசமந்தப் போக்கால் முறிந்துவிடும் நிலைமையைக் கண்டிருந்தன. திரிவிராக்கின் தலையீட்டால் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நாகாலாந்து அமைதிப் பேச்சுக்கு மீண்டும் உயிரூட்ட முயற்சி

இருதரப்புக்குமிடையில் 1997ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் ஜனவரி 31 ஆம் திகதியுடன் முடிவடையவிருக்கின்றன.

திரிவிராக் அனுசரணையாளராகவும் அமைதித் தூதுவராகவும் பணியாற்றுவார். பின்னர் சுயேச்சையாவும் தனது ஆலோசனைகளை முன்வைப்பார்.

திரிவிராக் ஷேகில் உள்ள கிரெட் என்னும் ஸ்தாபனத்தின் தலைவர். நாடுகளுக்கிடையில் நிலவும் வன்முறைப் பிணக்குகள் தொடர்பாக ஆராய்ந்து ஆலோசனை வழங்கும் ஸ்தாபனமாகும் இது. பிரதிநிதித்துவம் இல்லாத நாடுகள் மற்றும் மக்கள் ஸ்தாபனங்களுக்காகப் பாடுபடும் நிறுவனத்தின் பொது செயலாளராக இருந்துள்ள அவர் உரிமை கோரி போராடும் அமைப்புக்காகச் செயற்படுவதில் சர்வதேச பிரபல்யம் பெற்றவர்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்பின் தெய்வமே!
ஆசையிலே சில நாள்
அவதியிலே சில நாள்
பாசத்திலே சில நாள்
படிப்பினிலே சில நாள்
காதலிலே சில நாள்
கவலையிலே சில நாள்
வாழ்வதோ சில நாள்
வாடுவதோ பல நாள்
நெருங்கிய உறவு நிலையற்றுப் போன தால் கலங்கிய கண் குளம் கண்ணீர் வடிக்குது! விழுகின்ற ஒவ்வொரு துளியும் வேதனையின் ஓலம்.
ஓமே சாந்தி! ஓமே சாந்தி !! ஓமே சாந்தி!!!

அமரர் கந்தையா இளையதம்பி
அதிபர்
திதி:01-01-2006
மண்ணில் 23-03-1936 விண்ணில் 02-01-1995

மிதிலை, கைதடி நுணாவில், சாவகச்சேரி.
தகவல்: மனைவி,மகன், உறவினர்.
(44631)

31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 11-09-1931
மறைவு 02-12-2005

அமரர்
ஐயாத்துரை பூபாலசிங்கம்

இன்று (01-01-2006) ஞாயிற்றுக் கிழமை 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இல.11, கலட்டி அம்மன் றோட், யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(44790)(26-11-19)

மரண அறிவித்தல்

கந்தையா திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற கணக்காளர், அரசாங்க அச்சகம், கொழும்பு)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் 74, மேபீல்ட் றோட், கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா திருநாவுக்கரசு 27.12.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் புங்குடுதீவு, 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் வேலணை காலஞ்சென்ற பண்டிதர் பொன்னுத்துரை - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை புனித அந்தோனியார் கல்லூரி, கொழும்பு) அருமைக் கணவரும் காலஞ்சென்ற திருமதி மீனாட்சி கந்தசாமி, தர்மலிங்கம் மற்றும் திருமதி செல்லம்மா சுப்பிரமணியம், திருமதி அன்னப்பிள்ளை கனகசபை, திருமதி சிவக்கொழுந்து மதியாபரணம், இராசேந்திரம் (கனடா), நற்குணராசா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலியாணசுந்தரம், திருமதி கமலாதேவி தர்மலிங்கம், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, டாக்டர் விமலேந்திரன் (கனடா), பாலேந்திரன்(கனடா), விமலாதேவி விஜயகுமார் (கனடா), யோகேந்திரன்(U.K.), இரவீந்திரன்(U.K.), புவனேந்திரன் (U.K.), நிர்மலாதேவி லோகராஜ்(கனடா) மற்றும் காலஞ்சென்ற வத்சலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்திலிருந்து நாளை (02.01.2006) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் ஜெயரட்ணபுர மலர்ச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தொ.பே.0112385224
தகவல்: பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை (மைத்துனர்).
(சி/46970)(26-11-19)

ஏகாதசி மகோற்சவம்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான வைகுண்ட ஏகாதசி மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறும். (த)

திருவெம்பாவை உற்சவம்

தென்மராட்சி, ஜன-1

சரசாலைதெற்கு மகிழ்நின்ற வளவு இராமாவில் பிள்ளையார் ஆலயத்தில் திருவெம்பாவை பூஜைகள் எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். (த-117)

கொழும்பு செல்லும் பயணிகளின் கவனத்திற்கு!

யாழ்.,கொழும்பு, திருமலை செல்லும் பயணிகளின் நன்மை கருதி தற்காலிகமாக தொலைபேசி மூலம் பஸ் ஆசனப் பதிவுகளை மேற்கொள்வதற்கான சேவையை 24 மணிநேரமும் இன்று முதல் (01.01.2006) ஆரம்பித்துள்ளோம். எனவே, நீங்கள் உங்கள் இல்லங்களிலிருந்தே தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உங்களுக்கான ஆசனப்பதிவுகளை மேற்கொள்ளலாம். அத்தோடு, நீங்கள் விரும்பிய பஸ்களில் பயணம் செய்வதற்கு ஒழுங்கு செய்தும் தரப்படும்.

(அற்லஸ்)(S.N.J.)(சேது) தினமும் திரி ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக, காலை 8 மணிக்கு புறப்படும்.

T.P.: 222 7125, 222 3817
(0777111460)
(சி/47145)(26-19-18)

தொடர்பு:
திரி ஸ்ரார் ஹோட்டல்
இல. 162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய புதுவருட நல்வாழ்த்துக்கள்

அழகிற்கு அழகு சேர்க்கும் தங்கநகைத் தெரிவுக்கு இன்றைய அரங்கம்

நியூ சாருகா நகைமாடம்
இல.83/2, கஸ்தூரியார் வீதி, ஜூம்மா பள்ளி வாசல் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

குணா நகைத் தொழிலகம்
இல.78/10, பாரத் ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர் : குணா T.P : 0777175758
(சி/46970)(26-11-19)

11 ஆம் ஆண்டு நினைவில்...

அன்னை மடியில் 26.05.1925
அம்மன் திருவடியில் 01.01.1995

அமரர்
சின்னையா இரத்தினம்
(பிரபல வெற்றிலை வியாபாரி- சாவகச்சேரி)
திதி: 31.12.2005

இல்லறத்தை நல்லறமாக்கி - நிதியாய்
வல்லுவத்தில் வலுச்சேர்த்து
எமக்கெல்லாம் வழிகாட்டி வாழ்வூட்டி
பண்பாய் பாசமாய் நேசமாய் அரவணைத்து,
உயர் வாழ்வு தந்த தெய்வமே எங்கள் ஐயா!
அன்றுபோல் இன்றும் இனி என்றும்,
குலதெய்வம் முத்துமாரி அம்மனோடிருந்து
இரத்தின வம்சம் ஒளி பெற்றுயர்ந்திட - என்றும்
உறுதுணை நின்று காத்திடுக - கருணை தந்து
பல்லாண்டு பல்லாண்டு வாழ வாழ்த்திடுக.

பெருங்குளம் பிள்ளையார் வீதி, முத்துமாரி அம்மன் கோயில், கல்வயல், சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரர், பூட்டர்.

(42277-51-16-19)

பருத்தித்துறையில்....
புதிய கணனி வகுப்புக்கள் ஆரம்பம்

A/L 2008 மாணவர்களிற்கான GIT
* General Information Technology *
தரம் 5 முதல் O/L மாணவர்களிற்கான
* Certificate in Computing for Kids *

* Diploma in MS Office Applications *
* Diploma in Desktop Publishing *
* Diploma in Internet & Email *
* Diploma in Hardware Technology *
* Diploma in Computer Programming *

அனைத்து மாணவர்களிற்கும் Internet Email வகுப்புக்கள் இலவசமாக நடாத்தப்படும்.

Internet Browsing Center @ Point Pedro
Jeyantha Computer Park
75/22 Thumpalai Road, Sivankovilady, Point Pedro. Phone: 021 226 4303
கிளை: Universal Education Center
Manthekai, Puloly. Phone: 021 226 3860

G.C.E (O/L) இன் பின்னர்..... தெரிவு செய்ய வேண்டிய மிகச் சிறந்த பாதை

FOUNDATION DEGREE PROGRAMME

- மிகக்குறுகிய காலத்தில் சர்வதேச அங்கீகாரம் கொண்ட தகைமைகள்
- தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம், ஆளுமை விருத்தி ஆகிய துறைகளில் பரந்துபட்ட பயிற்சி நெறி
- UK, Canada, Australia, New Zealand போன்ற நாடுகளில் பட்டப்படிப்பினை தொடர்வதற்கான அடிப்படை பாடநெறி
- வெளிநாடுகளில் உயர்கல்வியை தொடர்வதற்கான Student Visa வினை பெற்றுக்கொள்ளஅவசியமான தராதரங்களை வழங்கும் கற்கை நெறி
- O/L பரீட்சையின் பின்னரான ஓய்வு காலம், Foundation Degree Programme இனை பயில்வதன் மூலம் பயன்படுகிற போது உங்கள் எதிர்கால வாழ்வுக்கான வளமான அடித்தளம் இடப்படுகின்றது.
- பாடப்பரப்பு
  - Information Technology
  - English Communication
  - Personality & Skills Development
- பாடநெறிக்காலம்
  3 மாதங்களைக் கொண்ட முழு நேர பாடநெறி
- கற்கை நெறியின் பயன்பாடு
  1. உடனடி வேலை வாய்ப்பு
  2. உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் உயர்கல்வி

LONDON INSTITUTE OF FURTHER EDUCATION
25 A, Hospital Road, Dehiwala. Tel: 011 5518666, 0777 715788

Digitized by Noolaham Foundation.

இளையோர் அறிவியற்கழகம்

தொழில்நுட்பக் கற்கைநெறி ஆரம்பம்

கணனியியல்
இலத்திரனியல்

ஆகிய உயர் தொழில்நுட்ப மற்றும் ஆய்வுகூட வசதிகளுடன் ஆரம்பமாகின்றது.

கற்கைநெறிக்கு

- க.பொ.த. சா/த., உ/த மாணவர்கள் உட்பட உயர் தொழில் நுட்பக் கல்லூரியில் கல்வி கற்பதற்காகக் காத்திருக்கும் மாணவர்கள்.
- பாடசாலைக் கல்விக்கு இடையூறு இல்லாத நிகழ்ச்சி நிரல்.
- பயிற்சியை நிறைவு செய்வோருக்கு உயர் தொழில்நுட்பவியல் வேலை வாய்ப்புகள்
- மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள்.

அனுமதிக்கு முந்துங்கள் (சி-47151)(30-45-15)

தொடர்புகளுக்கு:	
மாவீரர் படிப்பகம், விசுவமடு.	இளையோர் அறிவியற் கழகம், விசுவமடு மகாவித்தியாலய அருகாமை, விசுவமடு.

அனுமதிக்கான முடிவுத் திகதி 15.01.2006



COLLEGEVIEW International
(Professional Overseas Educational Consultants & Promoters)
No. 142-1/2, Galle Road, Wellawatta, Colombo 06, Sri Lanka.
Tel : 0 115 672131, 0114 512175 Fax : 0114 512175
Hotline : 0714 245166, 0773 113156
Email : collegeview@visualnet.lk

NEW SCIENCE COLLEGE

சடப்பொருளியல்
By: **கருணாநிதி.**
Mon,Tue,Wed. -2.30 - 3.30 p.m.
ஆரம்பம்: 02.01.2006
(44803)(30-45-15)

"WE WISH OUR CUSTOMERS AND CONSOMERS HAPPY CHRISTMAS AND PROSPEROUS NEW YEAR"

S.MAHADEVAN,
MANAGING DIRECTOR,
JAYANTHI ENTERPRISES,
MARKET LANE,
AVARANKAL,
PUTTUR. P.O. (N.P)

(44640)(30-45-15)

மரண அறிவித்தல்

திருமதி கனகசபை பராசக்தி

கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி கனகசபை பராசக்தி அவர்கள் 30.12.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும் பாலசுந்தரம் (இளைப்பாறிய எழுது வினைஞரும் தட்டெழுத்தாளரும்), சுசீலா தேவி, தர்மேந்திரன் (சுவிஸ்), அம்பிகாதேவி (ஜேர்மனி), நகுலேஸ்வரன் (சுவிஸ்), தீனதயாபரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மநாதன் (இளைப்பாறிய மதிப்பீட்டாளர்), கோமளேஸ்வரி, செல்வமணி (சுவிஸ்), இலட்சுமி காந்தன் (ஜேர்மனி), தபோதினி (சுவிஸ்), பாமினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஜனகன் (ஜேர்மனி), ஜெகன், சுகன்யா, பேகன், ஜனோபா (சுவிஸ்), தர்சினி (தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), ஜானகி, தர்சிகா (லண்டன்), ஷோபிகா (சுவிஸ்), ஜிதேந்திரா (ஜேர்மனி), விபூஷனா (சுவிஸ்), விபூஷணன் (சுவிஸ்), அட்சனா (சுவிஸ்), அட்சுதன் (சுவிஸ்), சிறிராஜன் (சுவிஸ்), சுஜிவன் (லண்டன்), ரமேஸ்வரன் (கனடா), சசிகுமார் (நோர்வே) ஆகியோரின் பாசமிகுப் பேர்த்தியும் செல்லம்மா, காலஞ்சென்ற சுப்பிரமணியம், நாகேஸ் மற்றும் துரைராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2006) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்டிவீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (44801)(30?-45-15) **தகவல்: குடும்பத்தினர்.**

செல்லத்துரை சின்னத்தம்பி

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், PSMPA)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் அச்செழு மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சின்னத்தம்பி நேற்று (31.12.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - ஆச்சிக்குட்டி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற இராசமணி, காலஞ்சென்ற பாலசிங்கம், விஜயலட்சுமி, விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை, இரத்தினசிங்கம், காலஞ்சென்ற குலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் நிற்குணானந்தன் (பிரதிப் பணிப்பாளர், சுங்கத் திணைக்களம், கொழும்பு), தயாநிதி (கொழும்பு), தயாரதி, ஜீவானந்தன் (லண்டன்), சுமதி (ஜேர்மனி), சுரேஷ் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் நிரஞ்சலா (கொழும்பு), காலஞ்சென்ற மகேஸ்வரன் (குசைன் ஸ்ரோர்ஸ், கொழும்பு), சௌந்தரராஜன் (விவசாய போதனாசிரியர், திருநெல்வேலி), வசந்தா (லண்டன்), வைத்தீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் லக்ஸ்மினி, பிரதீபன், பிரகாஷ், ஜெனித்தா, ஜெசிந்தா, சுஜீரா, கஜீதா, மேனன், ஜெனுஷா, லக்ஷன், சிந்துஜன், அனுஷன், சங்கீதன், ஆருஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2006) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அச்செழு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அன்னவாசா'
அச்செழு, நீர்வேலி.
தொ.பே.0776155988
(44809)(30-15-45)

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமகன், (இ.சௌந்தரராஜன் விவசாய போதனாசிரியர், திருநெல்வேலி)

மனுவேற்பிள்ளை பற்றிக் இம்மானுவேல்

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும், சில்லாலை வடக்கு, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும்கொண்ட மனுவேற்பிள்ளை பற்றிக் இம்மானுவேல் அவர்கள் சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சு.மனுவேற்பிள்ளை - மாதிறேற் தம்பதியரின் அன்பு மகனும், மேரி வியாற்றிஸ் (புனிதம்) அவர்களின் அன்புக் கணவரு, விமல்ராஜ் (விமல்), கிறிசாந்தி (ஜினோ), பசில்ராஜ் (பசில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சிறில் இம்மானுவேல் மற்றும் லோறன்ஸ் இம்மானுவேல், சூ.புலோமினா, இ.திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வர்களான ம.கபிரியேற்பிள்ளை, க.மரியம்மா தம்பதியரின் மருமகனுமாவார்.

அன்னாரது பூதவுடல் நாளை (02.01.2006) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை வடக்கு, பண்டத்தரிப்பு. (44802)(30-15-45) **தகவல்: குடும்பத்தினர்.**

நெல்லைசில்க்
அதிர்ஷ்டம்

மார்கழிமாத பட்டுச்சேலை அதிர்ஷ்ட எண் 2120 உரியவர்கள் நேரில் வந்து பட்டுச் சேலையைப் பெற்றுக்கொள்ளலாம். (47152)(30-15-45)

சி.அகிலதாஸ் (உரிமையாளர்)

மகிழ்ரோகரா யாழ்ப்பாணம்

காட்சி நேரம் - 10.30, 1.30, 4.30, 7.30, 10.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம்

காட்சி நேரம்:
10.30, 2.00, 5.15, 8.15

ராஜா யாழ்ப்பாணம்

உங்கள் சத்தியராஜ் (இருவேடம்)
சங்கவி, ஆனந்தராஜ் நடித்த
அய்யர் I.P.S
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.00 மட்டும்

நாகம்ஸ் சுன்னாகம்

ரஜினி, பிரபு, ஜோதிகா, வடிவேலு நடித்த
சந்திரமுகி
தினசரி: புது நேரம் 10.30, 2.30, 5.30

திருமதி புவனேஸ்வரி கைலாயபிள்ளை

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் சரசாலை வடக்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி கைலாயபிள்ளை நேற்று (31.12.2005) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், சுப்பிரமணியம் கைலாய பிள்ளையின் (ஈஸ்வரி ஸ்ரோஸ், சாவகச் சேரி) அன்பு மனைவியும், சுசீலாதேவி, குலசிங்கம் (ராஜா ரேட் சென்ரர், சுன்னாகம்), இராஜசிங்கம் (ஸ்கைலாஸ், சாவகச்சேரி), விமலாதேவி, குணசிங்கம் (ஈஸ்வரி றேடர்ஸ், மானிப்பாய்), பாலசிங்கம், ஜெயசிங்கம் (சைபிரஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குமரகுரு (ஓய்வுபெற்ற சிறாப்பர், கொழும்பு), மாலா, குமுதினி, சுந்தரலிங்கம் (சுமங்கலி புடைவையகம், சாவகச்சேரி), கௌரி, குமுதினி, டிலானி (சைபிரஸ்) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் கமலேஸ்வரி, குணரத்தினம், மனோகரன், திருச்செல்வன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஹரிதாஸ் (இறுதிவருட விஞ்ஞானப் பீடம், யாழ். பல்கலைக்கழகம்), மணி மேகலை (உள்ளக கணக்காய்வாளர்), அனுசன், அகிலன் (யாழ். இந்துக்கல்லூரி), தாரணி (சா.இந்துக் கல்லூரி), மேனகா, சுரேன் (கொ.இந்துக் கல்லூரி), யசிந்தன் (யா.இந்துக் கல்லூரி), லங்கீதா (யா. இ.ஆ. பாடசாலை), கோபிராஜ், கோகிலாராஜ், விஜயராஜ் (யா.இந்துக் கல்லூரி), சுமங்கலி (யா.இந்துமகளிர் கல்லூரி), விஷ்ணுசுந்தர் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), கௌரீசன், விதுஷாயினி, கரிகரன், சரண்யா (சா.இ.க.), சாரங்கன், ஜனகன், ஆதித்தன் (சரசாலை ஸ்ரீகணேச வித்.), சோபிதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொம்பிகுளம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (44812)(30-15-45) **தகவல்: சு.கைலாயபிள்ளை (கணவர்).**

மரண அறிவித்தல்

முனியையாபிள்ளை செல்லத்துரை (துரை)

(திருமகள் அச்சக முன்னாள் பணியாளர்)

அரியாலை திருமகள் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முனியையாபிள்ளை செல்லத்துரை அவர்கள் 29.12.2005 வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முனியையா பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தாமோரம்பிள்ளை அருந்தவநாயகி, நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கதிர்காமநாதன், சண்முகசுந்தரம், ஜெயலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் மங்களேஸ்வரி, சத்தியேஸ்வரி, பரமேஸ்வரன், கமலேஸ்வரி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கோபாலசிங்கம் காலஞ்சென்ற பாலகுமார், புஸ்பலதா, கேதீஸ்வரன், சந்திரவதனி ஆகியோரின் அன்பு மாமனாரும் சர்மிலன், பிரசாத், வினோத், நரேஸ், பவித்திரா, வினிசன், தனுசன், ஜீசன், ஸ்ரிகன், கவிகா, றுபிகன், சந்தியா, சனு, சுவேத்தா, டேவநந்தினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2006) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடை பெற்று, முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

57/37, திருமகள் வீதி,
அரியாலை.
T.P.: 0777280270 (44811)(30-15-45)

தகவல்: குடும்பத்தினர்.

திருமதி லிங்கரத்தினம் ஜெகதீஸ்வரி (தேவி)

கந்தரோடை, சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி ஜெகதீஸ்வரி அவர்கள் (30.12.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற லிங்கரத்தினத்தின் அன்பு மனைவியும் சுகந்தினி (சுவிஸ்), சாந்தினி (ஜேர்மனி), யாழினி (சுவிஸ்), சையினி (மன்.சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), பாமினி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், கைத்தொழில் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயகௌரியின் அன்புச் சகோதரியும் சிவராஜலிங்கம், சிவாஜிதுரை ஆகியோரின் மாமியாரும் யோகநாதனின் மைத்துனியும் அஸ்வின், ஆருதி, கஜந்தன், ஹரிஸ் ஆகியோரின் பேர்த்தியும் கோபிகா, வர்சா ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தரோடை, சுன்னாகம். (44807)(30-15-45) **தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையினரை முகாம்களில் முடக்கி யாழ்ப்பாணத்தை பிடிக்க திட்டமாம்

கொழும்பு,ஜன.1

இராணுவத்தினரை வன்முறைகள் மூலம் முகாம்களுக்குள் முடக்கி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற விடுதலைப் புலிகள் முயற்சிப்பதாக கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

1980ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலும் விடுதலைப் புலிகள் இத்தகைய இடத்திற்கிடம் தாக்குதல்களை நடத்தி இராணுவத்தினரை முகாம்களுக்குள் முடக்கிவிட்டு பின்னர் அந்த முகாம்களைத் தாக்கி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற நடவடிக்கைகளை எடுத்தனர் என்று புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

'ரிவிரெஸ' இராணுவ நடவடிக்கையின் மூலம் யாழ்ப்பாணத்தை மீட்டபின்னர் வெளியிலிருந்து தாக்குதல் நடத்தி அதனைப் பிடிப்பதற்குப் பல தடவைகள் முயற்சிக்கப்பட்ட போதிலும், அந்த முயற்சிகள் தோல்வியடைந்தன.

விடுதலைப் புலிகளின் நீண்டகாலத் திட்டங்களுக்கமைய அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் வந்து தாக்குதல்களை நடத்தி இராணுவத்தினரை முகாம்களுக்குள் முடக்க முயல்வதாக மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்திருப்பதாக அந்த ஊடக செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-12)

போரா? சமாதானமா?...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சும், போரும், போர்நிறுத்தமும், சமாதானமும் எல்லாவற்றையுமே எங்களுக்கு உரிய வழிகளாக நாங்கள் பயன்படுத்திக்கொள்கிறோம். தடைகளைத் தாண்டுவதற்கான படிகளாக இவற்றை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இதுதான் எங்களுக்குரிய பரிணாம மாற்றம். இதனை உலகம் ஒரு பொழுதும் உணரமாட்டது.

எங்களுக்குரிய காலமும் நேரமும் நெருங்கிவிட்டது. போரா? சமாதானமா? சிங்களவரே முடிவு செய்துகொள்ளட்டும்.

27, 28 வருடகால அனுபவத்திரட்சி, அரசியல் முதிர்ச்சி, எல்லாவற்றையும் இணைத்து பாலா அண்ணை நூலாக எமக்குத் தந்திருக்கிறார். ஒட்டுமொத்த விடுதலை வரலாற்றை ஆழமாகப் பதிவு செய்திருக்கிறார். வரலாற்று ஆவணம் ஒன்றை வரலாற்றுப் பத்திரமே எழுதியிருப்பது மிகவும் முக்கியமானதாக அமைகிறது.

நாங்கள் கூறுவதைச் செவிமடுத்துக் கேட்பதற்குத் தயாரான நிலையில் இப்போது உலகம் இருக்கிறது. உலகின் புவி மையம் எங்களை நோக்கித் திருப்பப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இது போன்ற நூல் வெளிவந்திருப்பது மிகவும் பொருத்தமானதாக இருக்கிறது.

இந்திராகாந்தி கொல்லப்பட்டதற்குப் பின்னர்தான் இந்தியாவின் கொள்கைகள் மாற்றமடைந்தது.

வன்னிக்குள்ளே போர்மேகம் திரளப் போகிறது. ஜோசப் பரராஜசிங்கத்தை, சந்திர நேருவை, சிவராமை தென்தமிழீழத்திலே ஏன் கொலைசெய்தார்கள்? தென்தமிழீழத்தைத் துண்டாடுவதற்கு சிங்களவர்களும் இந்தியாவும் உலகமும் எடுத்த முயற்சி பற்றி நாங்கள் சிந்திக்கவேண்டும். தென்தமிழீழத்தை துண்டாடஒருபோதும் விடமாட்டேன் என்று தலைவர் பிரபாகரன் அவர்கள்எப்பொழுதோகூறிவிட்டார். அதனை செயலிலும் காட்டிவிட்டார்.

நோர்வேக்கு அடுத்ததாக ஜப்பான் இங்கே வந்திருக்கிறது. ஜப்பானுக்கும் எங்களுக்கும் உள்ள உறவு என்ன என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். ஜப்பானோடு எங்களுக்கு எந்தக் காழ்ப்புணர்வும் கிடையாது. ஆனால், முதலில் நோர்வேக்குப் போய் பேசுவோம். பிறகுஎங்களாலது பேசுவதுபற்றிமுடிவெடுப்போம்.

எங்களுடைய ராஜதந்திர அரசியல் நகர்வு என்பது இன்று நேற்று ஆரம்பமானதல்ல. 1983ஆம் ஆண்டு இந்தியாவுக்குப் பயிற்சிக்குப் போவதற்குத் தலைவர் தயங்கிய போதே ராஜதந்திர அணுகுமுறை அவரால் முன்வைக்கப்பட்டுவிட்டது. அவரது அந்தச் சிந்தனையை நாங்கள் ஆழமாகப் பார்க்க வேண்டும். எங்களுடைய போராட்டத்தின் நெறிப்பாடு மிகத்தெளிவாக உலகத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது.

நாங்கள் இனி என்ன செய்யவேண்டும்? எவ்வாறு அடுத்தகட்டத்துக்கு நகரலாம் என்பது பற்றி அனைவரும் சிந்திக்கவேண்டும். அதற்கு ஊடாக நாங்கள் எமது விடுதலையை வெல்வதற்குரிய வாய்ப்பு எங்கள் கைகளில் வந்திருக்கிறது. இதுவிடயத்தில் தலைவரின் தெளிவான முடிவு ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கிறது. - என்று தெரிவித்தார் பாலகுமாரன் .(ஐ-த-3-6)

அரச, வங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தும் பணிப்புறக்கணிப்பினை செய்து வந்தோம்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் உயர்பீடத்தினது ஊக்குவிப்பு மற்றும் வழிகாட்டலுடன் ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்ட படுகொலைகள், தமிழ்மக்கள் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்கள், சட்டத்திற்குப் புறம்பாக தடுத்துவைத்தல், என்பன மக்களது இயல்பு வாழ்வு நிலையைச் சிதைத்தமையே எமது பணிப்புறக்கணிப்பிற்கு வழிகோலியது.

மனித உரிமைகள் சாசனத்தில் குறிப்பிடப்படும் அனைத்து சுதந்திரங்களும் மறுக்கப்பட்டு, உயிரச்சம் ஓங்கிய நிலையிலேயே மக்களது அபிலாசைகளை முன்வைத்து போராடுவது என்ற முடிவுக்கு வந்தோம்.

தொடர்ந்து மக்களது முழுமையான ஆதரவுடன் பணிப்புறக்கணிப்பினை மேற்கொண்டோம்.

இப்பணிப்புறக்கணிப்பின் காரணமாக ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் நிர்வாக பொறிமுறை முழுமையாக யாழ். மாவட்டத்தில் ஸ்தம்பித்தது.

அதன்போது, மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளாகிய மருத்துவம், போக்குவரத்து, வர்த்தக செயற்பாடுகள் முதலயவை தடைகள் ஏதுமற்று தொடர்ந்து இயங்கின.

மக்களது அன்றாட வாழ்க்கை நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய சூழலில், எமது பணிப்புறக்கணிப்பை 02.01.2006இல் இருந்து விலக்குவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

ஆனால், அரசாங்க மற்றும் வங்கிப் பணியாளர்களுக்கும், பொது மக்களுக்கும் இயல்பு வாழ்க்கைப் பாதிப்பு ஏற்படுத்தப்படுவது தொடருமெனில் - பணியாளர்கள் அகௌரவப்படுத்தப்படுவார்களாயின் - பணிப்புறக்கணிப்பு முழு அளவில், விரிவுபடுத்தப்பட்டு ஸ்ரீலங்கா அரசாங்க செயற்பாடுகள் அனைத்தும் யாழ். மாவட்டத்தில் முடக்கப்படும் என்பதையும் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும் ஸ்ரீலங்காப் படைத்தரப்பினருக்கும் ஆணித்தரமாகக் கூறிக்கொள்கின்றோம். கடந்த நாள்களில் மேற்கொள்ளப்பட்ட பணிப்புறக்கணிப்பின்போது எமக்கு முழு ஆதரவினை நல்கிய பொதுமக்களுக்கும் வெகுஜன அமைப்புகளுக்கும் எமது தோழமையுடனான நன்றியினைத் தெரிவிக்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
கல்வியாண்டு - 2006
தரம் 1 முதல் O/L, A/L வரை
ஆரம்பம்: 02.01.2006 திங்கள் 3 மணி
★ விஞ்ஞான ஆய்வுகூட வசதியுடன் பொன்முறை வகுப்புகளும் நடத்தப்படும்.
★ வகுப்பு தரம் 6 பரீட்சைகள் (நாவலர் வெளியீடு).
★ மாணவர் தேர்ச்சி அறிக்கை பெற்றோர் பார்வைக்கு அனுப்பப்படும்.
★ தரம் 5 (புலமைப்பரிசில்) வகுப்புகளும் ஞாயிறுதோறும் பயிற்சிப் பரீட்சையும் (நாவலர் வெளியீடு).
★ Grade 6,7,8,9 English medium வகுப்புகளும் ஆரம்பம்.
★ A/L கலை, வர்த்தக வகுப்புகள் 09.01.2006 முதல் ஆரம்பம்.
★ புதிய அனுமதிகள் 15.01.2006 வரை வழங்கப்படும்.

ஜோசப் எம்.பியை ராஜபக்ஷ தேர்தலுக்கு முன்னர் எச்சரித்தார்?

மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலுக்கு முன்பாக எச்சரித்திருந்தார் என்ற தகவலை பிரான்ஸ் தமிழர் மனித உரிமைகள் மையம் அம்பலப்படுத்தியுள்ளது.

பிரான்ஸ் தமிழர் மனித உரிமைகள் மையத்தின் பொதுச் செயலாளர் ச.வி.கிருபாகரன் இது தொடர்பாக விடுத்த அறிக்கையை இணையத்தளம் ஒன்றுவெளியிட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் 6ஆம் நாள் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், கொழும்பில் வெளியாகும் டெய்லி மிரர் பத்திரிகைக்கு மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரம் பற்றி வழங்கிய செவ்வியில் ராஜபக்ஷ போர்ப் பறை சாற்றுகிறார் என்று கூறியிருந்தார்.

செப்ரெம்பர் 6ஆம் நாள் டெய்லி மிரர் பத்திரிகையில் செய்தி வெளியானதும் அப்போதைய பிரதமரான ராஜபக்ஷ கொழும்பில் உள்ள ஜோசப் பரராஜசிங்கத்தின் இல்லத்திற்கு தொலைபேசி செய்து, பரராஜசிங்கத்துடன் கத்திரிகையில் வெளியான செய்தி பற்றி விவாதித்துள்ளார்.

அத்துடன், முடியுமானால் இந்தக் கூற்றைத் திரும்பப் பெறுமாறும் பரராஜசிங்கத்திடம் வேண்டியுள்ளார். கொள்கைப் பற்றும் நேர்மையும் கொண்ட பரராஜசிங்கம், ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கு செவிசாய்க்காத நிலையில் ராஜபக்ஷ தேர்தல் முடிவடைந்தும் எனது உண்மை நிலையை நீங்கள் யாவரும் அறிவீர்கள் என்று பரராஜசிங்கத்திடம் கூறியுள்ளார்.

இந்தக் கூற்று இரட்டைக் கருத்துக் கொண்ட காரணத்தினால் பரராஜசிங்கம் இவ்விடயத்தைத் தனது நெருங்கிய சகாக்களுடனும், தமிழர் மனித உரிமை மையத்தின் பிரதிநிதிகளுடனும் பகிர்ந்துள்ளார் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

கொழும்பு நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைநகரின் சந்து, பொந்துகள் எங்கும் புகுந்து பொலீஸார் இந்தத் தேடுதலை மேற்கொண்டனர். இதன்போது 815 ஆண்களும் 105 பெண்களும் உட்பட 925 பேர் கைது செய்யப்பட்டனர் என்று கொழும்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்தார்.

தலைநகரில் புத்தாண்டு பிறப்பதற்கு முதல் நாள் திடுதிப்பென நடத்தப்பட்டிருக்கும் இந்தத் திடீர் பாதுகாப்பு நடவடிக்கை கொழும்பு வாழ் தமிழர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

வீடுகளில், விடுதிகளில் தங்கியிருந்தோர் திடீரென பொலீஸாரால் அழைத்துச்செல்லப்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. கொண்டுசெல்லப்பட்டவர்கள் என்னவானார்கள் என்பதை அறிந்து கொள்வதற்காக உறவினர்கள் பொலீஸ் நிலையங்களுக்குப் படையெடுத்தனர். இதனால் பொலீஸ் நிலையங்களில் பெரும் கூட்டம் நிறைந்து காணப்பட்டது.

15 பொலீஸ் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரத்து 500 பொலீஸாரும் இரண்டாயிரம் இராணுவத்தினரும் இணைந்து தேடுதலை நடத்தினர். காலை 6 மணிக்கு ஆரம்பமான தேடுதல் நடவடிக்கை முற்பகல் 11 மணி வரை தொடர்ந்தது.

முகத்துவாரம், வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, தெஹிவளை, நாரஹேன்பிட்டி, கிருலப்பனை, தெமட்டகொட, பொரளை உட்பட 15 பொலீஸ் பிரிவுகளில் பொலீஸார் சல்லடைபோட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் பொலீஸ் நிலையங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். ஆண், பெண் என்ற வேறுபாடின்றி எல்லோரது கைவிரல் அடையாளங்களும் பதிவுசெய்யப்பட்டன. கைதானோர் புகைப்படம் மற்றும் வீடியோவில் படம் எடுக்கப்பட்டனர்.

இந்தத் தேடுதலின்போது முகத்துவாரப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் சிக்கியுள்ளார் என்றும் அவரிடமிருந்து முக்கிய பல ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன எனவும் கொழும்பு மாவட்டப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் தெரிவித்தார்.

பொரளைப் பகுதியில் வானத்தமுல்ல என்ற இடத்தில் மறைவிடம் ஒன்றில் நடமாடும் சிகிச்சை நிலையம் அடங்கிய வாகனம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த வாகனம் வன்னியில் புலிகளின் பகுதிக்குக் கொண்டு செல்வதற்காக மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

கைதானவர்களில் 53 பேர் தவிர்ந்த ஏனையோர் பின்னர் விடுவிக்கப்பட்டனர். தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்படுவோர் பின்னர் நீதிமன்றங்களில் ஆஜர்செய்யப்பட்டு விடுவிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய தேடுதல் நடவடிக்கையின்போது போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புபட்டவர்களும் இலக்குவைக்கப்பட்டனர் எனவும், அத்தகைய சிலரும் கைதுசெய்யப்பட்டவர்களில் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

போர்நிறுத்த காலப் பகுதியில் தலைநகர் கொழும்பில் நடத்தப்பட்ட பெரும் எடுப்பிலான தேடுதல் இதுவே என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைக்கு 'ஸ்ரேஞ்சர் நைட் III' (Strangers Night III) என்று பெயரிடப்பட்டிருக்கிறது. (ஐ-12)

வல்வைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சத்தங்கள் கேட்டன. மேலதிக விவரங்கள் தெரியவரவில்லை.

கடற்படைப் படகுகளில் இருந்து புத்தாண்டை ஒட்டி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என்று ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ-70)

யாழ்.நகரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் காலை முதல் படையினர் அதிக எண்ணிக்கையில் குவிக்கப்பட்டிருந்தனர்.

வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் பகுதி உட்பட பல இடங்களிலும் வீடுகளில் சோதனை நடத்தப்பட்டது. அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டன. (ஐ-7-17)

பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருதி வன்னிக்கு வந்திருக்கின்றனர் என்று இடம்பெயர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்தே அதிக குடும்பங்கள் வெளியேறி உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-6)

பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிப்பதென முடிவுசெய்யப்பட்டது.

கடந்த டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக சமூகம் நடத்திய அமைதிப் பேரணியை இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் கொட்டன்களால் தாக்கியும் கலைத்தனர். இதன்போது பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் உட்பட மாணவர்கள் பலர் இராணுவத்தின் பலத்த தாக்குதலுக்கு இலக்கானார்கள். இதனையடுத்து யாழ். பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டன என்பது தெரிந்ததே.

இதேவேளை -

புதிய ஆண்டின் முதலாம் தவணைக்காகப் பாடசாலைகளும் நாளை திறக்கப்பட உள்ளன. (ஐ-8-7-12)

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.01.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆரியகாந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
01.01.2006

வரலாறு உணர்த்தும் பாடத்தை புரிந்துகொள்ளுமா சிங்கள அரசு?

இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்தவேளையில் இஸ்ரேல் என்றொரு நாடு இருக்கவில்லை. அந்தப் பிரதேசத்தைக் கைப்பற்றியிருந்த பிரிட்டனாலேயே இஸ்ரேல் என்ற நாடு உருவாக்கப்பட்டது. அந்த வேளையில் தமக்கென நாடு ஒன்று இல்லாது யூத இனத்தவர் மேற்குலக நாடுகளில் பரந்துபட்டு வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கென இஸ்ரேல் என்ற நாடு உருவாக்கப்பட்டது. உலகின் பல பாகங்களிலும் பரந்துபட்டு வாழ்ந்துவந்த யூத இனத்தவரில் கணிசமான தொகையினர் இஸ்ரேலில் குடியமர்த்தப்பட்டனர்.

யூத இனத்தவர்களுக்கென இவ்விதம் இஸ்ரேல் என்றொரு நாடு உருவாக்கப்பட்டதை அவ்வேளையில் அராபிய நாடுகள் எதிர்த்து வந்தன. இதன் காரணமாக எகிப்து, சிரியா, ஜோர்தான், லெபனான் மற்றும் ஈராக் ஆகிய அராபிய நாடுகள் ஒன்றிணைந்து 1948ஆம் ஆண்டிலேயே இஸ்ரேலுக்கு எதிராகப் போரில் இறங்கின. ஆயினும், அராபிய நாடுகளை எதிர்த்துப் போரிட்ட இஸ்ரேல் அந்த

யுத்தத்தில் வெற்றியை ஈட்டிக் கொண்டது.

அராபிய நாடுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையிலான இரண்டாவது யுத்தம் 1956 ஆம் ஆண்டில் ஆரம்பமானது. எகிப்திய ஜனாதிபதி கமால் அப்துல் நாஸர், சுயஸ் கால்வாயை மக்கள் மயப்படுத்தியதும் அதே ஆண்டிலேயே ஆகும். ஆயினும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எகிப்து நாட்டுடன் யுத்தத்தில் ஈடுபட்ட இஸ்ரேல் அந்தப் பிரதேசத்தையும் தானே ஆக்கிரமித்துக் கொண்டது. மோசே தயான் என்ற இராணுவத் தளபதியின் வழிநடத்தலில் மேற்கொள்ளப்பட்ட அந்த யுத்தத்தில் இஸ்ரேலால் வெற்றியடைய முடிந்த போதிலும், சர்வதேச அழுத்தம் காரணமாக அப்பிரதேசத்தினின்றும் தனது படைகளை விலக்கிக் கொள்ளவேண்டிய நிலை இஸ்ரேலுக்கு ஏற்பட்டது. ஆயினும், அராபிய நாடுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையிலான யுத்தம் அத்துடன் முடிவுக்கு வந்துவிடவில்லை.

1967ஆம் ஆண்டில் இடம்பெற்ற 'ஆறு நாள் யுத்தம்' என அழைக்கப்பட்ட யுத்தத்தின் இறுதியில் காஸா நிலப்பரப்பு உட்பட கணிசமான அராபிய பிரதேசம் இஸ்ரேலியர் வசமானது. எகிப்து, ஈரான் மற்றும் சிரியா ஆகிய மூன்று நாடுகளுக்கும் எதிராக இஸ்ரேலால் ஒரே சமயத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த யுத்தம் ஆறு நாள்களுடன் நிறுத்தப்பட்டமையால் அது 'ஆறு நாள் யுத்தம்' என வரலாற்றில் பதிவாக நேர்ந்தது.

1967 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதமளவில் அராபிய நாடுகள் மற்றும் இஸ்ரேல் ஆகிய இரு தரப்புக்களும் யுத்தத்துக்குத் தயார் நிலையில் - சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டு முடித்திருந்தன. இஸ்ரேல் என ஒருநாடு உருவாவதை அராபிய நாடுகள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டாதென எகிப்திய ஜனாதிபதி நாஸர் தெரிவித்திருந்தார். தமது எதிர்ப்பை பலப்படுத்துவதற்காக சிரியா மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளுடன் ஜனாதிபதி நாஸர் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றினையும் மேற்கொண்டிருந்தார். சோவியத் ரஷ்யாவுடன் கொண்டிருந்த நெருக்கமான உறவு காரணமாக அவர் யுத்தத்துக்குத் தேவைப்பட்ட ஆயுதங்களை ரஷ்யாவிடமிருந்து பெற்றுக் கொள்ளமுடிந்தது.

இஸ்ரேலும், போருக்கான முன் ஆயத்தமாகத் தனது படை பலத்தை விரிவுபடுத்தி வந்தது. அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளின் உதவி இஸ்ரேலுக்குக் கிட்டியது. இவ்விதம் இவ்விரு தரப்புகளும் யுத்தத்துக்கு தயார் நிலையில் இருந்தபோதிலும் யுத்தம் அத்துணை விரைவாக ஆரம்பமாகுமென எவருமே எதிர்பார்க்கவில்லை. அந்தவேளையில் இஸ்ரேலிய இராணுவத்தின் பிரதம கட்டளை அதிகாரியாக சிட்சாக் ராபின் கடமையாற்றினார். யுத்தம் ஆரம்பமாவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் மோசே தயான் பாதுகாப்பு அமைச்சராக நியமனமானார்.

யுத்தத்தில் எதிர்த்தரப்பாக இயங்கிய அராபிய நாட்டுப் படைகளை அச்சமுற வைக்கும் வகையில், ஹிட்லரின் யுத்த தந்திரத்துக்கு ஒப்பான விதத்தில் ஒரே சமயத்தில் பல முனைகளினின்றும் தாக்குதலை ஆரம்பிக்கும் இராணுவ உத்தியைக் கைக்கொண்டு இஸ்ரேல் யுத்தத்தை ஆரம்பித்தது.

அந்த வகையில் முதலில் எகிப்திய விமானப் படைக்கு எதிராக இஸ்ரேல் தாக்குதலைத் தொடங்கியது. இந்த ஆரம்பத் தாக்குதலை 1967ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஐந்தாம் திகதி காலை எட்டே முக்கால் மணிக்கு இஸ்ரேல் ஆரம்பித்தது. தமக்குக் கிடைத்த உளவுத் தகவலின்படி குறிப்பிட்ட அந்தக் காலைவேளையிலே பெரும் எண்ணிக்கையிலான எகிப்திய விமானங்கள் எகிப்திய விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்படுவது வழக்கமென்பதை இஸ்ரேலிய விமானப்படையினர் தெரிந்து வைத்திருந்தனர். அது மட்டுமன்றி எகிப்திய விமானப்படை அதிகாரிகளில் பலர் தமது வீடுகளிலிருந்து காலைவேளையில் தமது அலுவலகங்களுக்குப் புறப்பட்டுச் செல்லும் குறிப்பிட்ட அந்தவேளையில் காலைப் போக்குவரத்து நெரிசல் காரணமாக அவர்களது பயணம் தாமதமடைவது வழக்கம் என்பதையும் இஸ்ரேலியப் படையினர் தெரிந்துகொண்டிருந்தனர். எனவே, திட்டமிட்டபடி குறிப்பிட்ட அந்தக் காலைவேளையில் இஸ்ரேலிய விமானப் படையினர் எகிப்திய விமான நிலையம் மீது மேற்கொண்ட திடீர்த் தாக்குதல் காரணமாக அவர்களால் எகிப்திய விமானப் படையினருக்கு கடும் இழப்பை ஏற்படுத்த முடிந்தது.

குறிப்பிட்ட அத்தாக்குதலுக்கு 300 விமானங்களை இஸ்ரேல் பயன்படுத்தியதாகக் கருதப்பட்டது. அத்தாக்குதலில் 309 எகிப்திய விமானங்கள் சேதமாக்கப்பட்டன. ஆக 31 விமானங்கள் மட்டுமே எகிப்திய விமானப் படையினரால் சேதமின்றிக் காப்பாற்றப்பட்டன. அந்தத் தாக்குதலில் 350 வரையிலான விமானிகளை எகிப்து இழக்க நேர்ந்தது. இதன் காரணமாக எகிப்திய விமானப் படை தனது வலிமையை முற்றுமுழுதாக இழக்க நேர்ந்தது.

ஜோர்தான் மற்றும் சிரியா ஆகிய நாடுகள் அந்தவேளையில் வலிமை மிக்க விமானப் படையைக் கொண்டிருக்கவில்லை. இக்கட்டு வேளைகளில் அவ்விரு நாடுகளும் எகிப்தின் உதவியையே எதிர்பார்த்திருக்க வேண்டியிருந்தது.

எகிப்து மீது தாக்குதலை ஆரம்பித்த அதேவேளையில் ஜோர்தான் மற்றும் சிரியா ஆகிய மற்றிரு நாடுகள் மீதும் ஒரே சமயத்தில் இஸ்ரேல் தாக்குதல் தொடுத்தது. தம்மீது தொடுக்கப்பட்ட தாக்குதலைச் சமாளிக்கும் விதத்தில் ஜோர்தான், சிரியா ஆகியவை பதில் தாக்குதலை மேற்கொண்ட போதிலும் அவை எகிப்தின் உதவியை எதிர்பார்த்திருந்தன.

ஜூலை 5 ஆம் திகதி நண்பகல் வேளையில் எகிப்திலிருந்து இஸ்ரேலை நோக்கிப் போர் விமானங்களின் அணியொன்று பறந்து செல்வது ஜோர்தானின் விமானப்படையின் 'ரேடார்' திரையில் பதிவாகியது. அதனால், இஸ்ரேல் மீது எகிப்து பெருமெடுப்பில் விமானத் தாக்குதலைத் தொடுத்துள்தாக ஜோர்தானிய விமானப் படை அதிகாரிகள் நம்பினர். எனவே, தாமும் எகிப்துடன் இணைந்து இஸ்ரேல் மீது தாக்குதல் மேற்கொண்டு இஸ்ரேலின் விமானப்படையின் வலுவை முற்றுமுழுதாக அழித்துவிடும் நோக்கில் ஜோர்தானிய விமானப்படையும் செயலில் இறங்கியது. ஆயினும், தமது 'ரேடார்' திரையில் தோன்றிய போர் விமானங்களின் அணி குறித்த தமது முடிவு, தப்புக் கணக்கு என்பதைப் பின்னரே ஜோர்தான் விமானப் படையால் உணரமுடிந்தது. உண்மையில் எகிப்து மீது எதிர்பாராத திடீர்த் தாக்குதலை மேற்கொண்டு எகிப்தின் விமானப் படையின் பலத்தை முற்றுமுழுதாகச் செயலிழக்கச் செய்த பின்னர் இஸ்ரேல் நோக்கிப் பறந்து சென்ற போர் விமானங்களின் அணியே 'ரேடார்' திரையில் ஜோர்தான் விமானப் படை அதிகாரிகளால் அவதானிக்கப்பட்ட போர் விமானங்களாகும். அதேவிதத்தில் ஜோர்தான் மீதும் சிரியா மீதும் திடீர் விமானத் தாக்குதலை மேற்கொண்ட இஸ்ரேலிய போர் விமானங்கள் அவ்விரு நாடுகளின் விமானப் படையின் செயற்பாடுகளையும் முற்றுமுழுதாகச் சிதறடித்து வெற்றியுடன் இஸ்ரேல் மீண்டன.

அடுத்த கட்ட நடவடிக்கையாக எகிப்தின் வசமிருந்த பிரதேசங்களை நோக்கி இஸ்ரேலிய இராணுவம் படை நகர்வை ஆரம்பித்தது. அந்தவேளையில் இஸ்ரேல் பிரதேசத்தை அண்டிய இனாய் வளைகுடாவில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான எகிப்திய இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர். அத்துடன், ஆயிரத்துக்கும் அதிகமான யுத்த டாங்கிகளும், கனரகத் துப்பாக்கிகளும் அங்கு குவிக்கப்பட்டிருந்தன. சினாய் பகுதியை நோக்கி முன்னேறிய இஸ்ரேலியப் படைகள் சினாய்ப் பகுதியில் நிலைகொண்டிருந்த எகிப்தியப் படைகள் மீது மூர்க்கத்தனமான தாக்குதலை மேற்கொண்டன. அதேசமயம், இஸ்ரேலிய விமானப்படையும் இஸ்ரேலிய இராணுவத்துக்கு உதவியாக சினாய்ப் பகுதி மீது கடும் விமானத் தாக்குதலை மேற்கொண்டது. இதன் காரணமாக எகிப்தியப் படைகள் சினாய்ப் பகுதியை விட்டுப் பின்வாங்க நேரிட்டது.

பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் அமைந்துள்ள மிகக் குறுகிய நிலப்பரப்பே 'காஸா' என அழைக்கப்படும்

வீயெஸ்ரீ

பிரதேசமாகும். இது 26 மைல் நீளமும் 5 மைல் அகலமும் கொண்ட குறுகிய நிலப்பரப்பாகும். இது மத்திய தரைக் கடலோரத்தை அண்டி அமைந்துள்ள பிரதேசமாகும். இதுமிகுந்த மக்கள் நெருக்கம் மிக்கதொரு பகுதியாய் அமைந்திருந்தது. இதன் கிழக்குப் புறம் சினாய்ப் பாலைவனம் அமைந்திருந்தது. 1967ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் திகதி முதல் 11ஆம் திகதிவரை இடம்பெற்ற ஆறுநாள் யுத்தத்தின் ஆரம்பத்திலேயே இந்தக் 'காஸா' பிரதேசம் இஸ்ரேலிய இராணுவத்தின் வசமாகியது.

காஸா பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொண்டதையடுத்து இஸ்ரேலிய இராணுவம் எகிப்தின் பிரதேசத்துக்குள் ஊடுருவியதோடு மேலதிக இஸ்ரேலியத் துருப்புக்கள் இரு பிரிவுகளாக எகிப்தின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளை ஊடுருவிச் செல்ல ஆரம்பித்தன. அவ்விதம் முன்னேறிச் சென்ற இஸ்ரேலிய இராணுவம் ஜோர்தான் நாட்டின் எல்லையிலிருந்த மேற்குக் கரைப் பிரதேசத்தையும், ஜோர்தானின் நிர்வாகத்துக்குட்பட்டிருந்த கிழக்கு ஜெருசலேத்தையும் கைப்பற்றிக் கொண்டன.

(VIIIபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006 இல் எண்கணித பலன்கள்

1, 10, 19, 28

1, 10, 19, 28 திகதிகளில் பிறந்தவர்கள் நினைத்ததைச் சாதிக்கக் கூடியவர். இவர் வார்த்தைக்கு எப்போதும் மதிப்பு இருக்கும். இயற்கையாக அமைந்த சுறுசுறுப்பும், சிரித்த முகமும், அன்பு, பண்பு, அடக்கம், நாணயம் ஆகிய நற்பண்புகளால் அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றவர்.

குடும்பம் அமைப்பதிலோ, மனைவியைத் தேர்ந்தெடுப்பதிலோ ஆர்வம் குறைந்தவர். 28 வயதுக்கு மேல்தான் திருமணம் அமையும். நல்ல குணவதியான மனைவி அமைவார். மனைவியால் வசதியை அடையக் கூடியவர். எந்தத் தொழிலிலும் திறமைசாலியாகத் திகழ்வார். அடுத்தவருக்கு ஆணையிடும் உத்தியோகம் அமையும்.

கடந்த ஆண்டை விட இந்த புதிய ஆண்டு முன்னேற்றத்திற்கு வித்திடும் ஆண்டாக அமையும். குடும்ப செலவுகள் சற்று அதிகரிக்கும். அதற்கேற்ற வரவுகளும் உண்டு. தாய் தனது உதிரத்தைத் தருவார். தாரம் தனது உடலைத் தருவார். இருவரில் யாருக்கு முன்னுரிமை தருவது என்பதில் எழும் குடும்ப பிரச்சினையைப் புத்திசாலித்தனமாக சமாளிப்பீர்கள்.

உடன் பிறந்தவர்களின் வீட்டில் சுபகாரியங்கள் நிகழும். அல்லது உடன் பிறப்புகளுக்கு சுபம் நடைபெறும். குழந்தைகள் மேல் இதுவரை இருந்து வந்த கவலைகள் மாறும். கஷ்டங்கள் தீரும். ஆன்மீக சங்கதிகளிலும், தெய்வீக காரியங்களிலும் மனம் ஈடுபடும். வழக்குகளில் வெற்றியை எதிர்பார்க்கலாம்.

பெண்கள்: பொருள் தேடும் பூமியில் அருள்தேடும் நெஞ்சமாக செயல்படுவீர்கள். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். எதிர்பாராத விருந்தாளிகள் அடிக்கடி வருகை தந்து குடும்ப செலவை அதிகபடுத்துவர். சிக்கனம் தேவை இக்கணம்! என செலவை இழுத்துப் பிடித்தாலும் கைக்கு மீறிய செலவுகள் உண்டு.

ஒவ்வொரு மாதமும் 1, 10, 19, 28 ஆம் திகதிகளில் தைரியமாக எந்த காரியமும் செய்திடலாம். எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப நல்ல பலன்கள் கிடைக்கும். கல்வி சம்பந்தப்பட்ட முயற்சிகள் வெற்றிதரும். உத்தியோகம் சம்பந்தப்பட்டவையும் பணம் சம்பந்தப்பட்டவையும் நன்மையைத் தரும். ஒவ்வொரு மாதமும் மருத்துவ செலவு ஏற்படலாம்.

2, 11, 20, 29

2, 11, 20, 29 திகதிகளில் பிறந்தவர்கள் கடினமான வேலையையும் எளிமையாக செய்யத் தெரிந்தவர். கவி குணமும், கனிமொழியும் கொண்டவர். தாயாரின் அன்பும், தந்தையாரின் வழிகாட்டுதல்களும் கிடைத்து குறைவின்றி வளரக் கூடியவர். எவ்வளவு கூட்டத்தில் இருந்தாலும் இவரை சுலபமாக அடையாளம் கண்டுவிடும் தோற்றம் உள்ளவர். இவருடைய வீழ்ச்சிக்கும் கவலைகளுக்கும் பெண்களே காரணமாக இருப்பார்கள். தனக்கு பிடிக்காதவற்றை தைரியமாக எதிர்நோக்கும் நெஞ்சுரமும் நமக்கு ஏன் வம்பு என ஒதுங்கி போகும் குணமும் இவரிடம் கலந்தே இருக்கும்.

எவ்வளவு படித்து இருந்தாலும் இவருக்கு அடங்கிய, இவர் பேச்சுக்கு மறுபேச்சு பேசாத மனைவியே இவருக்கு அமைந்திருப்பார். ஆத்திரத்தை அடக்க வேண்டும். சுயநலத்தை வெறுக்க வேண்டும். அமைதியை பெருக்க வேண்டும் என்று சிலர் அடிக்கடி நினைத்தாலும் நடைமுறைப்படுத்த முடியாமல் திண்டாடுபவராக இருப்பார்.

அமாவாசை, பௌர்ணமி தினங்களில் மூளைக்கு தீனி போடுவதை நிறுத்தி அமைதியாக இருக்க முயற்சிக்க வேண்டும். ஆடம்பரமாக வாழவும், அந்தஸ்தில் உயர்ந்தவர் போல் காட்டிக் கொள்ளவும் மனம் விரும்பும். பெரிய பெரிய காரியங்களை சாதித்த உங்களுக்கு சுண்டைக்காய் அளவுக்கு வேலைகள் வந்து புரட்டி எடுக்கும்.

கைவிட்டு போன பொருள்கள் எல்லாம் ஒவ்வொன்றாக வீடு வந்து சேர்ந்திடும். வெளிநாடு, வெளி மாநிலம் போன்ற இடங்களுக்கு செல்ல திடீர் என அழைப்பு வரும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மாற்றம் இருக்கும். புதிய இடம், அல்லது பழைய வீடு போன்ற ஏதேனும் ஒரு பூமிப்பொருள் உங்களுக்கு உரிமையாகி விடும். மகனுக்கு அல்லது மகளுக்கு வேலை கிடைக்கும். தாயாரின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தகப்பனாரின் வருமானம் அதிகரிக்கும்.

பெண்கள்: திருமணம் போன்ற சுபகாரியங்கள் நினைத்த மாதிரி அமைந்திட தாமதம் ஆகும். உத்தியோகம் மற்றும் வேலைக்குச் செல்பவர்களுக்கு வேலைப்பளுவுடன் பாராட்டுதல்களும் கிடைக்கும். கணவருடன் அடிக்கடி வெளியூர் செல்லும் வாய்ப்புகள் உருவாகிடும். கடன் வாங்கி நகை செய்யும் சம்பவங்கள் நிகழும்.

ஒவ்வொரு மாதமும் 2, 11, 20, 29திகதிகளில் புது ஆடைகள், புதுநகை அணிதல், புது தொழில் தொடங்குதல், ஆன்றோர்களை சந்தித்தல், அரசாங்க சம்பந்தப்பட்ட காரியங்களில் வெற்றியடைதல் போன்றவை நிகழ்ந்திடும். பண வரவுகளும் உண்டு. 1, 10, 19, 28ஆம் திகதிகளில் கணவருடன் சந்தோஷமாக வெளியூர் செல்லுதல், கணவரால் பெருமை அடைதல் போன்ற வையும், தந்தை வழி உறவினர்களால் நன்மைகள் பெறுதல்கள், சம்பள உயர்வு, போனஸ் போன்றவை யும் கிடைக்கும்.

3, 12, 21, 30

3, 12, 21, 30 திகதிகளில் பிறந்தவர்கள் தன்னுடைய பணத்தினாலும், செல்வாக்கினாலும் நினைத்த காரியத்தை முடித்திடுவர். உஷ்ண தேகம் கொண்டவர். வயதுக்கு மீறிய முதிர்ந்த அறிவு இருக்கும். இவர் நினைத்தால் ஒருவரை உயர்த்தவும் முடியும் தாழ்த்தவும் முடியும். ஊர் ஊராக சுற்றுவதில் பிரியமும், சமூக சமுதாய அமைப்பில் பற்றும் கொண்டவர். எதிர்காலத்தை கணக்கிட்டு இளம் வயதிலேயே சேமித்திடும் பழக்கம் கொண்டவர். உடல் உழைப்புக்கு அஞ்ச மாட்டார். கடுமையான வேலையையும் எளிமையாக்க தெரிந்தவர்.

அன்பும் பண்பும் மிக்க மனைவி இவருக்கு அமைவார். ஆண் குழந்தைகள் அதிகம் இருக்கும். ஒருவரிடமிருந்து கிடைக்கும் உதவிக்கு பிரதி உபகாரம் செய்து விட வேண்டும் என்று நினைப்பவர். இலவசமாக எது கிடைத்தாலும் அது தனக்கு இப்பிறவியல் தரப்படுகின்ற கடன் என்பது இவருடைய கொள்கையாக இருக்கும்.

குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். எதை செய்வது என்றாலும் குடும்பத்தில் உள்ளவர்களிடம் கலந்து ஆலோசித்த பின்பே முடிவு செய்வீர்கள். வீட்டை விரிவு படுத்துதல் வீட்டிற்கு தேவையான தளபாடங்கள் புதிதாக வாங்குதல், தொலைபேசி போன்ற சாதனங்களை அமைத்தல் போன்றவை நிகழும்.

மன தைரியம் அதிகரிக்கும். சகோதர சகோதரிகளின் உதவிகள் கிடைக்கும். உறவினர்களுக்காக எதிர்பாராத செலவுகள் தோன்றும். வேறு வாகனம் வாங்கிட கடன் அல்லது சலுகைகள் கிடைக்கும். தாய் வழி சொத்தில் எதிர்பாராத ஒரு திருப்பம் காத்திருக்கும். புத்திரபாக்கியம் ஏற்படும். நெடுநாளாக வரவேண்டியவை வசூலாகும். கூட்டாளிகளுடன் கருத்து வேற்றுமை ஏற்பட்டு தனியாகத் தொழில் துவக்கம் ஏற்படலாம்.

எப்போதோ முயற்சித்தவை இப்பொழுது பலன்தரும். பதவி உயர்வு, பதவி மாற்றம் போன்றவை தொழில் உத்தியோகத்தில் இப்போது கிடைக்கும். பிள்ளைகளுக்காக முயற்சிக்கும் காரியங்களுக்கு பெரிய இடத்து சிபாரிசு, உதவிகள் கிடைக்கும். கலப்பு திருமணம் செய்திடும் அமைப்பு சிலருக்கு உண்டு. புதிய சொந்தங்களால் புதிய பொறுப்புகளும், கவுரவங்களும் கிடைக்கும். கடன் வாங்கி காலத்தை ஓட்டுபவர்கள் மேலும் கடனாளியாவார்கள். சிக்கனத்தை கடைபிடித்து சேமிப்பில் கவனம் செலுத்துபவர்கள் தங்கள் கையிருப்பை அதிகப்படுத்திக் கொள்வார்கள்.

பெண்கள்: எல்லோரும் கூடும் பொது இடம் ஒன்றில் விலை உயர்ந்த பொருள் ஏதேனும் கண்டெடுக்கும் பாக்கியம் கிடைக்கும். அழகான பெண் மகளை பெற்றெடுப்பீர்கள். ஒவ்வொரு மாதமும் 3, 12, 21, 30 ஆகிய தேதிகளில் படிப்பு சம்பந்தப்பட்ட சகல காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். செல்வ நிலையில் அபிவிருத்தி ஏற்படும். புது ஆடைகள் புதுநகை சேர்க்கை ஏற்படும். 1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் தேகத்தில் நல்ல சுறுசுறுப்பு இருக்கும். எதையும் வெல்லும் தைரியம் இருக்கும். பணவரவுகள் இருக்கும். 2, 11, 20, 29 ஆகிய திகதிகளில் செல்லும் இடங்களில் எல்லாம் வெற்றியை சந்திக்கலாம். 5, 14, 23 ஆகிய ஆங்கில திகதிகளில் கணவன்–மனைவி இடையே நல் இணக்கம் இருப்பினும் குடும்ப நிர்வாகத்தின் காரணமாக சில முரண்பாடுகள் ஏற்படும்.

4, 13, 22, 31

4, 13, 22, 31 திகதிகளில் பிறந்தவர்கள் தன்மானம் அதிகம் உள்ளவர். பாசம் மிகுந்தவர். பெற்றோருக்கு கட்டுப்பட்டவர். தனது கடமைகளை குடும்பத்திலும் சரி, தொழில் உத்தியோகம் பார்க்கும் இடத்திலும் சரி கருத்துடன் செய்யக்கூடியவர். புதுமையும் புரட்சி எண்ணமும் கொண்ட இவருக்கு பாராட்டை விட பகையே ஓங்கி நிற்கும். எந்த சூழ்நிலையிலும், சந்தர்ப்பத்திலும், இக்கட்டான இடங்களிலும் அதிர்ஷ்டவசமாக சேதமின்றி தப்பிவிடும் அருள் உள்ளவர்.

முன்கோபம் வருவது எவ்வளவு வேகமோ, அதே வேகத்தில் மறைந்து ஓடிவிடும். 40 வயதுக்குள் இவர் பெயரில் கையளவு இடமாவது சொந்தமாகி இருக்கும். நல்ல அறிவுள்ள அழகுள்ள மனைவி அமைவார்.

தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்து கொட்டாவி விட்ட காலம் மாறுகிறது. சுகமான நித்திரை வரும். கற்பனை வளம் பெருகும். பணவரவு அதிகரிக்கும்.

நீண்ட நாள்களாக எதிர்பார்த்து வந்த காரியங்கள் நிறைவேறி [illegible] கிடைக்கும். உறவினர் மத்தியிலும் தொழில் பார்க்கும் இடத்திலும் தலைநிமிர்ந்து வாழும் சூழ்நிலைகள் அதிகரிக்கும். நற்பெயரும் புகழும் கிடைக்கும். தொழில் இல்லாதவர்களுக்கு தொழில் அமையும். அன்னையின் ஆரோக்கியம் சீராக இருக்கும். பிரயாணங்கள் சுகமானதாக அமையும்.

இதுவரையில் வாட்டி வந்த உஷ்ணம், பித்தம், தலைவலி, பல்வலி, கால்வலி போன்ற உபத்திரங்கள் சரியாகும். இதுவரையில் அடுத்தவரின் பேச்சுக்கு கட்டுப்பட்டு தொழில் செய்து வந்தவர்கள் இனி சுயமாகவே சிந்தித்து செயல்படும் சந்தர்ப்பங்கள் உருவாகும். கல்வியில் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகளின் நடவடிக்கைகளில் நல்லவிதமான மாற்றங்கள் நிகழும். ஒதுங்கி வாழ்ந்த குழந்தைகள் பாசத்துடன் நெருங்கி வரும்.

அரசியலில் ஒரு முக்கிய இடம் கிடைக்கும். புதுக் கட்சிகளில் அடி எடுத்து வைத்தால் கிடுகிடுவென மேல் இடத்தின் அன்பை பெற்றுவிடும் வாய்ப்புகள் கிடைக்கும்.

பெண்கள்: லட்சுமி கடாட்சம் அதிகரிக்கும். குடும்பத்திற்கு தேவையான பொருள் வரவு ஏதேனும் ஒரு வகையில் வந்து கொண்டே இருக்கும். கணவரின் அன்பு அமோகமாக உண்டு. திருமண மாகாத பெண்களுக்கு தகுதியான கணவன் திடீர் என வந்தடைவார்.

ஒவ்வொரு மாதமும் 4, 13, 22, 31 ஆகிய திகதிகளில் பகைகளை வெல்லலாம். கடினமான வேலைகளையும் சுலபமாக செய்திடும் தந்திரம் அதிகரிக்கும். உடலில் ஏற்படும் பிரச்சினைகள் தீர்வுகள் ஏற்படும். பிரயாணங்கள் உண்டு. 1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் பணவரவு உண்டு. மேல் அதிகாரிகளை சந்தித்தல், அவர்களுடைய பாராட்டுதல்களை பெற்றிடல், தனக்கு கீழ் உள்ளவர்களை பணியவைத்தல் போன்றவை நிகழும். 8, 17, 26 ஆகிய திகதிகளில் வேலைப்பளு அதிகரிக்கும்.

5, 14, 23

5, 14, 23 ஆம் தேதிகளில் பிறந்தவர்கள் எடுத்த காரியம் எது என்றாலும் தன்னுடைய நுண்ணுறிவால் திறம்பட செய்து முடிப்பார். மற்றவர்கள் முயற்சி செய்து கஷ்டப்பட்டு துயர்பட்டு கண்டுபிடித்தவைகளை தன்னுடைய பெயரில் வெளிப்படுத்தும் அதிர்ஷ்டம் உள்ளவர். அன்போடு எதைச் சொன்னாலும் தட்டாமல் செய்யக் கூடியவர். எத்தகைய துன்பம் வந்தாலும் எளிதில் மறந்துவிடும் குணம் கொண்டவர்.

பூர்வீகமான இடத்தை விட புதிய இடத்தில் முன்னுக்கு வரக்கூடியவர். வேலைக்கு சென்று பொருளீட்டும் மனைவி அமையப் பெற்றவர். உடன் பிறப்புகள் அதிகம் உள்ளவர். சர்வசாதாரணமாக பெரிய இடத்து நட்புகள் இவருக்கு அமையும். சிக்கன குணம் அதிகம் இருக்கும். நாணயம் காப்பாற்ற சிரமப்படுவார். இவருக்கு சாதாரணமாக வீழ்ச்சிகள் ஏற்படுவதில்லை. கிரக கோளாறுகளினால் தன்நிலை தவறி கஷ்டநிலைக்கு தள்ளப்பட்டவர்கள் 9 ஆண்டுகளுக்கு பிறகே பழைய நிலைக்கு உயருகிறார்கள்.

உங்களை ஏமாற்ற நினைப்பவர்களே ஏமாந்து போவார்கள். இந்த வருட தொடக்கமே அமர்க்களமாக இருக்கும். சோம்பேறித்தனமும் எதையும் தள்ளிப் போடும் குணமும் உங்களிடம் இருந்து விடைபெற்று சென்றுவிடும்.

வீண் அலைச்சல்கள் இருந்தாலும் உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். அரசுப் பணிக்கு விண்ணப்பம் அப்ளை செய்திருப்பவர்களுக்கு நியமனம் விரைவில் வந்தடையும். தனது பெயரையும், கவுரவத்தையும் காப்பாற்றிக் கொள்ள கடன் வாங்கியேனும் செலவிட வேண்டி இருக்கும். மனைவி, மக்களுடன் நட்புடனும் அன்புடனும் பாசத்துடனும் பழகலாம். அவர்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தி[illegible] தேவையான பணம் வந்து சேர்ந்திடும். பெண்களால் சொத்துக்கள் சேர்த்திடும் யோகமும் உண்டு.

உடன் பிறப்புகளுக்காக எதிர்பாராத செலவுகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டி இருக்கும். கூட்ட நெரிசல், வி[illegible] சம்பவங்கள் நிகழும் இடம் போன்ற இடங்களில் வீணாக நிற்கவேண்டாம். தொழில் உத்தியோகம் போன்றவை சென்ற வருடத்தை விட இந்த ஆண்டு சிறப்பாக இருக்கும்.

பெண்கள்: இறைவனை நாடி வேண்டினால் நல்லது நடக்கும். திருமணம் எதிர்நோக்கி இருப்பவர்களுக்கு திருமணம் கைகூடும். அரசு உத்தியோகம் பார்க்கும் மணாளன் மாப்பிள்ளையாக வருவார். வியாபாரம் மற்றும் கல்வித்துறைகளில் பணம் சம்பாதிப்பவர்களுக்கு பணவரவு அதிகம் உண்டு. சிறு சிகிச்சைக் குப்பின் கருத்தரிக்கும் வாய்ப்புகள் ஏற்படும்.

ஒவ்வொரு மாதமும் 5, 14, 23 ஆகிய திகதிகளில் பணவரவுகள் இருக்கும். சுகங்கள் அதிகரிக்கும். புதுப் புது வசதிகள் ஏற்படும். கல்வி பயிற்சியில் வெற்றிகள் கிடைக்கும். 1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் உறவினர்களால் விரோதம் ஏற்படலாம். 8, 17, 26 ஆகிய திகதிகளில் முன்னுக்குப்பின் முரணாக பேச வேண்டியிருக்கும். செய்யும் தொழில், வியாபாரம், உத்தியோகம் போன்றவற்றில் லாபகரமான பலன்கள் கிடைக்கும்.

(VII பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் டெங்கு!

மூக்கினாலும் வாயினாலும் பெருமளவு குருதி வெளியேறி தலையில் குழந்தை நோயாளி....

எம்மைப் பீடிக்கின்ற நோய்கள் பலவற்றிற்கு இன்னமும் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. இப்படி தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படாத பட்டியலில் உள்ள ஆள்கொல்லி நோய்களில் ஒன்று டெங்கு (Dengue). குடாநாட்டையும் தற்போது இந்நோய் விட்டுவைக்கவில்லை.

நுளம்புகளும் நோய்களும்

நுளம்புகளால் ஏற்படும் நோய்களான மலேரியா, யானைக்கால் போன்று டெங்கும் நுளம்பினாலேயே ஏற்படுகின்றது. நுளம்புகள் நோயாக்கிகளின் காவிகளாகவே தொழிற்படுகின்றன. அனோபிலிஸ் (Anopheles) எனும் வகை நுளம்புகள் மலேரியா நோயை ஏற்படுத்தவல்ல பிளஸ்மோடியம் (Plasmodium) எனப்படும் புரட்டோசோவன்களையும் கியூலெக்ஸ் (Cules) எனும் வகை நுளம்புகள் யானைக்கால் நோயை ஏற்படுத்தவல்ல மைக்கிறோ பைலேரியா (Micro filoria) எனப்படும் புழுக்களையும், ஈடிஸ் (Aedes) எனும் வகை நுளம்புகள் டெங்கு நோயை ஏற்படுத் தவல்ல வைரஸ் (Virus)களையும் காவுகின்றன.

நுளம்புகள் மனிதக் குருதியை உணவாக உள்ளெடுக்கும்நோக்குடன் எமது உடலில் வந்தமர்ந்து குருதியை உறிஞ்ச முன்னர் தமது உமிழ் நீரை எமது உடலினுள் செலுத்துகின்றன. இதனுடாக இந்த நோயாக்கிகள் எமது உடலை வந்தடைகின்றன. ஒரு நேர அட்டவணையிலேயே மாறிமாறி இந்த நுளம்பு வகைகள் எம்மைக் கடிக்கின்றன.

அனோபிலிஸ் நுளம்பு முன்னிரவு, அதிகாலை போன்ற நேரங்களிலும் கியூலெக்ஸ் வகை நுளம்பு கள் நடு இரவு நேரத்திலும், ஈடிஸ் வகை நுளம்பு கள் பகற் காலத்திலும் எம்மைக் கடிக்கின்றன.

ஆள்கொல்லி நோய் டெங்கின் வருகை

1980ஆம் ஆண்டு இலங்கையில் முதன்முதலில் ஒரு டெங்கு நோயாளி அடையாளம் காணப்பட்டார். உரிய நடவடிக்கைகள் எடுக்கத் தவறியதால் அடுத்த ஆண்டு (1981) நோயாளர் களின் எண்ணிக்கை 10ஆக அதிகரித்தது. 1989ஆம் ஆண்டு 203 நோயாளர்கள் இலங்கையில் அடையாளம் காணப்பட்டனர். 20 நோயாளிகள் இறந்தனர். 1990 ஆம் ஆண்டு ஆயிரத்து 121 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர். அதில் 61 நோயாளிகள் இறந்தனர்.

ஆரம்பத்தில் தென்னிலங்கைப் பகுதியிலேயே இதன் தாக்கம் காணப்பட்டது. ஆனால் அண்மித்த சில ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தினுள் இதன் தாக்கம் அதிகரித்து வருவது ஆரோக்கியமற்ற நிலைமையை காட்டுகின்றது.

1993 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் முதலாவது டெங்கு நோயாளி அடையாளம் காணப்பட்டார். இந்த எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகின்றது. சந்தேகத்தின் பேரில் பல நூற்றுக்கணக்கான நோயாளிகள் காணப்பட்டாலும் இந்த ஆண்டு 6 நோயாளிகள் உறுதிப்படுத்தப்படிருக்கின்றார்கள்.

நுளம்புகளிலும் பால்வேறுபாடு

Buzzing Noise என்று சொல்லப்படுகின்ற சத்தத்துடன் இறக்கைகளை அடித்து பறந்து வரும் நுளம்புகளிலும் ஆண், பெண் எனும் பால் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதில் முக்கிய விடயம் என்னவென்றால் ஆண் நுளம்புகள் மனிதர்களைக் கடிப்பதில்லை. பெண் நுளம்புகளே எம்மைக் கடித்துக் கொல்கின்றன. ஆண் நுளம்புகள் தாவரச் சாற்றையே உணவாகப் பயன்படுத்துகின் றன. பெண் நுளம்புகள் இனப் பெருக்கக் காலத்தில் தமது மேலதிகப் புரத உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக விலங்குகளின் குருதியை உணவாக உள்ளெடுக்கின்றன. அதுமட்டுல்லாது ஆண் நுளம்புகளின் வாழ்க்கைக் காலத்திலும் பார்க்க பெண் நுளம்புகளின் வாழ்க்கைக்காலம் அதிகமாகக் காணப்படுகின்றது.

டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள்

ஈடிஸ் எயிப்ரி (Aedes aegypti), ஈடிஸ் அல்பபிக்ரஸ் (Aedes albepictus) எனும் வகை நுளம்புகளே டெங்கு நோயை ஏற்படுத்தும் ஆபோ வைரஸ்களை (Arbo virus) காவுகின்றன. இவை இருண்ட, ஈரலிப்பான, அழுத்தமற்ற பிரதேசங்களில் முட்டைகளை இடுகின்றன. நுளம்பின் வளர்ச்சிக்கு தெளிவான தேங்கும் நீர் தேவை. அவ்வாறான உகந்த இடங்களாவன.

* வீட்டிற்கு வெளியே உள்ள வெற்றுச் சிரட்டை, சாடிகள், தகரப் பேணிகள்
* தேவையில்லாத ரயர்களில், பிளாஸ்ரிக் பொருள்களில் தேங்கும் நீர்
* நீரை மாற்றாமல் அல்லது பாவிக்காமல்இருக்கும் குடி தண்ணீர் பாத்திரங்கள்
* சிறிய நீர்க் குட்டைகள்
* ஒதுக்கப்பட்ட மீன் தொட்டி
* அடைக்கப்பட்ட கூரைக் குழாய்கள் , கான்கள்
* நீருடன் கூடிய பூச்சாடிகள் , பாத்திரங்கள்.

இப்படியான நீர் தேங்கும் இடங்களில் முட்டைகளை இடுகின்றன. முட்டைகள் நீள்கோண வடிவமானவை. தனித்தனியாக இடும். இம் முட்டைகள் ஒவ்வாத காலநிலையிலும் நீண்ட காலம் தப்பி வாழும் ஆற்றல் உடையன.

டெங்கு நுளம்பின் அடையாளம்

டெங்கு நுளம்புகள் சிறியவை. கறுப்பு நிறமானவை. இவற்றின் நெஞ்சு, வயிறு, கால்கள் போன்றவற்றில் வெள்ளை அல்லது வெள்ளி நிறமான வரி போன்ற அடையாளங்கள் காணப்படும். இதனால் இவற்றை புலி நுளம்புகள் (Tiger Mosquito) எனவும் அழைப்பர். இவை ஒய்விற்கு வரும் போது தளத்திற்கு சமாந்திரமாக ஒய்விற்கு வரும்.

டெங்கு தொற்றுதல்

டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகளின் நடமாட்டம் பகல் காலங்களிலேயே அதிகமாகக் காணப்படும். காலை 5 மணி தொடக்கம் 6 மணி வரையான காலப்பகுதியிலும், மாலை 4மணி தொடக்கம் 6மணி வரையான காலப்பகுதியிலும் நடமாட்டம் அதிகம். சிறுபிள்ளைகள் விளையாடும் நேரம் இது என்பதால் அவர்களுக்கு தொற்றும் வாய்ப்பு கூடுதலாக காணப்படுகிறது. நான்கு விதமான வைரசுகள் நான்கு விதமான டெங்கு நோயை ஏற்படுத்துகின்றன. ஒருவருக்கு இதில் ஒரு வகையோ அல்லது நான்கு விதமான டெங்கு நோய்களுமோ ஏற்படலாம். நோயை நான்கு நிலைகளாகப் பாகுபடுத்தலாம்.

முதலாம் நிலையில் திடீரென அதிக காய்ச்சல் உடன் தலைவலி, முகம், கழுத்து போன்ற மூட்டுக்களிலும், தசை நார்களிலும் மூட்டுவலி காணப்படும். கண் வலியும் கண் கூச்சமும் காணப்படும். சிலருக்கு ஓங்காளிப்பு, வாந்தி, பசியின்மை, வயிற்றுநோ போன்றனவும் காணப்படும். நிணநீர் கட்டிகள் (நெறிகள்) போன்றனவும் தோன்றும். சிலருக்கு சில நாள்களுக்குள் தானாகக் காய்ச்சல் குறைந்துவிடும். அது மீண்டும் வராது இருக்கும் என்று கூற முடியாது. சிலநேரம் மீண்டும் மீண்டும் நோய் ஏற்பட்டு உடலை நலிவடையச் செய்தும் விடும்.

சிலருக்கு அடுத்த கட்டம் ஏற்படும். இது குருதிப் பெருக்குக் காய்ச்சல் எனப்படும் (Denque Haemorrhagic Fever) உடலினுள் குருதிக் குழாய்கள் சிதைந்து உடலின் உட்பகுதியில் குருதி பரவ ஆரம்பிக்கும். இதனால் தோலுக்கு அடியில் வாய், பல்ஈறு, முரசு, மூக்கு, சிறுகுடல், நுரையீரல் போன்றவற்றில் இருந்து இரத்தக் கசிவு ஏற்படும். பின் இரத்தப் பெருக்காக மாறும் அபாயம் தோன்றும். ஈரல் பெருப்பதால் வயிற்றின் வலது புறம் வீங்கும்.

அடுத்த நிலையில் நோயாளி அதிர்ச்சி நிலைக்குச் (Shock) செல்வார். திடீரென காய்ச்சல் குறையும், நிறை குறையும், உடல் மெலியலாம், உடல் வெளிறும், உதடுகள் நீலநிறமாகும், களைப்புத் தன்மை ஏற்படும், இதயத் துடிப்பு அதிகரிக்கும், குருதி அமுக்கம் குறைவடையும், அடுத்து மரணம் ஏற்படும்.

மருந்துகள் பாவிக்கலாமா?

டெங்கு நோய்க்கு எதிரான மருந்து எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. நுண்ணுயிர் கொல்லிகள் (Antibiotics) பயன்படுத்தக்கூடாது. அஸ்பிரின், டிஸ்பிரின் ஆகியன குருதிப் பெருக்கை அதிகமாக்கும். எனவே, இவற்றைப் பாவிப்பது மிக ஆபத்தானது. பரசிட்டமோல் வகை மருந்துகளைப் பாவிக்கலாம். உப்பு நீர் போன்ன இரத்த அழுத்தத்தை சீராக்கும் என்பதால் அவற்றைப் பாவிக்கலாம். குருதியில் குருதிச் சிறுதட்டுகளின் (Platelets)எண்ணிக்கை குறைவதால் இவை (இரத்தம்) மேலதிகமாக வழங்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

டெங்கை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?

நோயை காவும் நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதே சிறந்த வழி. இது சிங்கப்பூர், கியூபா போன்ற நாடுகள் வெற்றி கண்டுள்ளன. நுளம்பு பெருகும் இடங்களை அழிக்க ஏற்படுத்திய சட்டங்களும், சுகாதரக் கல்வியும் உதவியுள்ளன. சுகாதார உத்தியோகத்தர்களுக்கு தனி இடங்களையும், வீடுகளையும் சோதனை இட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குற்றவாளிகளுக்கு தண்டம் செலுத்துமாறும் வெளிநாடுகள் பலவற்றில் சட்டம் இயற்றப்பட்டுள்ளன.

டெங்கு நுளம்பின் தாக்கத்தில் இருந்து நுளம்பு வலைகளையோ, சுருள்களையோ பாவித்து தப்ப முடியாது. ஏனெனில், இவை பகல் கால நுளம்புகள். எனவே, மக்கள் எல்லோரும் ஒத்துழைப்பை வழங்கினாலே நுளம்பு பெருகும் இடங்களை அழிக்கலாம். நுளம்பு பெருகுவதை தடுக்க சில வழிகள்

* வெற்று சிரட்டைகள், தகரப்பேணிகள், சாடிகள் போன்றவற்றினுள் உள்ள நீரை வெளியேற்றி வெயிலில் இடலாம்.
* வெற்று ரயர்களை ஒட்டை ஆக்கலாம் அல்லது மண் நிரப்பலாம்.
* சிறிய நீர் நிலைகளில் கழிவு எண்ணெய் ஊற்றலாம்.
* பூவாஸ், மீன்தொட்டி நீரை அடிக்கடி மாற்றலாம்.
* வெற்றுப் பாத்திரங்களை கவிழ்த்து வைக்கலம்.
* நீர் சேர்ந்துள்ள பாத்திரங்களில் உப்பைச் சேர்க்கலாம்.
* கூரைக் குழாய்களை சுத்தம் செய்யலாம

நுளம்பு தொற்றில் இருந்து தப்பும் வழிகள்

* சிறு பிள்ளைகளுக்கு கை, கால்கள் மூடக் கூடியவாறு உடை அணிவிக்கலாம்.
* நுளம்புகளுக்கு வெறுப்புத் தன்மை உடைய சிற்றனிலா புல் எண்ணெய் போன்றவற்றை உடலில் பூசலாம்.

தொகுப்பு: லோதுஷ்கரன்

உயிர் எரிந்து ஓலமிடும் குரல்....

ஆழிப்பேரலையே...!
அடங்கி நீ போய்விட்டாய்
அலையாய் நீ கொண்டு வந்த
துன்பம்
மலையாய் மனதை இடித்து
நிற்கிறது...
நீள் அலைகொண்டு நீ
மொட்டுகளை
உருக்குலைத்துப்
போட்டாய்
பூக்களை
கசக்கிப் பிழிந்தாய்
வேர்களை
அடியோடு
பிடுங்கியெறிந்தாய்
காற்று வாக்கில்
பிணங்களை வீசினாய்...
யுத்தம் சப்பிய
நலைப்பிணங்களாய்
நாமிருக்க
மீண்டும் ஏங்களை
முற்றத்தில்
இழவு வைத்துப்போனாய்
இன்னும் அந்த
ஒப்பாரி சுரமிழக்கவில்லை
உடைந்து போன
புல்லாங்குழலின்
முகாரி போல...
எனதுயிர் எரிந்து
வானுயர ஓலமிடுகிறது
உறவுகளே!
ஆழிப்பேரலைகளால் காவு
கொண்ட
ஆத்மாக்களே - எங்களுயிர்
உங்களுக்காய்
அஞ்சலிக்கின்றது...
சிரம் தாழ்த்தி
விழிகள் கசிகின்றது
விடியலின் விளக்கெடுத்து
ஒளியேற்றுகின்றோம் - உங்கள்
ஆத்மா சாந்தியடைய.

- கதேசிகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரச் சிலை

உலகிலுள்ள சிலைகளில் மிகப் பெரியது சுதந்திரச் சிலை. இது பெண் வடிவமாக உள்ளது. இச்சிலையின் ஆள்காட்டி விரல் மட்டும் 2 1/2 மீற்றர் (8அடி) நீளம் உள்ளது என்றால் நீங்களே ஊகித்துக் கொள்ளலாம்.

சுதந்திரச் சிலை அமெரிக்காவில் நியூயோர்க் துறைமுகத்தின் முன் ஒரு சிறுதீவில் உள்ளது. சிலையின் வலக்கையில் தீப்பந்தத்தையும் இடக்கையில் சுதந்திரப் பிரகடன நாளைக் குறிக்கும் பலகையையும் காணலாம். காலடியில் அறுந்த சங்கிலி ஒன்றும் உள்ளது.

சுதந்திரச் சிலையுள்ள பீடத்தின் உயரம் 45 மீற்றர். பீடத்தின் உச்சி வரை உயர்த்தியில் செல்லாம். இதற்கு மேலுள்ள சிலையின் உயரம் 45 மீற்றர். இது கூடுபோன்ற அமைப்புடையது. சிலையின் உச்சி (தலை) வரை செல்லச் சுழல் படிக்கட்டுகள் இரண்டு உள்ளன. சிலையின் தலையில் உள்ள கிரீடத்தைச் சுற்றி 25 யன்னல்கள் உள்ளன. ஒரே சமயத்தில் 50 பேர் நிற்கப் போதுமான இடம் தலைப்பகுதியில் உண்டு. யன்னல்கள் வழியே கீழேயுள்ள துறைமுகம் நியூயோர்க், நியூஜெர்சி ஆகிய பகுதிகளைக் காணலாம். சிலையின் வலது கைக்குள் மற்றொரு படிக்கட்டு தீப்பந்த விளக்கிற்குச் செல்கிறது. இதில் பொதுமக்கள் இப்போது அனுமதிக்கீப்படுவதில்லை. தீப்பந்தம் தரைமட்டத்திலிருந்து 93 மீற்றர் உயரத்தில் இருக்கிறது. இரவில் இது வீசும் ஒளி கப்பல்களுக்குக் கலங்கரை விளங்காகவும் விமானங்களுக்கு எச்சரிக்கை விளக்காவும் பயன்படுகிறது.

சுதந்திரசிலையை பிரஞ்சு மக்கள் தங்கள் நட்பின் காரணமாக அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்களுக்கு 1884 இல் அளித்தனர். இச்சிலையின் அமைப்பைத் திட்டமிட்டவர் பார்த்தால்டி. சிலையைச் செய்தவர், ஐபல். கோபுரத்தைக் கட்டிய கஸ்ட்டாவ் ஐபல், எஃகச் சட்டங்களின் மீது செப்புத் தகடுகளை வைத்து அடித்துச் செய்யப்பட்ட இது சிலையின் எடை இரண்டு லட்சம் கிலோகிராம்!

– கவிதா

மொழிகளுக்கான சிறப்புப் பெயர்

தமிழ் - பக்தி மொழி
ஆங்கிலம் - வணிக மொழி
பிரெஞ்ச் - காதல் மொழி
இத்தாலி - இசை மொழி
கிரேக்கம் - சட்ட மொழி
உருது - கவிதை மொழி

ந.ஜீவன்
தரம் - 9சி,யாழ்/ சென்.ஜோன்ஸ் கல்லூரி.

புதிய வருடம்

புதிய வருடம் பிறந்ததுவே
புதுமைகள் பலவும் சேர்ந்திடவே
வாழ்த்துச் சொல்லி வரவேற்போம்
வாழ்க வாழ்க பல்லாண்டே!

அன்பு நிறைந்த ஆண்டாக
அனைவர் உள்ளத்திலும் வருவாயே
பலரும் சேர்ந்து மகிழ்ந்திடவே
பணிவாய் நீயும் வருவாயே!

கிருஷ்ணசாமி கஸ்தனி
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

இறைவா தா! இன்றே தா!

பகைமை போக்க அன்பைத் தா
பசியைப் போக்க உணவைத் தா
பிணியைப் போக்க மருந்தைத் தா
பிணக்கைப் போக்க இணக்கம் தா

இருளைப் போக்க ஒளியைத் தா
இன்னல் போக்க மகிழ்வைத் தா
வறுமை போக்க வளத்தைத் தா
வன்னம் போக்க கனிவைத் தா

தனிமை போக்க நட்பைத் தா
தன்னலம் போக்க அறிவைத் தா
இனிதாய் வாழக் கேட்கின்றேன்
இறைவா இறைவா இன்றே தா.

கு.ஜெலெக்ஷனி
ஆண்டு - 01,
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்

கண்டுபிடியுங்கள்!



தம்பி, தங்கைகளே!
மேலே உள்ள படத்தில் 'அ' முதல் 'ஈ' வரை படங்களுக்கு அதே வரிசையில் உள்ள பொருத்தமான படத்தை கண்டுபிடியுங்கள்.

ஏன் வந்தாய் சுனாமியே!

மார்கழி இருப்பத்தாறில்
நீ வந்தாய் சுனாமியே
எமனாய் மக்களை எடுக்க
ஏன் வந்தாய் சுனாமியே!

ஆட்டம் காட்டிய மனிதனை
ஆட்டி வைத்த இயற்கைப் பேரலையே
ஏன் வந்தாய் சுனாமியே!

ஓர் ஆண்டு பூர்த்தியாகியும்
உன்னை எம்மால் மறக்க முடியவில்லையே
ஏன் வந்தாய் சுனாமியே
ஏன் வந்தாய்

தயாளன் தர்ஷிகா
தரம் - 9,
யா/இந்து மகளிர் கல்லூரி.

தம்பி, தங்கைகளே!
'சிறுவர் பொழில்'
பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள்
வரவேற்கப்படுகின்றன.
எண்ணங்களை எழுதி அனுப்புங்கள்.
அவை தரமாக இருப்பின் பிரசுரத்திற்கு
ஏற்றுக் கொள்ளப்படும்.

அழகு மட்டும் போதுமா!

ஒரு காட்டில் பறவைகள் எல்லாம் கூடித் தங்களுக்கு ஓர் அரசனைத் தேர்ந்தெடுக்க விரும்பின. மயில் தனது அழகான தோகையை விரித்துக் காட்டியபடி 'நான் தான் உங்கள் அரசன்' என்று சொல்லியது. அங்கே இருந்த மற்றப் பறவைகள் மயிலின் அழகைப் பார்த்து அதையே தங்கள் அரசனாக ஏற்றுக் கொண்டன.

கூட்டத்திலிருந்த மைனா 'மயிலே இப்போது நீங்கள் எங்கள் அரசனாகி விட்டீர்கள் சரிதான். ஆனால், எங்களைக் கருடன் துரத்தி வந்தால் நீங்கள் எங்களை எப்படிக் காப்பாற்றப்போகிறீர்கள் சொல்லுங்கள்?' என்று கேட்டது.

அரசனாகி விட்ட மயிலுக்கு மைனாவின் இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. சும்மா நின்றது.

''மயில் ஒரு நல்ல அழகான பறவையாக இருக்கலாம். ஆனால், நல்ல திறமையான அரசனாக இருக்கமுடியாது'' என்றது மைனா.

மற்றப் பறவைகளும் மைனாவின் கருத்தை ஆமோதித்தன. மறுபடியும் விஷயம் பரிசீலனைக்கு வந்து, பறவைகள் அனைத்தும் மயிலுக்கு பதிலாக ஒரு கழுகைத் தங்களுக்கு அரசனாகத் தேர்ந்தெடுத்தன.



ம.அச்சாள்
தரம் - 8, யா/உடுவில் மகளிர் கல்லூரி.

முருகைக் கற்பாறைகள்

எமது கடற்கரையை சூழ முருகைக் கற்பாறைகள் காணப்படுகின்றன. இது கடலரிப்பை தடுக்கும் பாதுகாப்புக் கவசங்களாக விளங்குகின்றது.

முருகைக் கல் பொழிப்புகளில் நுண்ணிய மீகச் சிறிய சதைப்பிடிப்புள்ள அங்கிகள் வாழ்கின்றன. இது கடல் நீரிலுள்ள கல்சியம் அயனைப் பயன் படுத்தி வன் கூடொன்றை அமைத்துக் கொள்ளும். இந்த அங்கிகளால் செய்து முடிக்கப்படும் வன் கூடே முருகைக் கற்பாறைகளாகும்.

ஒவ்வொரு துளையிலும் ஒரு பொழிவு மூலம் இந்த முருகைக் கற்பாறைத் தொடர்களில் பெரும் எண்ணிக்கையான அங்கிகள் வாழ்கின்றன.

ஒவ்வொரு கூடுகளையும் இந்த அங்கிகள் மிகவும் சிரமப்பட்டு அமைக்க நெடுங்காலம் எடுக்கும்.

இக் கற்கள் வளர சூரிய ஒளி ஊடுருவக்கூடிய தெளிந்த கடல் நீர், உப்பின் செறிவு 3.0 வீதத்திற்கும் 3.5 வீதத்திற்கும் இடையே இருத்தல் வேண்டும்.

தற்போது இந்தக் கற்களின் வளர்ச்சி குறைவடைந்து செல்வதாக அறியப்பட்டுள்ளது. கடல் நீரில் உப்பின் செறிவு குறைவடைந்து செல்கின்றமையே இதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

கடற் பாதுகாப்பு கவசங்களாக விளங்கும் இந்த முருக்கைக் கற்பாறைகளை பாதுகாக்க அனைவரும் முயற்சி செய்வோம்

தி.அருணாலினி, இந்து மகளிர் கல்லூரி.

உங்களின் கைவண்ணங்கள்!

கி.யுகனி
தரம் - 07,
யா/கலட்டி ஆண்கள் பாடசாலை.



யோ.டர்சினி
தரம் - 11பி,
யா/இந்து மகளிர் கல்லூரி.

சிரிக்கச்... சிந்திக்க...

- ''எனக்கு இரண்டு அண்ணன்கள் இருக்கிறார்கள்''
- ''அப்ப உன் அண்ணாவுக்கு இரண்டு தம்பியா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மைக்கு இலக்கணமாக திட்டமிட்டு செயற்படுவோம்

'தாய்' என்ற சொல்லின் புனிதத் தன்மையை இன்று உணராத உயிரினங்களே இல்லை என்று சொல்லலாம். மனித இனம் மட்டுமல்ல; ஆறறிவு இல்லாத சகல உயிரினங்களும் தாய்மை உணர்வை அனுபவிக்கின்றன.

'தாய்மை' என்னும் பேறடைந்தவர்களுக்கு வேறு எந்தச் சொர்க்கலோகமும் தேவையில்லை என்றே சொல்லலாம். அநேகமானோர் தாய்மைப் பேறடைந்ததும் தங்களை மிகமிகக் கவனமாகப் பராமரித்து வருகின்றனர். ஆயினும், சிலர் அக்கறையின்றி இருப்பதையும் நாம் அவதானிக்க கூடியதாகவே உள்ளது.

சாதாரணமாக எப்படியோ வாழ்ந்திருக்கலாம். நம் உடலிற்கு எதுதேவை, மனதிற்கு வேண்டியது எவை என்ற தேவைப்பாடு இன்றி எதையேனும் உண்டு, எவ்வாறேனும் வாழ்ந்திருக்கலாம். தாய்மைப் பேறடைந்ததும் அப்படி வாழமுடியாது - வாழக்கூடாது.

நம் வயிற்றில் இன்னுமோர் உயிர் உருவாகியுள்ளது. சின்னஞ் சிறு அரும்பொன்று மலர்ந்து பூப்பதற்காகக் காத்திருக்கின்றது. எனவே, அதற்கேற்றவாறு நமது வாழ்க்கை முறையை மாற்றியமைத்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

முதலில் நமது உணவுப் பழக்கத்தைக் கருத்தில் கொள்ளவேண்டும். இதுவரை எதையும் உண்டு வாழ்ந்திருக்கலாம். இனி நமக்கு மட்டுமல்ல நம் வயிற்றினுள் வாழும் இன்னொரு உயிருக்கும் சேர்த்து உண்ண வேண்டும் என்பதை மறக்கக்கூடாது. எனவே, வைத்தியரின் ஆலோசனையுடன் சத்தான உணவுகளை உண்ணவேண்டும். தினமும் ஒரு கப் பால் கட்டாயம் குடிக்க வேண்டும். கீரைவகைகள்,

பழங்கள் என்பவற்றை அதிகம் உணவில் சேர்த்துக்கொள்ளவேண்டும். வழமையைவிட அதிகளவு நீரைத் தினமும் பருகவேண்டும். நமக்காக மட்டுமல்ல நம் வயிற்றுள்ள கருவின் வளர்ச்சிக்கு நாம் உணவுண்ணுகின்றோம் என்பதை நாம் மறக்கக் கூடாது.

விற்றமின், புளோரைட், கல்சியம் போன்ற சத்துக்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு அவசியம் தேவை. எனவே, மேற்படி சத்துக்கள் நிறைந்த உணவுகளை உண்ண வேண்டும்.

அநேக பெண்களைப் பார்த்தால் 'நான் கர்ப்பமாயிருக்கின்றேன். என்னால் இயலாது' என்று சோர்ந்துபோய் இருப்பார்கள். எந்நேரமும் படுத்திருப்பதையே விரும்புவார்கள்.

இது தவறான ஒரு செயற்பாடாகும். சோர்ந்திருப்பது குழந்தையின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும்.

நாம் என்ன செய்ய வேண்டும்? தினமும் காலையும் மாலையும் சிறிது தூரம் நடக்கவேண்டும். வீட்டில் சின்ன சின்ன வேலைகளைக் கட்டாயம் செய்ய வேண்டும்.

அடுத்து குழந்தையின் வளர்ச்சிக்கு முக்கியமான பங்களிப்பைக் கொண்டுள்ளது தாயின் மனநிலை. எனவே, தாய் தன் மனநிலையில் பெரும் கவனத்தைச் செலுத்த வேண்டும். எந்நேரமும் மகிழ்வாக இருக்கப் பழகவேண்டும். அறிவு சார்ந்த நல்ல புத்தகங்கள், பத்திரிகைகள் என்பவற்றை வாசித்தல், இனிய இசை கேட்டல் போன்றவற்றைச் செய்வதன் மூலம் மனநிலையை ஒருமுகப்படுத்தவேண்டும்.

குறிப்பாக பிரசவ தினத்தை எதிர்பார்த்து அதற்கு 2 மாதங்களுக்கு முன்னரே திட்டமிட்டு செயற்படவேண்டும். அதாவது பிரசவத்துக்கு வேண்டிய பொருள்களை ஆயத்தம் செய்தல், மனநிலையை ஆயத்த நிலையில் வைத்திருத்தல் போன்றவற்றைச் செய்தல் வேண்டும்.

பிறக்கும் குழந்தையின் ஆரோக்கியமே தாய்மையின் ஆரோக்கியம்.

-தீபா

அடக்கப்படும் பெண்களுக்காக...

'பெண்கள் நாட்டின் கண்கள்' என்பார்கள். ஆனால், இன்று அந்தக் கண்களையே குத்திக் கிழிக்கின்றார்கள். நாட்டில் நிலவும் யுத்தம் வயது வேறுபாடின்றி, பால் வேறுபாடின்றி அனைவரையுமே சிதைக்கின்றது. இந்நிலையில் பெண்கள் சுதந்திரமாக நடமாடுவது என்பது கேள்விக்குறியாக மாறிவிட்டது.

பெண்கள் துணிவாக வீதிகளில் திரிய முடியாத நிலை இன்று தோன்றியுள்ளது. அநேக பெண்கள் இன்று வீடுகளுக்குள்ளே முடங்கிப் போயுள்ளார்கள்.

அண்மையில் புங்குடுதீவில் பெண்மைக்கு எதிராக இடம் பெற்ற கொடூரத்தால் பெண்கள் அடங்கிப் போய் - பயத்தில் உறைந்து போய் - இனி என்னவாகும் என்ற கேள்வியைச் சுமந்தவர்களாய் வாழ்கின்றனர். 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்பது போல் 'என்று தணியும் பெண்களுக்கெதிரான வன்முறை' என்று கேட்கத் தோன்றுகின்றது. அன்று அந்தப் பாரதியின் மனதில் தோன்றிய அதே கேள்வி இன்று எமது தமிழர் தாயகத்தின் குடிமக்கள் ஒவ்வொருவர் மனங்களிலும் ஏக்கமாக உருவெடுத்துள்ளது.

ஆம், எப்பொழுது ஒரு பெண் நள்ளிரவில் தன்னந்தனியாக வீதியால் நடந்து செல்ல முடிகின்றதோ அன்றுதான் உண்மையான சுதந்திரம் கிடைக்கும்.

இன்று பகலில் கூட வீதியால் தனித்துச் செல்வதற்குப் பயந்து போயுள்ளனர். அலுவலகங்களுக்குச் செல்லும் பெண்கள் ஒரு திகிலுனுடனேயே செல்கின்றனர்.

பெண்ணுரிமை பற்றிப் பேசும் உலக நாடுகள் எமது தமிழ்ப் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்காதது ஏனென்பது எமக்கு விளங்கவில்லை. வீட்டு வன்முறைகளிலிருந்து விடுபடுவதற்காகப் போராடிக்கொண்டிருந்த எமது பெண்கள் வீதியில் இறங்கவே இன்று தயங்கும் நிலையைக் காணக்கூடியதாக உள்ளது.

பெண்ணுரிமை இயக்கங்கள் இந்தக் கொடுமைக்காகக் குரல் கொடுத்து சர்வதேச சமூகத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதே எமது அவா...

- சம்யுக்தா

பட்டாம் பூச்சிகள் சிறகடிக்கும்

பூத்துக் குலுங்கும் மலர்வனங்கள்
நாங்கள்
பூரிப்பின் புதுமலைச் சிகரங்கள்
கூடிக் குலாவி குதூகலித்து
கூட்டாஞ் சோறு
உண்ணுகின்றோம்!

நார்தொடு பூக்கள் போலான
நங்கைகள் நாங்கள் ஒன்றானோம்
ஊர்பேர் தெரியாதிருந்த நாங்கள்
ஊதும்
புல்லாங்குழல்களாயானோம்

சின்னச் சின்ன சந்தோஷங்கள்
சிலிர்க்கும் எமக்கும்
தேன்துளியாய்
இன்னும் இன்னும் வேண்டுமென
இதயம் கெஞ்சும் இயல்புடனே

ஒற்றுமை என்ற ஒருகம்பம்
ஒன்றாய் நின்றால் குடைபிடிக்கும்
கற்கின்ற காலத்தில் காதலதை
கல்வியில் செலுத்த வழிதருமோ?

கண்களுள் புதுப்புது காட்சிகளை
கைதுசெய்யவே மனந்துடிக்கும்
பெண்களாய் எமக்குள்
பலநிறத்தில்
பட்டாம் பூச்சிகள்
சிறகடிக்கும்

நாளை நாட்டின்
நம்பிக்கையாய்
நாமே ஆகும் கனவுவரும்
வேளைகள் எங்கும்
புதுவேகம்
வேர்களாய் மனதுள்
பரந்தோடும்

மின்னல் நரம்பின்
அழகினையே
மீட்டிட நம்பிக்கைக்
கரந்துடிக்கும்
இன்னல் வரினும்
சிலதுளிகள்
இதயக் கண்ணீர்
வரப்பிடிக்கும்

சந்தோஷங்களை
தினஞ்சுமக்கும்
சங்கீத மேகங்கள் நாமாக
சந்தேகங்களை சறுக்கவிட்டு
சம்பாதித்திடுவோம்
நல்லுறவை!

- சூரியநிலா

பெண்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கும் அவர்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பதற்குமான ஒரு திறந்த களமாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதே 'திலகம்' பகுதி. எனவே, சகோதரிகளே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் கருக்களுக்கு உருக்கொடுத்து கட்டுரைகள், கவிதைகள், விமர்சனங்கள் போன்ற ஆக்கங்களை அனுப்பி வையுங்கள். இறுக்கமாகவும், சுருக்கமாகவும் தரமாகவும் அமையும் உங்களின் ஆக்கங்கள் இந்தப் பகுதியை அலங்கரிக்கும்.

அனுப்பவேண்டிய முகவரி:- 'திலகம்'
சூரியகாந்தி, உதயன் ஞாயிறு சிறப்பம்சம்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சந்தியாவின் கழுதங்கள்

பிரியமுள்ள பிரியாவிற்கு,

கதைகளிலும், படங்களிலும் அறிந்த அதிர்ச்சியூட்டும் சம்பவங்கள் இன்று நம் கண்ணெதிரே நடைபெறுவது பெரும் வேதனையளிக்கின்றது.

சிசுக்கொலை என்பது நம் பிரதேசத்தில் சர்வ சகஜமான ஒரு விடயமாக மாறிவிட்டது. அடிக்கடி பத்திரிகைகளில் 'சிசுவொன்று சடலமாக மீட்பு' என்ற செய்தி காணப்படுகின்றது.

தாய்மைப் பேறு என்பது புனிதமாகக் கருதப்படும் நிலையில் குழந்தையைக் கொன்று தெருவில் வீசுவதென்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஓர் இழிசெயல் என்றே கூறலாம். எதற்காக இந்த வக்கிரம்? குழந்தை உருவாகி அது பிறந்த பின் கொலை செய்வதென்பது வக்கிரத்தின் உச்சக்கட்டம். இந்த வக்கிர உணர்வு இன்று நம் சமூகத்திலும் ஊறி விட்டது. இந்திய சினிமாப் படங்களில் - கிராமப் படங்களில் பெண்குழந்தைகள் பிறந்தால் மருத்துவச்சி கள்ளிப்பால் கொடுத்துக் கொலை செய்வதாகக் காட்டுவார்கள். அதனைப் பார்க்கும் போது பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் கொதித்துப் போவார்கள்.

இந்தக் காட்சியைப் பார்க்கும்போது என்னால் ஜீரணிக்கவே முடிவதில்லை. உலகத்தின் மீது வெறுப்புக்கூட ஏற்படும்.

ஆனால், இங்கு இன்று பால் வேறுபாடின்றி சிசுக்கொலை இடம் பெறுவது வேதனைக்குரிய விடயம். அநேகமாக இந்தக் கொலைச் சம்பவங்களை எடுத்து நோக்கின் தவறான பாதையில் சென்ற - தவறான பாதைக்கு இட்டுச் செல்லப்பட்ட - பெண்களால் பிரசவிக்கப்பட்ட சிசுக்களே இவ்வாறு கொலை செய்யப்பட்டு தெருவிலும் பற்றைகளிலும் வீசப்படுகின்றன.

இவ்வாறான பெண்களால் அனைத்துப் பெண்களுமே தலைகுனிவுக்கு ஆளாகின்ற நிலைமை தோன்றியுள்ளது.

பெண்கள் தமது வாழ்வை மிக அவதானத்துடன் கொண்டு செலுத்த வேண்டும். காதல் வயப்பட்ட பெண்கள் உட்பட சகலருமே ஒழுக்க நெறி நின்று வழுவாது வாழ்வது அவர்களுக்கு மட்டுமல்ல அவர்கள் குடும்பம், சமூகம் என எல்லோருக்குமே நன்மையானது. பிரியா, இந்த இடத்தில் இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிடவேண்டும். நம் மத்தியில் குழந்தைப் பேறின்றி எத்தனையோ குடும்பங்கள் வேதனையும் விரக்தியுமாக வாழ்கின்றன.

குழந்தைகளைப் பெற்று பராமரிக்க முடியாதவர்கள் குழந்தைகள் உருவாவதை தடை செய்யவேண்டும். அவ்வாறு தடை செய்ய முடியாவிடில் குழந்தையைப் பெற்று அதற்காக உள்ள இடங்களில் சேர்க்கலாம்.

குழந்தைப் பேறில்லாத குடும்பங்கள் அநாதை இல்லங்களிலுள்ள குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்க்கலாம்.

இவ்வாறு குழந்தைகளுக்கான இல்லங்கள் பல இருக்கையில் பிறந்த குழந்தையைக் கொன்று புதைப்பதும் எறிவதும் ஏற்றுக் கொள்ளமுடியாத கொடூரம். இவ்வாறானதொரு கொடூரத்தைப் புரிவதற்கு பெண்கள் எவருமே முன் வரக்கூடாது என்பதே எனது வேண்டுகோள்.

பிரியமுடன் சந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதுகள் தொடர்பான இராணுவத்தின் மறுதலிப்பை ஏற்றுக் கொள்ள முடியாது!

நாவற்குழியிலிருந்து படகில் பார்க்கும்போது செம்மணி.
இங்குதான் பல சுற்றிவளைப்புகள், கைதுகள், காணாமற்போனமைகள் நடந்தேறின.
காணாமற்போன பலர் இங்குதான் புதைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கைது செய்தோர், கைது செய்யப்பட்டோர் இடமாற்றம் செய்யப்பட்டபோது அவர்களைக் கையேற்றோர் உட்பட இதில் ஈடுபட்ட உயர்மட்ட அதிகாரிகள் உட்பட சக அதிகாரிகளும் பாதிக்கப் பட்டவர் தொடர்பான தமது பொறுப்புடைமையை மறுதலித் தனர். எமது விசாரணைகளில் தவிர்க்க முடியாதவாறு இந்த நிலைமை பல சந்தர்ப்பங்களிலும் வெளிப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் கண்கள் கட்டப்பட்ட பின்னரே கொண்டு செல்லப்பட்டமை பல்வேறு சந்தர்ப்பங்களில் நிகழ்ந்துள்ளது. தன்னைக் கைது செய்தோர் யார்? எந்த வழியாக எங்கு கொண்டு செல்லப்பட்டோம்; அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய நபர்கள் ஆகிய பல்வேறு விடயங்களையும் தெரிந்து கொள்வதிலிருந்து கண்கள் கட்டப்பட்டதால் கைது செய்யப்பட்டவர் தடுக்கப்படுகிறார். கைது செய்யப்பட்டர் தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டால் மேற்படி தகவல்களை வெளியிட்டு விடக்கூடாதென்பதற்காகவே இந்த முன்னெச்சரிக்கையான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், இக் கைதுகளும் தடுத்து வைப்பு களும் சட்ட ரீதியானவையெனில் ஏன் இவ்வாறான முற்பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்? எனவே, இந்த முழுச் செயற்பாடும் சட்டரீதியற்ற குறிக்கோளை அடைவதற்கான சட்டரீதியற்ற முறையில் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப் பட்டது என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

முகமூடி மனிதர்களால் மேற்கொள்ளப்பட்ட இரவுநேரக் கைதுகள்

பாதிக்கப்பட்டவரை அறிந்திருந்த பாதுகாப்புப் படையினராலேயே பெரும்பாலான கைதுகள் மேற்கொள்ளப்பட்டன என்பதற்கு நிறையச் சான்றுகள் உள்ளன அல்லது பாதிக்கப்பட்டவரைத் தெரிந்த முகமூடி நபர்களுடன் சென்றே பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர். பல சந்தர்ப்பங்களில் இரவு நேரங்களிலேயே கைதுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கைதுக்கு முன்னர் விளக்குகள் அணைக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புப் படையினரும் முகமூடி அணிந்துள்ளனர். எனவே, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கைது செய்தவர் யார் என்பதை நிரூபிக்க முடியாத நிலைமை இருந்துள்ளது. இதனால் கைதுகளை மேற்கொண்டவர்கள் தமது பொறுப்பினை இலகுவாகத் தட்டிக் கழிக்க முடிந்தது. எனினும், இக் கைதுகளில் உள்ளூர் இராணுவப் பொறுப்பாளர்கள் தமது பொறுப்பைத் தட்டிக் கழித்து விட முடியாது. இக்கால கட்டத்தில் குறிப்பாக ஊரடங்கு அமுலில் இருந்த நேரங்களில் சுதந்திரமாக நடமாடக்கூடிய தீவிரவாதக் குழுக்கள் இருக்கவில்லை. இராணுவத்தின் ஆதரவுடனேயே அந்நேரத்தில் எவரும் நடமாட முடியும். எனவே, அந்நேரத்தில் நிலவிய சூழ்நிலையின் அடிப்படையில் இராணுவத்துக்குத் தெரியாமல் யாரோ ஒரு குழுவினர் வந்து இக்கைதுகளை மேற்கொண் டனர் எனக் கூறுவதற்கில்லை. எனவே, இக்கைதுகள் தொடர்பான இராணுவத்தின் மறுதலிப்பை ஏற்றுக்கொள்ளமுடியாது.

வடக்கில் கைது செய்யப்பட்டபின் காணாமற்போனோர் சம்பந்தமாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையின் ஒரு பகுதி இது.
கலாநிதி தேவநேசன் நேசையா, கே.எச்.கமிலஸ் பெர்ணாண்டோ திருமதி ஜெசிமா இஸ்மாயில், எம்.சீ.எம்.இக்பால் ஆகியோர் இக் குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.
2003 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 23 ஆம் திகதி அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட இந்தக் குழுவின் அறிக்கையில் VI ஆம் அத்தியாயத்தில் - 'பொறுப்புடைமையையும் ஒழுங்கீனங்களையும் ஏற்க மறுத்தல்' என்ற தலையங்கத்தின் கீழ் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் இவை. இதன் எஞ்சிய பகுதி அடுத்த வாரம் சூரியகாந்தியில் இடம் பெறும்.

கைது செய்தோர் முகமூடி அணிந்திருக்க வேண்டிய இரகசியம் யாது? இதற்கான காரணம் யாதெனில், ஒன்றில் கைது செய்த இராணுவ அதிகாரிகள் தாம் அடையாளம் காணப்படுவதை விரும்பவில்லை. அல்லது கைது செய்தோர் இராணுவதுக்கு உதவி செய்கின்ற ஏனைய தீவிரவாதக் குழுக்களின் உறுப்பினர்களாகவோ அல்லது தகவல் வழங்கு வோராகவோ இருந்திருக்கலாம். இவர்கள் தமது அடையாளத்தை மறைப்பதற்காக முகமூடி அணிந்துள்ளனர். கைதுசெய்தோர் இராணுவ அதிகாரிகளாக இருந்து தாம் அடையாளம் காணப்படுவதை விரும்பாவிட்டால் மேற்கொள்ளப்பட்ட கைதுகள் சட்ட விரோதமானவை என்றும் காணாமற் செய்யப்படுவதற்காகவே அக் கைதுகள் மேற்கொள்ளப்பட்டன என்பதிலும் சந்தேகமில்லை. கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட பெருந்தொகையினர் காணாமற்போயுள்ளனர். இது மேற்படி சந்தேகம் நியாயமானதென ஊர்ஜிதம் செய்கிறது.

இனங்காணப்பட்ட பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கைதுகள்

பல சந்தர்ப்பங்களில் சாட்சிகளின் முன்னிலையிலேயே கைதுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவர்களால் கைது செய்தோரது அடையாளம் காணமுடிந்தது. இச்சாட்சிகள் பெரும்பாலும் கைது செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினர்களாகவோ, நண்பர்களாகவோ, சகபாடிகளாகவோ இருந்துள்ளனர். சிலர் கைது நடந்த நேரத்தில் அந்தஇடத்தில் இருந்துள்ளனர். இந்த விடயங்களில் நாம் கிடைக்கக்கூடிய சாட்சியங்களைப்பதிவு செய்துள்ளோம். தேவையெனில் இன்னும் சாட்சியங்களைப் பதிவு செய்யவும் முடியும். பல சந்தர்ப்பங்களில் சுற்றி வளைத்து பகிரங்கமாகக் கைதுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனை அங்கிருக்கக்கூடிய சகலரும் கண்டுள்ளனர். எனவே, இவ்வழக்குகளில் கைது நடந்தது என்பதோ கைது செய்தோர் பாதுகாப்புப் படையினர் என்பதோ மறுக்க முடியாதவைகளாகும்.

கைது செய்தோர் இனங் காணப்பட்ட சந்தர்ப்பங்களிலும் கூட கைது செய்தமைக்கான பொறுப்பு மறுதலிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு மறுப்பது மூடத்தனமாக இருந்தபோதிலும் கூடக் கைது செய்யப்பட்டமை முற்றாக மறுக்கப்பட்டுள்ளது. அல்லது கைது செய்யப்பட்டவர் வேறு ஒரு முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் சீக்கிரமே அவர் விடுதலை செய்யப்படுவார் எனவும் கூறப்பட்டுள்ளது அல்லது இடமாற்றம் செய்யப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டவர் பற்றித் தமக்கு எவ்வித தகவலும் கிடைக்கவில்லை எனக் கூறப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் தன்னால் கைது செய்யப்பட்டவருக்குப் பின்னர் என்ன நடந்தது என்பது பற்றித் தெரியாமல் போய்விடக்கூடிய சந்தர்ப்பங்கள் இல்லாமல் இல்லை. ஆனால், கைது செய்யப்பட்டவரை தன்னிடமிருந்து பொறுப்பேற்றவர் யார் என்பது பற்றியும் அவருக்கு என்ன நடந்தது என்பது பற்றியும் பொறுப்புக் கூற வேண்டியவர் கைது செய்தவரே ஆவார்.

எனினும், இவ்விடயத்தில் கூடிய பொறுப்புக் கூறவேண்டியவர் இராணுவ முகாமின் பொறுப்பாள ரேயாவர். இராணுவ முகாமின் பொறுப்பாளர் தான் கைது செய்தவருக்கு என்ன நடந்து என்பதை வெளிப்படுத்த வேண்டிய பொறுப்புடையவர். அப் பொறுப்பினை அவர் மறுதலிக்க முடியாது. கைது சட்டரீதியானதா? அது முறைப்படி திறந்த தன்மையில் மேற்கொள்ளப்பட்டதா? குடும்ப அங்கத்தினருக்கு அறிவிக்கப்பட்டதா? கைது பற்றி பற்றுச்சீட்டு வழங்கப்பட்டதா?

கைது செய்யப்பட்டவர் சட்டப் படியும் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேற்படாமலும் தடுத்து வைக்கப்பட்டாரா? கைது செய்யப்பட்டவர் இடமாற்றம் செய்யப்பட்டால் அதுபற்றிய பதிவுகள் உள்ளனவா? குடும்பத்தினருக்கு இடமாற்றம் பற்றி அறிவிக்கப்பட்டதா? தடுப்புக் காவலில் உள்ளோர் கேவலமாக நடத்தப்படுவதைத் தடுப்பதற்காக முற்காப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டனவா? சிரேஷ்ட அதிகாரிகள் ஒவ்வொரு வழக்குத் தொடர்பாகவும் மேற்படி சகல கேள்விகளுக்கும் விடை தெரியாத வர்களாக இருக்கலாம். ஆனால், தமது பொறுப்பில் உள்ள நிறுவனங்களில் இவ்வாறான ஒழுங்கீனங்கள் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்வது அவர்களுடைய பொறுப்பாகும்.

பொறுப்புடைமையை மறுதலித்தல்

லெப்டினன் கேணல் துமிந்த கெப்பிட்டிவலான என்பவருடைய பெயர் மூறைப்பாடுகளில் அடிக்கடி வெளிவந்தது. எனினும், அவர் எம்மிடம் சாட்சியமளித்தபோது தான் கைது செய்தது பற்றியோ அல்லது பொதுவாக இராணுவம் கைது செய்தது பற்றியோ முற்றாக மறுத்துரைத்தார். இராணுவம் என்றுமே கைது செய்வதில்லை என அவர் கூறினார். பொலீசார் மட்டுமே கைதுகளை மேற்கொண்டனர் என்றும் இராணுவம் சுற்றிவளைத்துத் தேடுவதற்கான பாதுகாப்பினை மட்டும் வழங்கியது எனவும் இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் கைதுகளை மேற்கொண்டனர் எனவும் அவர் கூறினார். எனவே, அவரது முன்னைய மறுப்பு கேள்விக் கிடமானது. எம்மால் சாட்சியத்துக்கு அழைக்கப்பட்ட யாழ்ப்பாண பொலீஸ் அத்தியட்சகர் தாம் கைது செய்த சகலரைப் பற்றியும் பதிவுகள் உள்ளதாகக் குறிப்பிட்டார். அப்பதிவுகள் யாவும் ஆய்வு செய்யப்பட்டன. ஆனால், காணாமற் போனதாகக் கூறப்படுகின்ற எவரைப் பற்றியும் அவற்றில் பதியப்பட்டிருக்கவில்லை. எனவே, சான்றுகள் இல்லாத நிலையில் சகல கைதுகளும் பொலீசாராலேயே மேற்கொள் ளப்பட்டன என்பதையோ அல்லது கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாகப் பொலீசாரின் தடுப்புக்காவலுக்கு கையளிக்கப் பட்டார்கள் என்பதையோ எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2006 இல் எண்கணித பலன்கள்

(II பக்கத் தொடர்ச்சி)

6, 15, 24

6, 15, 24 திகதிகளில் பிறந்தவர்கள் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்திருந்தாலும் வசதி மிகுந்தோரைப் போல வாழ்வார். உணவு, உடை, வாகனம் போன்ற வைக்கு எந்நாளும் இவருக்கு பஞ்சம் வராது. பொறுமைக் குணம் கொண்ட இவருக்கு எப்போதாவது கோபம் வரும். இவருடைய கோபம் எவரையும் துயர்படுத்தாது. தாது சக்தி இவரின் உடலில் அதிகம் இருக்கும். எனவே என்றென்றும் இளமையுடன் திகழக் கூடியவர். கலைகளில் விருப்பமும் தேர்ச்சியும் கொண்டவர். அன்னையின் அன்புக்கு அடிமையானவர். தாயாரைப் போலவே பாராட்டி சீராட்டும் மனைவி அமையப் பெற்றவர். பொருளாதாரமும், ஆரோக்கியமும் மேம்படும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும்.

நீண்ட நாட்களாக தாயார் வழிச் சொத்துக்கள் எதிர்பார்ப்பவர்களுக்கு திடீர் என கிடைக்கும். புதிய வீடு வாங்குதல், அல்லது காலி இடத்தில் வீடு கட்டுதல் போன்ற நிலையான சொத்து சேர்க்கை ஏற்படும். திருமணம் எதிர்பார்த்திருப்பவர்களுக்கு ஆணாயின் வயது வித்தியாசம் குறைவாக உள்ள பெண்ணும், பெண் என்றால் தன்னை விட சற்று வயது குறைந்த ஆணும் மணமக்களாக அமையும் சந்தர்ப்பம் உண்டு. தொழில் செய்யும் இடத்தில் சஞ்சலங்கள் அகன்று சகஜநிலை அதிகரிக்கும்.

பெண்கள்: எவ்வளவுதான் திறமையாக குடும்பம் நடத்தி வந்தாலும் நல்லபெயர் கிடைக்கவில்லையே என்று ஏங்குபவர்களுக்கு இந்த ஆண்டு நல்ல பெயர் கிடைத்திடும். கணவன்– மனைவி ஒற்றுமை கற்கண்டாய் இனித்திடும். நீண்ட நாட்களுக்கு பின் இருவரும் தனிமையில் சந்தோஷமிக்க இந்த வருடம் முழுவதும் காலம் கருணை காட்டும். உங்கள் சேமிப்பில் நகைகள் செய்யலாம். பற்றாக்குறைக்கு கணவரின் பங்களிப்பும் உண்டு.

ஒவ்வொரு மாதமும் 6, 15, 24 ஆகிய திகதிகளில் கணவன்– மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். புத்திரபாக்கியம் பெற்றிடும் வாய்ப்புகள் ஏற்படும். புண்ணிய ஸ்தல யாத்திரைகள் உண்டு. 1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் பூர்வீக சொத்துக்கள் மூலம் பணவரவுகள் இருக்கும். மேலதிகாரிகளின் உபகாரங்கள் கிடைக்கும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். 8, 17, 26 ஆம் திகதிகளில் பக்தி உணர்வு அதிகரிக்கும்.

7, 16, 25

7, 16, 25 திகதிகளில் பிறந்தவர்கள் இமயம் போல் துயரம் வந்தாலும், இஷ்டம்போல் கஷ்டம் வந்தாலும் கலங்காமல் வாழக் கூடியவர். கலாரசனையும், கற்பனை வளமும் உடையவர். நடக்கும் பாதை எது என்றாலும் அதில் நாணயத்தையும், நம்பிக்கையையும் இரண்டு கண்களாக பாவித்து செயலாற்றக் கூடியவர்.

பெண்களின் நட்பு இவருக்கு சகஜமாகக் கிடைக்கும். அவர்களால் உதவியும் உண்டு. உபத்திரமும் உண்டு. இவரை விட நிறம் கூடுதலான பெண் இவருக்கு மனைவியாக வருவார்.

பொருள்வளம் சிறந்து காணப்படும். சென்ற ஆண்டை விட இவ்வருமானம் அதிகம் இருக்கும். பெண்களால் நன்மைகளை எதிர்பார்க்கலாம். திருமணம் இல்லாமல் இருப்பவர்களுக்கு வருட தொடக்கத்திலேயே திருமண ஏற்பாடுகள் சிறப்பாக நடைபெறும். ஒரு பெரிய தொகையை கடன் வாங்கி தொழில் அபிவிருத்திக் காகவோ, சுப காரியத்திற்காகவோ செலவிட வேண்டி இருக்கும். விலை உயர்ந்த பொருட்களை வெளியில் எடுத்துச் செல்லும்போது கவனம் தேவை.

புதிய தொழில் தொடங்குபவர்கள் தனது பெயரில் தொடங்குவதை விட மனைவி பெயரில் தொடங்குவது நல்ல வெற்றியை தரும். மனைவியுடன் எல்லா காரியங்களிலும் அனுசரித்து போக வேண்டியிருக்கும்.

பெண்கள்: உங்களைக் கண்டு பலரும் பொறாமைப் படுவார்கள். பொருளாதாரத்தினால் தடைப்பட்டு போன திருமணம் வருட தொடக்கத்தில் சுலபமாக நடந்திடும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தூசு, குப்பை குறையாமல் வீட்டை தூய்மையாக வைத்துக் கொள்ளுவதால் சில உபத்திரவங்களில் இருந்து தப்பலாம். குடும்ப உபயோகத்திற்காக நாகரீகப் பொருள் வாங்குவதும், வாகனம் வாங்குவதும் அவரவர் சூழ்நிலைக்கு ஏற்ப அமையும்.

ஒவ்வொரு மாதமும் 7, 16, 25 ஆகிய திகதிகளில் தந்தைவழி உறவினர்களால் நன்மையும், பூர்வீக சொத்தில் வருமானமும், பாகப்பிரிவினை போன்ற வற்றால் திருப்தியும் ஏற்படும். 1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் உடல்நிலையில் புதுஉற்சாகம் ஏற்பட்டு சுறுசுறுப்பாக எல்லா காரியங்களிலும் ஈடுபடலாம். பண வரவுகள் இருக்கும். அரசு சம்பந்தப்பட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். 8, 17, 26 ஆகிய திகதிகளில் முக்கிய பொறுப்புகள் கிடைக்கும். அரசியலில் நல்ல செல்வாக்கும், புகழும் ஏற்படும்.

8, 17, 26

8, 17, 26 திகதிகளில் பிறந்தவர்கள் மணிக் கணக்கில் பேசிக் கொண்டே இருக்கக் கூடியவர். எதையும் பாட்டு மூலமே வெளிப்படுத்தும் சாமர்த்தியம் மிக்கவர். ஆமை வேகத்தில் நகர எண்ணாது அசுரத் தனமாக உழைத்து முன்னேறுவார். ஆனால் தனது திறமையை தானே உணராதவர். கட்டுப்பாடு, கடமை, பொறுப்பு என்னும் கூட்டினுள் தானும் அடைபட்டு மற்றவர்களையும் அதற்குள் அழைத்துச் செல்லும் காரியக்காரர். உயர்ந்தவர் தாழ்வதும், தாழ்ந்தவர் உயர்வதும் இவர் வாழ்வில் சர்வ சாதாரணம். இளமையில் இவர் பட்ட ரணங்கள், வடுக்கள் ஏராளம் இருக்கும். பெற் றோரை பேணிக் காக்கக்கூடியவர். இவரது பிறந்த தேதிக்கு ஏற்ப பொறுத்தமான பெயர் இருந்தால் மட் டுமே சங்கடமில்லாத வாழ்க்கையும், சந்தோஷமான குடும் பமும் வளமான செல்வமும் அமையும் என்பது உண்மை யிலும் உண்மை. சாப்பாட்டு சங்கதிகளில் கொஞ்சம் கட்டுப்பாடு தேவைப்படும். மனக்கவலைக் குத்தான் மருந்து தேட வேண்டும். தொழில், வியாபாரம், உத்தி யோகம் போன்றவற்றில் நல்ல ஆதாயம் உண்டு. வாகன யோகம் உண்டு. விவசாயம் பார்ப்பவர்களுக்கு ஏதேனும் குபீர் அதிஷ்டம் ஏற்படும் அமைப்பு உள்ளது. இஷ்டத் திற்கு ஊர் சுற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு திடீர் திருமணம் நடைபெறும். தொழில், உத்தியோகம் எதிர் பார்ப்பவர்களுக்கு புதிய வேலைவாய்ப்பு கிடைக் கும். முதலில் கஷ்டமாகவும் நாள் செல்ல செல்ல சுலப மானதாகவும் அந்த பணி அமையும். தொழில்கல்வி பயிலும் வாய்ப்பு கனிந்து வரும். பெண்கள்: சரியான நேரத்திற்கு உறக்கம் வராது. விழித்திருக்க வேண்டிய தருணங்களில் தூக்கம் வந்து பழி எடுக்கும். சென்ற ஆண்டில் இடமாற்றம், வீடு மாற்றம் போன்றவை ஏற் பட்டு அதிக செலவுகள் ஏற்பட்டது. இந்த வருடம் செல வுக்கு பதிலாக சேமிப்பு அதிகரிக்கும். குழந்தைகளுக்கு சுபகாரியங்கள் நடத்தலாம். கொஞ்சம் கொஞ்சமாக சேமித்து வைத்த பொருள் சிறு துளி பெருவெள்ள மாவது போல பெருந்தொகையாக கைக்கு வரும். குடும்ப பொறுப்பு சிலருக்கு அதிகரிக்கும். சிலருக்கு குடும்ப பொறுப்பிலிருந்து விலகிடும் சூழ்நிலைகள் தோன்றும். உத்தியோகம் பார்த்துக் கொண்டே அஞ்சல் வழியில் கல்வி கற்றிடும் அமைப்பும் உண்டு. புத்திர பிராப்தம் உண்டு. ஒவ்வொரு மாதமும் 8, 17, 26 ஆகிய திகதிகளில் முற்போக்கான பலன்களை எதிர் பார்க்கலாம். உங்களின் பலத்தையும், அருமையையும் நீங்களே உணரலாம். தொழில் துறையில் உள்ள போட்டிகளை வெல்லலாம். 1, 10, 19, 28 ஆகிய திகதி களில் அரசு சம்பந்தப்பட்ட காரியங்களில் சாதகமான பலன்கள் கிடைக்கும். பணவரவுகள் இருக்கும். கணவன்–மனைவி ஒற்றுமை சிறக்கும். வெளியூர் பயணங்கள் இருக்கும். பூமி, நிலம் போன்றவற்றில் நல்ல ஆதாயம் கிடைக்கும். 5, 14, 23 ஆகிய திகதி களில் மறைக்கப்பட்ட உண்மைகள் வெளியாகும். தொலைந்து போன பொருட்கள் திரும்ப கிடைக்கும்.

9, 18, 27

9, 18, 27 திகதிகளில் பிறந்தவர்கள் பிறர் உங் களை அதிகாரம் செய்தால் உங்களுக்கு அடியோடு பிடிக்காது. பெற்றோருக்கு பிரியமானவர். ஆண்மையும், உடல் வலிமையும் கொண்டவர். உயர்ந்த பரம்பரையில் பிறந் தவர். கல்வி அறிவு மிகுந்தவர். கட்டுப்பாட்டுடன் வாழ விரும்புவர். மனைவி சொல்லே மகேசன் சொல்! என மதித்து நடப்பவர். குறைந்த எண்ணிக்கையில் குழந்தை உள்ளவர். இறந்த காலத்தையே நினைத்துக் கொண்டிருந்தால் எதிர்காலத்தில் வருகை தரும் வசந் தத்தை சந்திக்க முடியாது என்பதை உணர்ந்து பழைய சங்கதிகளை மறக்கக் கூடியவர். உத்தியோகம் பார்ப்ப வர்களுக்கு தொழில் நகரம் என்று பேர்பெற்ற இடங்களுக்கு மாற்றம் அமையும். கூட்டு வியாபாரம் செய்பவர்கள் நன்மை அடைவார்கள். பொருள் வரவுக்கும், செலவுக் கும் சரியாக இருக்கும். காடு, மலை போன்ற இடங்களுக்கு சென்றுவரும் அமைப்பு ஏற்படும். கல்வி பயிற்சியில் இதுவரையிலும் ஏற்பட்டிருந்த மந்தநிலை மாறி சாதக மான சூழ்நிலைகள் அரும்பும். அரசாங்கத்திற்கு பயப்படக் கூடிய சம்பவங்கள் நிகழ்ந்திடக்கூடிய அமைப்பு தோன்றலாம். பூர்வீக சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். பகைமை பாராட்டி வந்த சகோதர, சகோதரிகள் நட்போடு வருவார்கள். திருமண வயது பிள்ளைகள் கொண்ட குடும்பத்தினர் முறைவிட்டு போகக்கூடாது என் பதற்காக தனது வாரிசுகளுக்கு திருமணம் நடத்தி வைப்பார்கள்.

பெண்கள்: அரசுப் பணியில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் விரும்பாமலே கிடைத்திடும். விட்டுக் கொடுத்துப் போவதில் ஒரு விவேகம் இருக்கிறது என் பதை உணர்ந்து குடும்ப சூழ்நிலையில் சகிப்பு தன்மை யோடு நடந்து கொள்வீர்கள். கணவரிடம் இதுவரையி லும் வம்பளந்து, வாயாடி, எதிர்தர்க்கம் செய்து வந்த நிலை மாறி சாந்த சொருபமாக நடந்து கொள்ளுவீர்கள். நகைகள் வாங்கிடும் எண்ணம் இருந்தாலும் ஏதேனும் ஒரு காரணத்தால் தள்ளிப்போட வேண்டி இருக்கும். வெளியூரில் இருக்கும் குழந்தைகளிடம் இருந்து நல்ல சேதிகள் தேடிவரும். வெளிநாடு போன்ற தூர தேசங் களுக்கு கட்டிக்கொடுத்த மகளை காண அங்கே சென்று வரும் வாய்ப்பு சுலபமாக கிடைத்திடும். திருமணம் நடந் தேற சகல வசதிகளுடன் பொருள் வசதியும் கிடைக்கும். குலப்பெருமையும், அரசு உத்தியோகத்திற்கு நிகர அந் தஸ்து உள்ள உத்தியோகம் பார்க்கும் மாப்பிள்ளை அமை வார். ஒவ்வொரு மாதமும் 9, 18, 27 ஆகிய திகதிகளில் எதிர்பார்க்கும் பதவி உயர்வு, பொறுப்புகள் போன்றவை உத்தியோகத்தில் அமையும். தொழிலை இழந்து தவிப் பவர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு அமையும். கவுரவம், புகழ் ஆகியவை சிறப்பாக இருக்கும். 1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் தகப்பனாரால் சில ஆதாயங்கள் கிடைக் கும். அரசு வகை அனுமதி, ஒப்பந்தம், உதவிகள் போன் றவை கையெழுத்தாகும். குடும்பத்தில் உள்ள பூசல்கள் மறையும். பணவரவு இருக்கும். 8, 17, 26 ஆகிய திகதி களில் மிகவும் கவனம் தேவை. நம்பிக்கெடுதல், நாணய குறைவு, வீண் செலவுகள் போன்றவை ஏற்படும். ✱

நன்றி : தினமணி

தேறுமோ மானிடம்?

பனி படர்ந்த
மே(தி)ளி
மௌன வெப்பத்தால்
மரணிக்காது இன்னும்
இருப்புக் கொள்கிறது!

வானமளந்து
வாழும் என் நினைப்புகளில்
ஊனமே இன்றுமின்னும்
உறங்காமல் –
உயிர்ப்புப் பெறுகிறது!

இந்த நர(க) வாழ்வின்
நகர
எத்தனை அவகாசங்களின்
சக வாசகங்களோடு – எங்கள்
சகா(த) வசங்கள் – இன்னும்
சார்ந்து கொள்கிறது;
இறக்கும் வரை
இருப்பதற்காக.....

எஞ்சிடும் காலமாவது,
அஞ்சுதல் கழிந்து
ஆறுமோ ஆறா(மா)ண்டே?
தேறுமோ மானிடம்?

-மானியூர் ரட்ணேஸ்

அன்பு
காசைக் கொட்டி
கடையில் அள்ளி
வாங்கும்
வாசனைச் சரக்கல்ல...
மனசைக் கொடுத்து
மனசை வாங்கும்
பதிர்வுக் களம்

பொறுமை
ஆழ்ந்த கடலில் - சீறி
வெடித்து....
தீக்கிரையாக்கும்
தீயல்ல....
பொருப்பான
இதயத்திலும்
நியாயமான இருப்பு

காதல்
ஆழ அகலமற்ற
அன்னியக் கனவு
காம வெறியே....
இதன்
இலக்கு!
ஆயினும்....
மூச்சற்ற முடங்களாய்...
வாழ்ந்த
காலங்களினுள்ளும்
ஒரு வரலாறு
பதியப்பட்டே இருக்கும்...
ஒரு வேளை....
அதன் இருப்பை
அடையாளப்படுத்தும் - எம்
வரலாறுகளுக்கு
அவையும்....
ஆவணங்களாகும்

-தர்மினி பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில எழுத்தொலிகளை தமிழில் எழுத முடியாதா?

-ஓர் ஆய்வுநோக்கு

ஆங்கில எழுத்துக்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் எல்லாவித ஒலிகளையும் தமிழ் எழுத்துகள் மூலம் சரியாக வெளிப்படுத்த முடிவதில்லை என்பது பொதுவானதொரு குறைபாடு - முறைப்பாடும் கூட.

தமிழ்மொழி தனக்கே உரிய மொழி ஓசைகளையும், உச்சரிப்புகளையும் பல்வேறு இடையூறுகளுக்கும், ஊடுருவல்களுக்கும் இடையில் தற்காத்துக்கொண்டு வந்துள்ளது. அது தனக்கே உரிய முறையில் தனித்துவமாகவும் உயிர்த்துடிப்போடும் வளர்ந்து வருகின்றது. தமிழ் மொழியின் தூய்மையைப் பாதுகாப்பதில் தமிழ் அறிஞர்கள் பெரும்பாடுபட்டு வந்துள்ளார்கள்.

தமிழின் தூய்மையைப் பாதுகாப்பதில் இவர்கள் காட்டிய இறுக்கமான போக்கினால் தமிழ் மொழியானது காலமாற்றத்திற்கும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் ஏற்ப வளரமுடியவில்லையென்று குறைபடுபவர்களும் இருக்கிறார்கள்.

தமிழ்மொழி எழுத்து வரிவடிவத்தை இப்போதிருக்கும் நெடுங்கணக்கியல்பை மிக சுருக்கி ஒரு குறிப்பிட்ட எண்ணுக்குள் மட்டுப்படுத்திக் கொள்ளும் ஒரு முயற்சியில் தமிழ் நாட்டில் சில அறிஞர்கள் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிகின்றது. அவ்வாறான முயற்சி இன்றைய கணனி தொழில்நுட்ப யுகத்துக்கு ஏற்றதாகவே இருக்கும் என்று தமிழ்மொழி வளர்ச்சியில் அக்கறையுள்ள அறிஞர்கள் கருதுவார்கள்.

வானொலியில் இடம்பெற்ற உரையாடல் ஒன்றில் கலந்துகொண்ட தமிழ் அறிஞர் ஒருவர், தமிழ் நெடுங்கணக்கை முப்பத்து நான்கு எழுத்துக்களுக்குள் அடக்கும் வகையில் புதிய வரிவடிவம் ஒன்றை ஆராய்ந்து முடித்துள்ளதாகவும் விரைவில் அதனை வெளியிடவிருப்பதாகவும் தெரிவித்தார். அதே அரங்கில் கலந்துகொண்டிருந்த இன்னொரு தமிழ்ப் பண்டிதர் அதிர்ச்சியுற்றவராய் "இவர் கூறுவதைக் கேட்கும்போது என் நெஞ்சில் கத்தியால் குத்தியதுபோல் இருந்தது" என்று கூறினார். ஆராய்ந்து கருத்து வெளியிடப்படும்போது அதனை அறிஞர்கள் சீர்தூக்கிப் பார்க்கவேண்டுமே அல்லாது, எடுத்த எடுப்பிலேயே தூக்கி எறிந்துவிடுவது மொழி வளர்ச்சிக்கு உதவாது.

நவீன தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்ப தமிழர் சிந்தனையும் இதர வாழ்வியல் முறைகளும் மாற்றம் பெற்று வருகின்றன. இதில் நன்மையும் உண்டு தீமையும் உண்டு. நன்மையானவற்றை ஏற்றுக் கொண்டு அல்லாதவற்றை புறக்கணித்து விடுவதே எதிர்கால சமூக வளர்ச்சிக்கு உதவியாகும். தேவையெனில் திருத்தங்களை செய்துகொள்ளலாம்.

எழுத்துக்களைக் குறைப்பதுவே சீர்திருத்தம்

தமிழ் அறிஞர்கள் என்னதான் மார்தட்டிக் கொண்டாலும் தமிழ்மொழியில் சிலவித ஓசைகளை (ஒலிகளை) எழுப்பக்கூடிய வரிவடிவங்கள் இல்லையென்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். தமிழிற்கு- தமிழருக்கு- அந்நியமான ஓசை வடிவங்கள் தேவைப்படாத காலம் ஒன்றிருந்திருக்கலாம் - பிற்காலத்தில் வடமொழி ஓசைகளை தமிழில் வெளிப்படுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டபோது புதிய எழுத்துக்கள் தமிழ் நெடுங்கணக்குடன் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவேண்டும். அதன் காரணமாகவே வடமொழி எழுத்துக்களான ஸ,ஷ,ஜ,ஹ,ஸ்ரீ, க்ஷி போன்றவை தமிழ் வரிவடிவங்களுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன. இருந்தாலும் இந்த எழுத்துக்களுக்கு இணையாக தமிழ் இயல்புக்கு ஏற்றாற்போல் ஒலிகளை மாற்றி அமைப்பதிலும் அறிஞர்கள் ஈடுபட்டிருந்துள்ளனர். காரணம் என்னவெனில், தமிழ்மொழியின் இயல்பான வரிவடிவங்களுக்கு - அந்நியமான வரிவடிவங்களை ஏற்றுக்கொள்வதில் தமிழர்கள் பொதுவாகவே தயக்கம் (சிலசமயம் எதிர்ப்பு) காட்டியமையே என்று கூறவேண்டும்.

இவை தேவையில்லை இவ்வெழுத்துக்களினால் தரப்படும் ஓசைகளைத் தமிழ் எழுத்துக்களின் மூலமே ஏற்படுத்திக் கொள்ளலாம் என்பாரும் உளர்.

வடமொழி 'ஷ' வை 'ட' மூலம் மாற்றி எழுதும் முறைமையொன்றுமுளது. 'வேஷம்' 'வேட'மாகவும், 'விஷயம்' விடயமாகவும் எழுதப்படுவதை அறிவோம். இதேவிதியை எல்லாச் சொற்களுக்கும் பயன்படுத்தமுடியாத நிலையிருக்கின்றது. 'பாஷை' என்பதை 'பாடை' என்று எழுத எவர் விரும்புவார்? நல்லவேளையாக 'மொழி' இருப்பதனால் 'பாடை' தேவையில்லாமல் போய்விட்டது. ஆங்கிலத்திலுள்ள 'F' எழுத்தின் ஒலியை 'எஃப்' என்று எழுதும் வழக்கம் ஒன்று உள்ளது. இது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டவொன்றாக இருந்தாலும் ஓர் எழுத்தின் 'ஒலியை' மூன்று எழுத்துக்களைக் கொண்டு வெளிப்படுத்த வேண்டியநிலைமை கவலைக்குரியதாகும்.

எழுத்துச் சீர்திருத்தம் என்பது சொற்களில்வரும் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காகவும் இருக்கவேண்டுமேயன்றி, அதிகரிப்பதாய் இருக்கலாகாது என்பது என் கருத்து.

ஆங்கிலம் இருபத்தாறு எழுத்துக்களை மட்டுமே வைத்துக் கொண்டு விஞ்ஞானத்துறையை -விஞ்ஞான உலகத்தையே- தனக்குள் அடக்கி வைத்துக்கொண்டுள்ளது. அமெரிக்கா முதல் அவுஸ்திரேலியா வரை - தான் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த நாடுகளில் எல்லாம் ஆங்கிலத்தையே ஆட்சி மொழியாகத் திணிக்கும் வாய்ப்பை ஆங்கிலேயர் பெற்றிருந்தார்கள். விஞ்ஞான தொழில்நுட்பத்துறையிலும் அவர்கள் முன்னேறியதால் அம்மொழி இயல்பாகவே உலக மொழியாக உயர்ந்துவிட்டது.

ஹிட்லர் வெற்றி பெற்றிருந்தால்?

இவ்வாறு இரண்டாவது உலக யுத்தத்தின் போது 'ஹிட்லர்' தான் நினைத்தது போல் வெற்றி பெற்றிருந்தால் 'ஜேர்மன்' இன்று உலக மொழியாகி இருக்கமுடியாதா? கீழ்த்திசையில் ஜப்பான் முன்னேறி வந்த வேகத்தில் கீழ்த்திசை நாடுகளையும் ஆசியாவையும் ஆக்கிரமித்திருந்தால் இன்று ஜப்பானிய மொழியும் கூட உலக மொழிகளில் ஒன்றாக, ஆங்கிலத்துக்கு நிகராக உயர்ந்திருக்க முடியுமல்லவா?

ஆங்கிலம் 26 எழுத்துக்களைக் கொண்ட மொழியென்பது ஆச்சரியத்துக்குரியது. இதையும் இன்னும் குறைப்பது பற்றி அவர்கள் ஆலோசனை நடத்துகிறார்கள். ஐரோப்பிய ஒன்றியத்தில் ஐரோப்பிய நாடுகள் இணைந்து கொண்டிருப்பதால் பல்வேறு மொழிகளைப் பேசும் இனங்களுக்கிடையில் தொடர்பு மொழியாக ஆங்கிலமே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் நிலையில் ஆங்கில மொழி எழுத்துச் சீர்திருத்தம் பற்றி யோசிக்கப்படுகின்றது. அந்தவகையில், அவசியமற்றவை என்று கருதப்படும் சில எழுத்துக்கள் ஆங்கில வரிவடிவத்திலிருந்தே அகற்றப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கே (K) ஓசையைக் கொடுக்கும் இடங்களில் C,Q (சிலசமயம் 'ch'கூட) பாவிக்கப்படுவது நிறுத்தப்பட்டு 'K' மட்டுமே பயன்படுத்தப்படவிருக்கின்றது. அதுபோலவே v,w எழுத்துக்களில் ஒன்று நீக்கப்படும் என்று தெரிகின்றது. இவ்வாறு செய்யப்படவிருக்கும் பல மாற்றங்களால் ஆங்கிலத்திலுள்ள 26 எழுத்துக்கள் மேலும் குறையும் என்று எதிர்பார்க்கலாம்.

எனவே, எழுத்துச் சீர்திருத்தம் என்றுவரும்போது நவகாலத்துக்கும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் ஏற்றாற்போல், சொற்களும், எழுத்துக்களும் குறைக்கப்படுவது அவசியம்- அத்தியாவசியம் என்பது தெளிவாகின்றது. குறிப்பாக பிரசுரத்துறைக்கு எழுத்து - மற்றும் சொற் சுருக்கம் அவசியமாகின்றது.

பிறமொழி சொற்களுக்கு ஈடான தமிழ், சொற்களைக் கண்டுபிடிப்பதும் பயன்படுத்துவதும் வரவேற்கத்தக்கது. ஆனால், அவை இலகுவாகப் பயன்படுத்தக்கூடியவையாக இருத்தல்வேண்டும். அதற்காக ஏற்கனவே தமிழ் சொற்களாகவே மாறிவிட்ட சொற்களைப் பெரும்பாடுபட்டு மொழியாக்கம் செய்யவேண்டும் என்பதில்லை. இனி நாம் முதலில் ஆரம்பித்த விடயத்துக்கே வருவோம்.

தமிழில் எழுதும்போது ஏற்படும் இடர்ப்பாடு

ஆங்கிலத்திலுள்ள பின்வரும் எழுத்துக்களை தமிழில் எழுதும்போது இடர்ப்பாடுகள் ஏற்படுவதைப் பார்க்கின்றோம். (வேறும் இருக்கலாம்) இவையே முக்கியமானவை.

B, D, F, G, H, J, K, P, T இந்த எழுத்துக்களின் ஒலியை தமிழில் தற்பொழுது பின்வருமாறு எழுதி வருகின்றோம்.

B- பி ,D-டி , F-எப்(எஃப்),G-ஜி ,H-எச், J-ஜே, K-கே , P-பி , T-ரி (டி)

P எழுத்தும் B எழுத்தும் ஒரேவித அடிப்படை ஒலியைக் கொண்டிருந்தாலும், P அழுத்தமான ஒலியையும் B மென்மையான ஒலியையும் கொண்டவை. எனவே, இரண்டு எழுத்துக்களின் ஒலிகளையும் தமிழில் உள்ள 'ப' (பி) யினால் வெளிப்படுத்த முனைகின்றோம். இதில் பெரிய முரண்பாடு ஏற்படுகின்றது.

உதாரணமாக : Bun (ஓர் உணவு) என்பதை தமிழில் 'பன்' என்று எழுதினால் Pun (ஒரு பெயர்) அதேவிதமாக 'பன்' என்று எழுதுவது ஆங்கில எழுத்துக்குரிய வேறுபாடான ஒலியைப் பிறப்பிக்கமுடியாதுள்ளது. அதேபோல், 'F' எழுத்தையும் 'எப்' என்றும் 'எஃப்' என்றும் 'எவ்' என்றும் எழுத முனைகின்றோம்.

இந்த B,P,F ஆகிய மூன்று ஆங்கில எழுத்துக்களும் உதட்டின் மூலம் உச்சரிக்கப்படுவன. ஏறத்தாழ ஒரே ஒலியிலிருந்து பிறப்பன என்றாலும் உதட்டைப் பயன்படுத்தும் முறையில் சிறிய மாற்றத்தை செய்து காற்றை வெளியிடுவதன் மூலம் எழுத்துகளுக்குரிய வெவ்வேறு ஒலிகளை ஏற்படுத்துகின்றோம். எனவே, அதே ஒலியை தமிழ் எழுத்திலும் ஏற்படுத்த முடியாத நிலைமை கவலைக்குரியதல்லவா?

பேனா

எனவேதான், இந்தவிதமான ஒலிகளை முரண்பாடில்லாமலும், பல எழுத்துக்களைப் பயன்படுத்தாமலும் புதிய எழுத்துக்களைப் புகுத்தாமலும் தமிழிலுள்ள எழுத்துக்களிலேயே ஒரு கோட்டை அல்லது கீற்றை சேர்ப்பதன் மூலம் இலகுவாக ஏற்படுத்திக் கொள்ளலாம் என்பது என்துணிபு. மேலே குறிப்பிட்ட P,B,F ஆகிய எழுத்துக்கள் மட்டுமன்றி அவை போன்று சிக்கலுக்குரிய வேறும் G, H, K, T, D, S, Sh, Ch போன்ற எழுத்துக்களின் ஒலிகளையும் தமிழிலுள்ள எழுத்துக்களிலேயே மேலே குறிப்பிட்டதுபோன்று அமைத்துக் கொள்ளலாம் என்று கருதுகின்றேன்.

இனி அந்த எழுத்து ஒலி மாற்றத்தை எவ்வாறு செய்யலாம் என்பதைக் கீழே வரும் அட்டவணையில் காண்க.

P - ப இதில் எதுவித மாற்றமும் இல்லை. 'P' எழுத்துக்கீடாக 'ப' எழுத்தையே வைத்துக்கொள்ளலாம்.

B - ப 'ப' வில் இடது பக்க செங்குத்தான கோட்டில் ஒரு வெட்டுக்கோடு ப இதனை 'B' எழுத்துக்கீடான தமிழ் எழுத்து என்போம்.

F - ப இங்கு 'ப' வில் வலது பக்கக்கோட்டில் ஒரு வெட்டுக்கோடு ப இது 'F' எழுத்தின் ஒலியை வெளிப்படுத்தும் தமிழ் எழுத்தாக ஏற்றுக்கொள்ளலாம்.

இனி இப்புதிய தமிழ் எழுத்துக்களைக் கொண்டு ஆங்கில சொற்களை எவ்வாறு எழுதலாம் என்பதற்கான உதாரணம் வருமாறு;

Pun - பன் : ஒருவரின் பெயர்

Bun- பன் : ஒரு தின்பண்டம்

Fun - பன் : வேடிக்கை

Pit - பிற் : கிடங்கு

Bit - பிட் : சிறுதுண்டு

Fit - பிற் : பொருத்து

(அல்லது) வலிப்பு.

இனி அதேவிதமாக G, K, H ஆகிய எழுத்துக்களுக்குரிய ஒலிகளை வெளிப்படுத்தும் வகையில் தமிழ் எழுத்துக்களில் நாம் செய்துகொள்ளக்கூடிய மாற்றங்களைப் பார்க்கலாம்.

(வளரும்)

வரலாறு உணர்த்தும் பாடத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிரியாவையும், இஸ்ரேலையும் பிரிப்பன கோலான் மலைக்குன்றுகளே. இந்த 'ஆறு நாள் யுத்தம்' ஆரம்பமாவதற்கு முன்னர் இந்த கோலான் மலைச் சாரலில் இருந்தவாறே இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கைகளை சிரிய இராணுவத்தினர் அவதானித்து வந்தனர். அத்தோடு இடையிடையே இஸ்ரேலிய இராணுவத்தின் மீது தாக்குதல்களையும் மேற்கொண்டு வந்தனர். இதனைச் சகிக்க இயலாத இஸ்ரேலிய இராணுவம் கோலான் மலைப் பகுதியையும் கைப்பற்றி அதையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது. அங்கிருந்தவாறே இஸ்ரேலிய இராணுவம் சிரியாவின் தலைநகரான டமஸ்கஸ்ஸில் இடம்பெறும் நடவடிக்கைகளை அவதானித்த வண்ணமிருந்தது.

ஆரம்பத்திலிலேயே பெருமெடுப்பில் திடீரென்று இஸ்ரேல் விமானப்படையால் மேற்கொள்ளப்பட்ட கடும் விமானத் தாக்குதலால் எகிப்து, சிரியா மற்றும் ஜோர்தான் ஆகிய மூன்று நாடுகளுமே தமது மனோபலத்தை இழந்தன. இதனால் மிக வேகமாக முன்னேறிச் சென்று சிரியாவின் தலைநகர் டமஸ்கஸ்ஸிலிருந்து 35 மைல் தூரம் வரையும், எகிப்தின் தலைநகர் கெய்ரோவிலிருந்து 20 மைல் தூரம் வரையுமான பிரதேசங்களைக் கைப்பற்றித் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதில் இஸ்ரேலிய இராணுவத்துக்குச் சிரமமேதும் ஏற்படவில்லை.

இந்த நிலையில் எந்தவித முன்னறிவிப்புமின்றித் திடீரென மேற்கொள்ளப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்திக் கொள்ளுமாறு ஏனைய உலக நாடுகளின் தலைவர்கள் இஸ்ரேலை வற்புறுத்தினர். இந்த யுத்தத்தில் சம்பந்தப்படும் இரு தரப்புக்களும் ஜூலை மாதம் 11 ஆம் திகதி பிற்பகலுடன் தமது தாக்குதல்களை நிறுத்திக் கொள்ளவேண்டுமென உலக நாடுகளின் தலைவர்கள் இரு தரப்பினரையும் வேண்டிக் கொண்டனர். இதனையே ஐக்கிய நாடுகள் சபையும் இஸ்ரேலுக்கு உத்தியோகபூர்வமாகத் தெரிவித்தது. அதற்கமைய ஜூலை 11 ஆம் திகதியுடன் அந்த 'ஆறுநாள் யுத்தம்' முடிவுக்கு வந்தது.

அந்தவேளையில் தமக்குத் தேவைப்பட்ட முக்கிய நிலப்பகுதி முழுவதையும் இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்துவிட்டிருந்தது. அந்த 'ஆறு நாள் யுத்தம்' ஆரம்பமாவதற்கு முன்னர் இஸ்ரேல் வசமிருந்த மொத்த நிலப்பரப்பு 8 ஆயிரம் சதுர மைலைக் கொண்டதாக இருந்தது. அந்த 'ஆறு நாள் யுத்தத்தின்' மூலம் இஸ்ரேல் 26 ஆயிரம் சதுர மைல் பிரதேசத்தை மற்றைய மூன்று நாடுகளிடமிருந்தும் கைப்பற்றித் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருந்தது. ஆயினும், தொடர்ந்தும் இந்தப் பெரும் நிலப்பரப்பைத் தனது கட்டுப்பாட்டில் வைத்து நிர்வகிப்பது ராஜதந்திர ரீதியில் இஸ்ரேலுக்குச் சிரமமானதொன்றாய் அமைந்தது. நீண்டதொரு கால இடைவெளியின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கைமைய தற்போது தாம் கைப்பற்றிய இப்பிரதேசங்களை மீண்டும் சம்பந்தப்பட்ட நாடுகளிடம் கையளிக்கும் நடவடிக்கைகளை இஸ்ரேலிய அரசு ஆரம்பித்துள்ளது.

அவ்வாறிருந்தபோதிலும், காஸாப் பகுதி அண்மைக் காலம்வரை பூரணமாக விடுவிக்கப்படவில்லை. காஸாப் பகுதியை விட்டுத் தற்போது இஸ்ரேலிய இராணுவம் வெளியேறி அப்பகுதியைப் பலஸ்தீன நிர்வாகத்திடம் கையளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதேவிதத்தில் மேற்குக் கரைப் பிரதேசத்தையும் மீண்டும் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கையளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்விதம் யுத்தத்தின் மூலம் கைப்பற்றப்பட்ட பிரதேசங்கள் சம்பந்தப்பட்ட தரப்புக்களிடம் மீண்டும் கையளிக்கப்படுவது சமாதான சக வாழ்க்கை நிலையை ஏற்படுத்தும் நோக்கிலேயேயாகும். இராணுவப் பலம் கொண்டிருந்தபோதிலும், சமாதான சகஜநிலை நிலவாத ஒருநாட்டில் சுமூகமான நிர்வாகத்தை மேற்கொள்வது சிரமமான செயற்பாடென்பதை இந்த வரலாற்று அனுபவங்கள் ஆட்சியாளர்களுக்கு உணர்த்தி நிற்கின்றன.

இது இன்றைய உலகின் யதார்த்தநிலை; பல்லாண்டு காலமாக இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளைத் தமது தாயகபூமியாகக் கொண்டு வாழ்ந்துவரும் தமிழ் மக்களை சிங்களப் பேரினவாத அரசுகள் தமது இராணுவப் பலத்தின் மூலம் அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தப் பிரயத்தனம் மேற்கொண்டுவருகின்றன. இருந்தபோதிலும், இராணுவப் பலத்தின் மூலம் சுதந்திர உணர்வுமிக்க தமிழ் மக்கள் வாழும் பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியுமேயன்றி, அங்கு அமைதியான சுமூகமான நிர்வாகத்தை முன்னெடுக்க இயலாதென்பதையும், நீண்ட காலத்துக்கு சுதந்திர உணர்வுமிக்க தனித்துவ சமூகமொன்றை அடக்கி ஒடுக்கி ஆளமுடியாது என்பதையும் இஸ்ரேல் நாட்டின் இந்த வரலாற்று நிகழ்வுகள் சிங்கள ஏகாதிபத்தியவாதிகளுக்கு எடுத்துக்காட்டி நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org